மணமகளிலாசம்

T.D. R C 3281
R.R No 165-4-1880

DIGITIZED

O-,2 MTM2,M
M79
116182

உ

கணபதி துணை.

# மன்மதவிலாசம்.

இஃது

வித்துவான்

## தாண்டவராயமுதலியார்

அவர்களால் செய்யப்பட்டது.

முன் பிரதிக்கிணங்க

பூவிருந்தவல்லி

## கந்தசாமிமுதலியாரால்

பார்வையிடப்பட்டு.


செங்கீர்குப்பம்

கன்னியப்பமுதலியார்

அவர்களது

கமலாலயவிலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

௧௮௭௯ ௵ ஜூன் ௴.

116782

O-,2MTM2, M
M79

உ

கடவுள் துணை.

# மன்மத விலாசம்

காப்பு

விநாயகர்தோத்திரம்.

விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

சீர்கொண்டசக்குசக்ர கோதண்டதண்டுவாள்
செங்கையேந்தும்
கார்கொண்டமேனியொளிர் திருமாலின்மனமிறுத்
களித்துவந்தோன்
வேர்கொண்டமலர்த்தோளான்மன்மதன்றன்சரிதைதனை
விலாசஞ்சொல்ல
ஏர்கொண்டபாவெளியாக்குஞ்சானற்பதத்தலையி
லிருத்துவாமால்

இதுவுமது-விருத்தம் இ-ம்-தோடி.

கண்ணன்முதலோர் துதிமானைக்
கையிலணிந்த பரஞ்சுடர்மும்
கண்ணன் வினையை யொழித்தானைக்
கருதற்கரிய நதிமகனும்
கண்ணன்சிலைதன் மகடூருமக்
காலைபவங்க டீர்த்திடுமெங்
கண்ணமலைதி ருயுமானைக்
கமலபதங்கள் தொழுதிடுவாம்

சுப்பிரமணியர் தோத்திரம்.

விருத்தம்-இ-ம்-காம்போதி-

இறுகிறெனச்சுழற்றென்றற் றேரிலேறிக்
தேமலிகொடிமகரப் படைகள்மாதர்
மறைபுரலுமதிக்குடைகள் குயில்கள்மேவி
மருவூகவருமனங்கன் சரிதைகூற
அறுமுகத்தோனீராறு கரத்தோன்வள்ளி
அமரர்பதிமகடூவையு மணிந்ததோளான்
திறமொளிருமயில்நடத்தி யென்னைக்காக்கும்
திமலகுகனடியைநெஞ்சி லிருத்திவேனே

சிவஸ்தோத்திரம்,

விருத்தம்-௧-ம்-கும்பகாம்போதி.

மாதவன்றன்வரத்தினிலுதித்ததிவ்ய
மாகதநன்மேனியொளிர் சித்தஜன்றன்
போதமிகுசரிதைதனைப் புகலவெந்தை
புனிதமுளம்பியினை பொழுந்தங்கதிருங்கொன்றைச்
சிதளமார்நதியெருக்கு அறுகும்பை
திருமாலுமுமுலங் காளம்வெய்ய
கோதிலாவெலும்புலி மாலைபூண்ட
கொற்றவனையென்மனத்திற் குடிகொண்டேனே.

விக்கினேஸ்தோத்திரம்,

பெருத்தசெளமியசயிலமாதவன்றன்
பெருந்தவத்தால்வந்தயிளம்பேதைமாது
காருத்தகுழன்மடவா ளிரதியின்றன்
கணவனிடர்தீர்த்திரத்தைக் கவித்துயாறு
திருத்தநாருக்கா யுடன்பட்டோனை
செழுமபதித்தேர் நாவிடிவருஞ் செங்கண்மாலை
வாருத்தமணிபூரக விட்டின்மேலாம்
வல்லபவிநாயகனை வழுத்துவேனே

பிரமன்முதலியதேவதைகள்வணக்கம்

விருத்தம்-௩-ம்-வசந்தபைரவி.

திருப்பவிற்றிண்டீமீநாள்வர்க் கணேசனைத்தி
யெழுநீற்பிறங்கவருந்தேகனைத் தண்ணெப்பாட்டு
திருக்கஞ்சமலரயனை மயன்றனைவிற்
றெளிவாகவிருந்தனையாடுமேவாணி
கருக்கள்றனிறைக்காணுங் கமலத்தாளுங்
கணக்குழற்றெய்வானை வள்ளி ககபாலி
பெருக்கமுடன்பரத்திருந்து காக்கவெந்தன்
பெருந்தேவிலக்ஷ்டயிலக்குமிகள் வாழ்வாம்

குருவணக்கம்

விருத்தம்-௪-ம்-கும்பகாம்போதி.

சகிநிறத்தோங்கட்டற்றயின்மேனுலைத்தாலே
சங்கையிலாதுடல்கழற்றோன் றனியிலாக
டசியுற்றவிலகையின்ற ஞாயிறையுங்கோன்



இசைமிகுத்ததாமீக நகரையாளு
மெழின்மதனன்சரிதைதனை யினிப்பாய்ச்சொல்ல
வசையகற்றகுருவினருள் மனத்திருத்தி
யலரடியைத்தொழுநிறைஞ்சி வழுத்தினேனே

அவையடக்கம்.

விருத்தம்-௫-ம்-ஆனந்தபைரவி,

வித்தைவளரிலக்கியநல் லிலக்கணங்கள்
விரிமறைகள்சோதிடங்கள் சோசியங்கள்
பத்தமழ்ஞானமுதற் கலைகளெல்லாம்
பழுதறவேயுற்றபெரி யோர்கள்முன்னே
அத்தமாமதிநிறைக் சுகன்றன்றந்த
வதிருபவிசித்திர வலங்கன்பாட்டு
சுத்தாஞ்சேர்முலையுண் ணும் பாலன்பாச்சி
சோச்சியெனச்சொல்ல பொருட்போற்செய்ன்னேனே

புராணவரலாறு-விருத்தம்-௬-ம்-தோடி,

அத்திரிகாசியன்முதல் முனிவோர்சொன்ன
அஷ்டமூன்றுபுராணத்தி லபூகில்மிக்க
வித்தகனும்வாமமுனி யுரைத்ததய்ய
விஷ்ணுபுராணமும் வேதங்கற்ற
சுத்தவக்குலமுனியால் விளைந்ததாகுஞ்
சுகமுளநல்லெழில்மிகுந்த மன்மதன்றன்
வெற்றிமிகுசரிதைவட மொழியைத்திவ்விய
விந்தைமொழிதென்மொழியால் விளம்பினேனே.

கதையின்வரலாறு.

விருத்தம்-௭-ம்-தோடி.

ஆரணத்தானெனுமிறைத்தோடிநின்ற
அருந்தவத்தினிலைகலைப்ப தாகவெள்ளை
வாரணத்தான்வாரணத்தான் மகனைக்கூவி
வனசமலரடிதொழுது விடுத்தழித்தான்
பூரணத்தான்மனங்கொதித்து விழிநெருப்பாற்
போக்கிலுன்பதனெரித்தால் ரதியாள்முன்பு
காரணத்தலையனிடம் வந்துமுதாள்குலந்
கலைவாத்தாலமனெழுந்த கதையிதாமால்

## தோடயம்.

அலைகடற்றுயின்றவன் மனதிருல்வரு
மழகினில்மிகுந்த வனக்கன்சரிதையின்
விலையிலாநவரச மொழுகுங்காதையை
விலாசமதுசொலவே — செயசெய

மலகலைசுருதிசொல் முடிவைதேடோதாகள்
பழுத்தவமென் வெளியிலொளிசெய்யும்
வல்லவதிவிலா தமியனுளமுற
வடியிணையள் நினையே — செயசெய

குழைமலர்க்கனை யெயினிலேந்திய
குலமிசியுறபுவிதனிலெலாம்வென்ற
விழைபலவனரிலதோளன் மதவன்றன்
விலாசமது சொலவே — செயசெய

தழைமலரிலைமலை அயில்வேலேந்தியே
தலையணைவிணைப்பூ காமுறக்கத்தருள்
மழைநிறமுறவன் மருமகனுமயன்
மலரடிகள் துணையே — செயசெய

### மங்களம்.

ஓரடி-தரு-இ-ம-பர்ருவராளி மிசிரதாளம்

#### பல்லவி.

மங்களம் ஜெய-மங்களம்.

மருவலர்த்தமலர்தேயிலைசந்தகலைதரை
பெரிதத்தகழையினை குழைச்சதனுசென
மகிழ்ந்தமதோடர்-விரித்தருவடிபடி-
இடர்த்தபோதுளதளித்தறவிழுந்தவருதிற
தென்றல்தேரில்வமார்போதர்தொழும்
அம்பட்டீசன்பெற மெண்டிசைமுதலாய்
அவனிமுழுதுமொரு நொடியில்வெலுபவனேரிலை
கலந்திலமிருமதனுயிரதிக்கெழில் — (மங்களம்

#### அநுபல்லவி.

எங்கும்நிறைபொருளா யெவ்வுயிர்க்குமிராகி
யென்னுளிருந்தெந்நாளுமிலகுந்சுகதரமான
இசைபாடுவேர்வாய்க்குழானையநும்
அசையாதமரர் அரியாதெளியா
விதுவலாதகதி யிலேதபாகட
யநுவலாதுதிமிலாநுகந்தெழில் — (மங்களம்



#### சரணங்கள்.

என்குருநாதனுக்குமிளைப்பருவத்தெனை-யாட்கொளவந்த
உளமெய்ப்பொருளைக்கனிவாயுணர்ந்த — (என்குரு)
எத்தியமைழக்கும்பெண்ணுசைகள்மலி
சித்தமகிழ்க்குமண்ணுசைகள்பல
சுத்தப்பெருக்கும்பொன்னுசைகளினை
குத்திணாத்தியேகொண்டாடியேவரு — (என்குரு)
இனிதுவத்துமனமகிழ்ந்துவருமென்
றனைகடிந்துமறைபுகழ்ந்தநிறைதவள
தனில்மிகுந்துபொருளறிந்துபிறவிநன்
வினைகழிந்துமாயை யொழித்தவருள்பெற
என்குருநாதனுக்குமெற்றைதிவமாலுக்கும்
இணையில்மலரோனுக்குமிலகுங்கரிமுகர்க்கும்
வதமற்றநால்வேதமுறைய
தோகைமஞ்ஞையில்-மேகம்போற்குழல்
எத்தனைத்தந்திடு பைங்கொடிசுந்தர
வித்தைவளர்த்தமருங்குலசைந்திட
சந்திரபிம்பமுகங்களலர்ந்திட
கொர்தமணிர்தஸ்தனங்கள் நெருங்கிட
இமையாய்வானவர்பூபதிமாமகளும்
அமைகானகமாமகளுர்வுயிலாவ
இருபாகமுமாய் வரவேக்கயினில்
அயில்வேலிலகுமடியார்க்கருளே
இனிதுடனியதற்கொருநொடியினி
லொப்பறவருமுருகனுக்கும்
இந்திரன்முதலர்தார்கலையவ
னிந்திராகண-சுந்தரநிரமவள்
இடமதானவானசிதிர்மதியுரு
நடமதாலபாதலயொளிருளசதி
இசபாநிறைமறையலைசருதிநிற
சுகமுறதிருமுனிவர்களடிக்கெழில் — (மங்களம்)

#### பொது-விருத்தம்.

தங்கமார்மணியிழைத்த தூயமாமுடிதரித்து
அங்குசபாசங்கையிலழகுடன் கொண்டுவிண்மண்
எங்கணும்துதித்துப்போற்று மெர்தையாமூலாதார
ஐங்கரருளங்களித்து வருள்தரவருகின்றாரே

விநாயகர் வருகிற-தோடி-தரு-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்

பல்லவி.

செல்வவிநாயகர்வந்தார்-இதோ
செல்வவிநாயகர்வந்தார்

அநுபல்லவி.

பல்வகைக்கவிபோயிப்பாயசத்தாநும்முன்டு
யாங்களவேகளித்தேப்பயிட்டும்பொருட்டு (செல்வ)

சரணங்கள்.

யுக்திவித்தைகளைச்சித்தங்களித்தருள்வோர் உலகில்ஞானப்
போதமென்பதைக்காதலுடன்கொடுப்போர் முப்பத்திரண்டறம்
வைத்துவளர்த்திடுஞ்சத்தியளித்தபாலர் யோகநிஷ்டையை
முற்றுங்காகண்டறிந்தரிடத்தில்வாழ்ந்தலர் பாசபந்தம்விடும்
அத்துவிதத்தினையளிக்குமெய்யர்
அண்டசராசரத்துக்குத்தய்யர்
அத்திவன்னனென்றித்தைமகிழ
வந்துதித்திடுஞ்சுத்தபாலர்
அருளுறுக்கழல் சதங்கைகொஞ்சிட
தெருளுறுமடியார்கள்கெஞ்சிட (செல்வ)

கட்டியக்காரன்-வருகிற-பொருவிருத்தம்.

அட்டகஜத்தினை யெட்டியெடுத்துப்பந்
தாடும்வல்லவர்கள்
வொட்டியுலுத்தனை குத்தியறுத்திடு
கூரியவாள்வீரர்
தட்டியிறுக்கிமுறுக்கியமீசையைத்
தாவியவிருதையெலாங்
கட்டிகுதித்துநகைத்திதோ
கட்டியக்காரனும்வந்தானே

கட்டியக்காரன்-வருகிற-தோடி-தரு
இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்

பல்லவி.

கெட்டிக்கட்டியக்காரன்வந்தான்-இதோ
கெட்டிக்கட்டியக்காரன்வந்தான்-ஐய
கெசிதவற்புத விசிதபற்பல
புசிதநற்பத வுசிதவுத்தம
சருவினிழலிலுறையுமரியிட
அரியகொலுவலங்கிர்தமதுசெய்ய (கெட்டிக்கட்டி)



அநுபல்லவி.

அஷ்டதிக்கினுமுள்ள அமரர்முனிவரெல்லாம் *
அடிபணியுமிந்திரனணி வாசலதுகாக்கும் *
ஆலகாலர்மெய்ய சிலபாலர்செய்ய *
வாலமாதர்மையல்லான கொலுவில்துய்ய *

[சரணங்கள்]

கையித்தேட்டயங்கள்கத்தியிலங்க - இதனைக் *
கண்டுமாற்றலர்கள் விலங்க *
மெய்யிற்பணிகளது குலுங்க - தலையில் *
மின்னுங்குச்சுக்கொண்டை துலங்க *
வெய்யமீசைமுறுக்கி வெருட்டிவிழியுருட்டினனி *
துய்யசபைகலங்க சுருக்காகவேயுருக்கி - பல *
சுத்தவீரர்களே சூழ்ந்திருந்தானிருங்கள் *
வித்தைவாரணர்களே வெற்றிகூறுங்கள் *
சித்தமின்னரே சுத்தித்தானிருங்கள் *
முத்துமண்டபத்தை யுற்றுப்பார்த்திருங்கள் *
குருக்கற்றவர் ஞானக்கள்ளரைக் *
காதலுந்துமெய்ஞ் ஞானவித்வஜெய *
துங்கமுனிவரோ செங்கையமரரோ *
எங்கள்மகபதி யிங்கேவருகிற *
சமயமிதுவொரு நிலைமையில்வருவீர் *
மலைதனில்பயமுட னிருமிருமென
தங்குஞ்சிங்கக்குட்டி எங்குந்தங்கக்கட்டி (கெட்டி)

சிவன் வருகிற-பொருவிருத்தம்,

பிரமமெனும்பரவெளியிற்சுடருண்டாகிப் *
பிறந்தசுடரிரண்டுசிவசிவரண்டுந் *
தருமமென்னுஞ்சிவனென்னும்விஷ்ணுவென்றுந் *
தயங்கியமாசித்தொழிலுங்காணுவ்பேசி *
கருமகலைதெய்வபொருளதான *
கர்த்தவியதந்தைகண்டெக்கண்டென்ஞானும் *
மருவகதிபாத்தொழிலைப்போலவேவேண்டி *
மனதுவந்தான்சிவஞ்சென்டயனுவன்வந்தானே. *

கட்டியக்காரன்சொல் வசனம்.

அகோதெப்படியென்றால், வெள்ளியங்கிரியில் கைலாசவாசக ஐய சிவனவர் பிரம்மத்வத நீக்கத் தவஞ்செய்ய வேண்டித் தயணயவளாகிய உமையவளுடனே வருகிறவிதங்காண்க.

சிவன்-வருகிற-தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

சனகன்முதல்முனிவரமரருலகோர்தொழும்
சாம்பசிவன்வந்தார்-தபஞ்செய்ய - சாம்பசிவன்வந்தார்

அநுபல்லவி.

தினகரன்சசிகொன்றை திகழ்தும்பையருகோடு
தினமுஞ்சூடியபோதன் - மனதுறுவாயுந்தன் (சனகன்)

[சரணங்கள்.]

கையினில்மானுமழுவுஞ் சதுர்புஜ
காளகண்டதிரிநேத்திரமு மிலங்க
மெய்யெங்கும்விபூதி ருத்ராக்ஷமுந்துலங்க
விரித்தசெஞ்சடைமுடிதன் பெருத்தபாம்பணிதரித்தன்
விசயதிரிபுர சங்காரதீர
பசுபதியெனுநுதல் விழியிற்பொடிசெய்த
இமையமால்வரை தருமிளையகொடியினை
இசையுமிடப்பாகந்தனில வைத்தபுனிதன்
அணையுஞ்சுந்தரமுக சாகப்பாவையிடம்
அரட்டியெமனுயிர்விழ வுதைத்தபாதம்நோக
அதிசவிசுவட ஜெடியதனித்சென்று
மதியாதா ய பதியேபேசிய (சனகன்)
தலையுமெலும்புமணிந்தோடமேகந்தரித்தோன்
தலைவடிவன்மதகரியைப் படவுரித்தோன்
மலையவளைத்தனவெள்ளி மலைநிற்குடியிருப்போன்
மனதுக்கெட்டாப்பொருளின் வடிவைக்காணவென்று
மனையினவள்பணி விடைகள்செய்ய
வினைகள்பொடிபடு மரியதவஞ்செய்ய (சனகன்)

சிவன்-உமையவளுக்குச்சொல் விருத்தம்.

இமையவான்பெற்றெடுத்த யிளங்கொடிப்பெண்ணேகேளாய்
சமையுமிக்கயிலைதன்னி லியலினை நோக்கிடுக்க
இமையுமுன்றபஞ்செய்ய நினைத்திட்டேனருகில்நின்று
சமையபணிவிடைகளெல்லாஞ் சமைத்துநீயிருந்திடாயே.

வசனம்.

ஆ-ஆ-என்பிராணபதமாகிய உமையவளே - என துதந்தையாகிய பிரமத்தைநோக்கித் தவஞ்செய்ய நினைத்தேன் ஆகையால் தவத்திற்குவேண்டிய சிசுவிடைகள் செய்துகொண்டு பத்திரமா யிரும்பெண்ணே.

உமையவள்-சிவனுக்குச்சொல்-விருத்தம்.

மூவர்கள்முதல்வா போற்றி மூலத்தின்பொருளேபோற்றி
தேவர்கள்முதல்வாபோற்றித் தேவநாயகனேபோற்றி.



மேவுமுன்றபத்திற்கேற்ற வேண்டுநற்பணிகளெல்லாம்
ஆவலாயருகில்நின்று அனுதினஞ்செய்வேன்சுவாமி.

வசனம்.

ஆ - ஆ - என்பிராணபதமாகிய கர்த்தியமே - அப்படியே உம்முடைய தவத்திற்கு வேண்டிய பணிவிடைகள் செய்துகொண்டு பத்திரமாயிருக்கிறேன் சுவாமி,

சிவன்சொல்-தோத்திரம்-கொச்சகம்.

மனவாக்குக்கெட்டாமநோலயமாம்நற்றவெளி
தினவாக்குமுத்தரிவில் நின்றிலகுந்தற்பரனே
வினைப்போக்குமாமமுதே வெள்ளமெனுஞ்சுகமே
எனக்காகத்தவத்திற் கிரங்கிவந்தாட்கொள்வாயே.

வசனம்.

மனதுக்கும் வாக்குக்கு மெட்டாத ஆனந்தமயமாகிய வெளியை மனத்தி லிருத்தும்படியாகிய மகாத்துமாக்களது இருதயத்திற்குடியாயிருக்கும் பரப்பிரமமே நான் செய்யுந்தவத்திற்கு இரங்கிவந்து வென்னையாட்கொள்ளவேணுங் கர்த்தியமே.

சிவன்-தபஞ்செய்யும்-ஆனந்தக்களிப்பு.

இராகம்-நாதநாமக்கிரியை.

பல்லவி,

சைதன்யவஸ்துவேவாராய் எந்தன்
தவத்திற்கிரங்கிநித்தமுத்திதாராய் (சைதன்ய)

அநுபல்லவி.

மெய்தன்னிலண்டாதருவே எக்கும்
மெய்யாய்நின்றமும் ஞானகுருவே.

[சரணங்கள்.]

அங்கியஞானதைக்கண்டு பால
மனதிலேதிவினையாடியேசனாத
மோங்குமானந்தத்தில்நின்று-நிதம்
பூசித்தோர்கண்டருள்ஞானகுருவே (சைதன்ய)
மதியுங்கதிரையுக்கண்டுளி
மண்டலமுண்டலதவிண்டெழிற்பண்டு
பதியுமமுதிணையுண்டுநாளும்
பழுதிலோர்தொழுதிடும்ஞானகுருவே (சைதன்ய)

பொது-தரு-இ-ம்-ஆனந்தபைரவி-திரிபுடைதாளம்.

பல்லவி.

திருவிசுவப்சமாதிநிட்டைதனியில்
நின்றுதவத்திருந்தாரே
நித்யவரித்தியமனத்தைதயடக்கியே (திருவி)

அநுபல்லவி.

கருவிற்பொல்லாவைப்பட்டலகள்ளர் தம்மைப்பிடித்த
கனகேசரத்தில்லைவைத் தடிஞ லமுந்தினாதைத்து
சுத்தகயோ னிபிலிக்குநெருத்திரன் (திருவி)

[சரணங்கள்.]

அறநிலைகடந்து லடங்கிமண்டலம்விட்டு
அருமையுடன்தாண்டி
விமாயபுர்தாண்டியர்பிணிபிடைத்தவண்டி
விந்தைசபிமுத்திரிப்புத்திநிலைத்துதன்
முத்தியென்தகருவியரைகருத்துமே (திருவி)
அயாணுமெகறாரலையிலேமாயமெனும்பாழ்வையும்
திருஷ்ணன்றூர்ஏட்டி
இயானதினைவைப்பத்திரிட்டிட்டக்கிட்டியேதெத்தி
செழுமியிருந்திடு மாழியினைத்தரு
பாமுமினைக்கரு சமயிடத்தினில் (திருவி)
சடவைத்தவத்தைமுதல் கனத்தவட்டாங்கயோகம்
கட்டிடவெளியேறி
படிபாகப்பாலைப்பருகிப்பேரின்பமிட்டித்
பத்தருளத்தினில் நித்தமுருக்குநற்
சத்தபரப்பிரம வஸ்துவதிர்கிட (திருவி)

பொது விருத்தம்.

வித்தைகுருமன்செய்திற் நற்றவத்தாற்றய்ய
வெண்ணிறார்போய்ச்சதிறமாய்விளங்குமாலே
அத்திவன்னகல்வெள்ளி விருப்பின்மீதுவக்ர
கோரதவஞ்செய்திடும்போதழகிமிக்க
கொத்தளவயிரமணியோடுத்தங்கள்
குருமுனிநாரதரோடுத்தேவர்சூழ
வைத்தருளினிழலின்மீதசுசெய்யப்
பதிவந்தானிந்திரபூபதிவந்தானே.

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அகோதெப்பாடியென்றால் பரமசிவருளவர் வெள்ளியங்கிரியி[ல்] தபஞ்செய்யப்போது தெய்வலோகத்திலிருந்து தேவேந்திரன் தெ[ரி]சிவுக்குவருகிற விதங்காண்க.

தேவேந்திரன்வருகிற தரு-இ-ம் கல்யாணி ஆதிதாளம்.

பல்லவி.

தேவர்முனிவர்க்கெல்லாந்தேவனிவனென்றேறந்
தேவேந்திரராஜன்வந்தான் கொலுவிருக்க.
தேவேந்திரராஜன்வந்தான்



அநுபல்லவி.

பாகலர்சுரர்முதற்பணியும்பிரகஸ்பதி
பாகவனும்நாரதனும்பைக்கிளியபிராணி
பக்கமிலேவர அடிக்கடி
மெய்க்கினிலேபட்டவே முகிலச்சுவ
டற்புதமெனவெழில் மெய்ப்புளகிடவரு
கற்பனைமுதற்கட்டுத்தொப்பனையிணையிலா (தேவர்)

சரணங்கள்.

கோலமணியிழைத்த குலவுமுடிதரித்து
கோகிலாடிஜக்கரித்தி குலக்கரும்புயமியைத்தி
சாலவொளிமிகுந்த தங்கக்குழைபதித்து
தாளமணிமுதலாம்பணிகள்மிகத்திருத்தி
தங்கமிலேமுனிவோர் விருந்திடு
மங்களமேமுதலா மொழிந்திட
தத்திடமுடிதனைக்குத்தியேதிருதளை
எத்திடுமிகவலி மெய்த்தியிலுயர்திரு (தேவர்)
தளதளவெனவச்ரவாளுங்கரமிலங்க
தருவர்முதர்பகைவரிதனைக்கலங்கிவிலக்க
பளபளனுமுடைவாளிடையதனிற்றுலங்க
பதத்திலொளிவிசியசுதிர்க்கழல்குலுங்க
பத்தினிலத்தினிலே நெருங்கியே
சித்தர்வித்யாதரர்தம்முடிப்பொடி
பட்டுமிமணிவெலாத்திட்டெனத்திரியவே
கட்டியமெதிர்பதம்போட்டெனப்பணியவே (தேவர்)
தாளக்குடைபிடிக்கத் தனிசாமரையசைக்கத்
தண்ணமலரிறைக்கச் சுண்ணப்பொடிதெறிக்க
பரவுங்கொடிபறக்கப் பாதமுரசடிக்கப்
பம்பைதம்பூருவீணை பல்லியங்கள்முழங்கப்
பச்சைக்கிளிசொலின்றூர் படித்திசை
இச்சைநடம்புரிவார் வளமிகு
வைர்தருவொளிசிகு விந்தையிலிழலதில்
கத்தாரவமிகு முத்தியகொலுவினில் (தேவர்)

தேவேந்திரன்சொல் கடவுள்துதி-விருத்தம்.

காரணப்பொருளேபோற்றி கார்முகிலருளேபோற்றி
வாரணக்கையாபோற்றி வைகுந்தபதியேபோற்றி
நாரணப்பெயராய்போற்றி நம்பினர்க்கருளேபோற்றி
பூரணவமுதேயுத்தன் பொன்னடிபோற்றிபோற்றி

தேவேந்திரன்-பிரகஸ்பதிக்குச்சொல்-போற்றிவிருத்தம்.

பாரெலாம்புகழும்வேத பாரகாபோற்றிபோற்றி
காரெலாம்தருஞானந்திகழ்கலைசெல்முனிவபோற்றி
சீரெலாம்படைத்தவிண்ணோர் தேசிகாகுருவேபோற்றி
பேரெலாம்சிறந்தாய்போற்றி பிரகஸ்பதிகுருவேபோற்றி

பிரகஸ்பதி தேவேந்திரனுக்குச்சொல்-வாழிவிருத்தம்.

திருவருள்செங்கோல்வாழி தேவர்கள்வாழிவாழி
கருமறைமுனிவர்வாழி மாதர்வாழ்ம்பதமும்வாழி
மருவுவெள்ளானைவாழி மாயவிந்திராணிவாழி
தருநிழலமர்ந்தயிந்திர நாயகன்வாழிவாழி

தேவேந்திரன்-நாரதருக்குச்சொல்-போற்றிவிருத்தம்.

நீதியாயிருந்தாய்போற்றி நீள்சடைமுடியாய்போற்றி
வேதத்தின்பொருளுணர்ந்த மெய்த்தவமுனிவனேபோற்றி
சாத்திரமறைகளாய்ந்த தவமுனிமன்னனேபோற்றி
நாற்றிசைகீர்த்திபெற்ற நாரதமுனியேபோற்றி

நாரதர்-தேவேந்திரனுக்குச்சொல்-வாழிவிருத்தம்.

தேவர்களரசேவாழி தேவருக்கரசேவாழி
மூவருமுள்ளோர்போற்ற முனிவருக்கினியவாழி
தாவுகற்பகநிழற்கீழ் நல்லரசாள்வோனேவாழி
பாவையிந்திராணியோடும் பாகசாதனனேவாழி

தேவர்கள்-தேவேந்திரனுக்குச்சொல்-போற்றிவிருத்தம்.

கற்பகநிழலின்மேவு மமர்ந்திடுமிந்திராணி
வித்தகமாகப்புகழாளும் விளங்கிடுமெவ்வாச
சித்தமிக்கவர்க்கலோகம் யாவையுமாள்கின்றோனும்
இத்தரையேத்திராவுந்த வினையடிபோற்றிபோற்றி

இதுவும்-தேவர்கள்சொல்-விருத்தம்.

சோதிசேர்முடிபுனைந்த சோதியேபொன்னுலகத்தன்னை
நீதியாயரசியற்றி நெடுமைக்கேள்விசெய்யும்
மாதவத்தோர்களுக்கோர் வருத்தமில்லாமற்காக்கும்
சாதகயிந்திரனாச நாயகதிருந்தாட்போற்றி

இந்திராணி-தேவேந்திரனுக்குச்சொல்-விருத்தம்.

மன்னிடுமெம்பிரானை நாதாவென்னையினைத்திலேதோ
பொன்னுலகிர்மேனியெல்லாம் புழுங்குதுவெப்பமின்றி



மன்னுபூந்தருவேயக்கினி வாடையைவீசுதால்
இன்னதென்றனைநன்றாக யெனக்கிப்போதுரைசெய்வீரே

வசனம்.

ஆ-ஆ-என்பிராணநாதா இதென்ன ஆச்சரியம் இன்றையதினத்தில் என்தேகமானது புழுங்கி வெந்துப்போகுது பஞ்சகற்பகத்தருக்களும் அக்கினிக்காற்றை வீசுகின்றதை நன்றாயறிந்து எனக்குச் சொல்லவேணும் என்பிராணநாதா.

இந்திரன்-சபையிலுள்ளோர்க்குச்சொல்-விருத்தம்.

பெருந்தவகுருவேபோற்றி பெருங்கீர்த்திமுனியேபோற்றி
இருந்திடும்ரிஷிகளோநல் லிமையவர்தேவர்களேகேளீர்
சொரிந்திடும்மழைவெல்லாம் குறைந்திடத்தருநிழற்கீழ்
விரிந்தபொன்னுலகிவ்வெப்பமேதுரைசெய்வீரே

வசனம்.

எனதுகுருவாகிய பிரகஸ்பதி பகவானே சரணம் நாரதமகாமுனிவரே சரணம் இன்னமற்றுமுண்டாகிய தேவர்களே முனிவர்களே கருடகாந்தருவ சித்த வித்தியாதரர்களே இந்த தெய்வலோகத்தில் இன்றையத்தினம் இப்பேர்ப்பட்ட அக்கினிவாடை வீசுகின்றது இது என்னகாரணத்தினாலே எனக்குத் தெரியச்சொல்லுங்கள் சபையோர்களே.

தேவர்கள்-இந்திரனுக்குச்சொல்-விருத்தம்.

தேவபூபதியேபோற்றி திகழ்கின்றகைலையதனில்
ஆலவாய்ருத்ரமூர்த்தி அகோரதவஞ்செய்கின்றார்
மேவியகண்விழித்து மேதினியெல்லாஞ்சுட்டு
தாவியிந்நுலகமெல்லாந் தகிக்குதுவென்னசெய்வோம்.

வசனம்.

கேளுமையா தேவேந்திர மகாராசனே வெள்ளியங்கிரியில் ருத்திரமூர்த்தி தவஞ்செய்கின்றாரவருடைய தவத்திலெழுந்த வக்கினிச்சுவாலையானது இந்தப்பூமி யாத்தியந்தமுஞ்சுட்டுப் பொன்னுலகமெல்லாந் தகிக்கிறது இதற்கென்னசெய்யலாம் தேவேந்திர மகாராசனே.

இந்திரன்-சபையோர்களுக்குச்சொல்-விருத்தம்.

இணையிலாப்புயந்தான்செய்யு மொழித்தவமழிக்கவேண்டி
கணைமலர்மதனுங்கரும் காரிருள்மேகமின்னல்
அணையில்செந்நியுமாத நவையினிவென்றைவிடுப்போம்
கண்தநேரதிந்துமெந்தன் கருத்தினுக்கிசையச்செய்வீர்

வசனம்.

கேளுங்கள் இந்த தெய்வசபையோரே பரமசிவன்தவத்தை யழிக்கும் பொருட்டாய் மன்மதனை விடுப்போமா மேகத்தை விடுப்

போமா மின்னலென்னை விடுப்போமா மடவார்க்கினிய விடுப்போமா அரம்பமாஸ்திரீகளை விடுப்போமா இன்னது சொல்லும்படியாகிய அதில் எதனை விடுப்போம் காலசுபாவங்களறிந்து முன்பின் ஆலோசனைசெய்து சொல்லுங்கள் சபையோர்களே,

நாரதர்-இந்திரனுக்குச்சொல்-விருத்தம்.

கொண்டல்களாலுந் தூய்ய கும்பநன்முனியாராலும்
மண்டியயிடிகளாலும் மடவிச்செந்தீயினாலும்
சண்டமாருதத்தினாலுஞ் சாவினைசெயமாட்டார்
புண்டரீகன்றன் றந்த புதல்வனுல்லெல்லமே.

வசனம்.

கேளு தேவேந்திரமகாராசனே மேகங்களாலும் ஸ்திரீகளாலும் இடிகளாலும் நெருப்பினாலும் காற்றினாலும் இன்னம் மற்றுமுள்ள விதங்களாலும் அவனை வெல்லக்கூடாது விஷ்ணு புத்திரனாகிய மன்மதராசனாலே ஈஸ்வரனுடைய தவத்தை வெல்லலாந் தேவேந்திர மகாராசனே.

பிரகஸ்பதி-தேவேந்திரனுக்குச்சொல்-விருத்தம்.

தகுமிகமெய்தான்முன்பு தவசிவக்குவன்றனால்
புகலுநாளடுத்ததாலும் புவுடைவாவிம்மீது
சுகமுடன்படுத்தபெங்கள் தீனைபுமாலோன்றந்த
மகனவனைத்தாது மதனலேயாகுஞ்செய்வீர்

வசனம்.

தருந்தரும் மெய்மெய்யே ஆதியிலே வச்சிரவமகாமுனி யானவர் சிவனுடைய தவம் மன்மதனாலே அழிந்துபோகும் படியாய்ச் சாபங்கொடுத்திருக்கிறார் இன்னஞ் சில [illegible] முனிவர் அந்த நாள்வந்து கிட்டிக்கொண்ட படியினாலேயும் விஷ்ணு [illegible] பாணத்தினாலேயும் மன்மதனாலே ஈஸ்வரனுடைய தவத்தை யழிக்கலாந் தேவேந்திர மகாராசனே,

இந்திரன் தேவர்களுக்குச்சொல்-விருத்தம்.

கதிமிகுதேவரோநீர் கதிரொளிபருதியெய்க்கும்
பதியினிலுயர்ந்ததிவ்ய பாரதார்மீகங்காக்கும்
விதியவனுடன்பிறந்தோன் விண்ணவர்தொழுமுத்தண்டன்
மதிமிகுவேளிராச மன்னனையழைத்துவாரீர்

வசனம்.

மகாவேகத்தோடுங் கூடிய நடையில் மிகுந்த தேவர்களே வாருங்கள் நீங்கள் சீக்கிரமாய் தார்மீகநகரத்திற்குப்போய் இந்த வுலகமெல்லாஞ் சிருஷ்டித்த பிரமாவுக்குத் தம்பியாகிய மன்மதராசனைக்கண்டு என்னுடைய காரணஞ்சொல்லித் தேவர்கள் படும்பாடு



யாகிய அவஸ்தைகளையுஞ்சொல்லி எந்தவிதமாகிலும் மன்மதராசனை யழைத்து வாருங்கள் தேவர்களே

தேவர்கள் இந்திரனுக்குச்சொல்- விருத்தம்

பொன்னுலகதனையாளும் புரந்தரபதியேநாங்கள்
மன்றுமாமணிகள்மின்னும் வைகுந்தநகராய்ச்சொல்லும்
தன்னிகரில்லாத்தூய்ய தார்மீகநகராயாளும்
மன்னவன்றன்னைக்கூட்டி வருகுவோம்வருகுவோமே

வசனம்.

தங்களுடைய வுத்தாரப்படிக்கு அப்படியேபோய் மன்மதராஜனை யழைத்துக்கொண்டு வருகிறோமையா தேவேந்திரமகாராசனே.

மன்மதன்-கொலுவுக்குவருகிற-பொது-சந்தவிருத்தம்.

மந்தரமெனவிருசுந்தரவிணைபுய மகபதியுனைகொண்டு [தில்
கொந்தலர்மணிமுடி விந்தைபொடமாதர்கள் குணமுடன் தரும்போ.
தந்துமயினமுகுளதார்குழல்ரதியொடு தார்மீகநகராள்வோன்
நந்தன்மகன்றாவந்திடுமன்மத ராசனும்வந்தானே

மன்மதன்-வருகிற-ஓரடி-தரு-இ-ம்-மத்தியமாவதி-ஆதிதாளம்

பல்லவி,

மாசில்லாதவதி ரூபவிச்சித்ரதிவ்விய
மன்மதராசன்வந்தான்-கொலுவிருக்க
மன்மதன்ராசன்வந்தான்
மணிகதிக்குங்குண நிதிக்குமிவனெனு (மன்மத)

அநுபல்லவி

தேகலாவுமுனிதுகேசவனருள்சேயன்
வாசவன்முதலெட்டு போஜர்பணியுந்தேயன்
வசையற்றெழிலுள தார்மீகநகர்பதி
இசைபெற்றிடுநல வுலகெலாமிகநிதி (மாசி)

சரணங்கள்,

சிவசஞ்செய்பாலுவெனவொளிமிகுசிரசினில்
திசமும்பொன்முடிதரித்து
இருகடற்களுமுறைந்தவனுண்மிமி
றிருக்குநற்புாமுலகினிற்கடருமிழ (சிவசஞ்)
எட்டுத்திசையானைகள் மருட்டும்புயமதிற்புஜகீர்த்தி
திடமாகவேதொடுத்து
திகழ்ந்துவந்தரத்தொளிமிகுமீனினை
யிகழ்ந்துநிரித்துபடர்மலரிபுகர்முக (சிவசஞ்)

கவசமெய்யிலணிந்து கையிற்செங்கரும்பேந்தி
காமாயுதவிழியரிவையர்படை
தேமாகமுலைகவரிகள்வீசத்
தங்கடிருக்களிர் ஆங்கைனிப்பரி
கொங்குவளித்திர தங்களொளிச்சுடர்
திகள்குடைப்புனல் பொங்குகடன்முர
சங்கள்குயிற்காள மெக்குமுழங்கிட
இசைபாவதனு ரியபூவியவர
சனையாரிளமா முலையாளிரதி
திருமாமயில் போல்வரவே
இடையிற்படைகே தகைவாளிலகமாழவிற்
செம்பொன்மணித்திரளே அழுத்திய
உம்பர்பொடிப்பொடியாய் பொடிப்பட
அம்புநெருங்கிடவீ ழடிப்பதம்
வெம்பினிச்சுவடே யெழும்பிட
குத்தமிருத்த வுலுந்தர்பயப்பட
எத்தியுயர்த்த பிடித்தமினக்கொடி
முத்துதனத்த மொழிச்சிநடங்கொள
வெற்றிபலத்தை மிகுத்துபிடித்திட
விலையிலாதவள விலாதமணியொளிர்
குறைவிலாதகுறை விலாதமொலுவினில் (மாறில்லாத)

முதல்-கட்டியன்-கட்டியங்கூறல்.

பார்க்கடலின்மீ துவடபாலிலையில்நித்திரைசெ
 பச்சைமாலின்புத்திரன்
பவழியிதமெனுமிலக்குமிமணங்களிக்கதிழு
 பாலனுயியவிச்சித்திரன்
தீர்க்கசௌமியசங்கமாமுனிதவர்தில்வரு
 திருயிரதிமகிழ்மருளன்
திகழுமுடியமரர்முதல் சித்தவித்தியாதரர்
 திருக்கழற்பணிவொருவன்
நாற்கலைகள்புகழ்கின்றநாமகளணைந்திடும்
 நாதனுடனேபிறந்தோன்
நற்றவஞ்செய்தநற்சரிதாயபொருளெலாம்
 நல்மாசவேசவர்த்தோன்
மார்க்கமுளவென்றத்தைகசுப்பிரமணியன்திரு
 மனதுக்கிசைந்தநேசன்
மாதர்மிகசுண்டுருகும்வடிவினிலுயர்த்ததிரு
 மன்மதராசராசன்



இரண்டாவது-கட்டியன்-கட்டியங்கூறல்.

முல்லையசோகுமுழுநிலதிங்குநம்முளரி
 முன்கணைகொண்டவீரன்
முத்துசெங்கரும்பெனும்வில்லெடுத்துலகெலாம்
 முழுமையுட்வென்றசூரன்
நல்லமல்லிகைமலர்மீதில்வாழ்வண்டுகணை
 நாணாகக்கொண்டநாளன்
நற்கிளிக்குதிரையிருளாமபெண்கள்சேனை
 நடத்தென்றல்தேர்வலாளன்
வல்லவர்தரமேவுதிங்களம்பொடைகொண்ட
 வல்லிலாகுணவுபாயன்
வரிசைபெறுமமகரமச்சக்கொடியுயர்த்திடும்
 வலுமையில்மிகுந்தநாயகன்
மெல்லமாதர்மலர்களுணுமடையமெலவந்தவரை
 மாதிலாக்காக்குங்போசகன்
மாதர்மிககண்டுருகும்வடிவினிலுயர்த்ததிரு
 மன்மதராஜராஜன்

மன்மதன்சொல்-போற்றிவிருத்தம்.

தன்னிகரில்லாத்திவ்விய தயாளரட்சகனேபோற்றி
வன்னபாற்கடலின்மீது வாழ்ந்திடுபவனேபோற்றி
பன்னகப்பாயல்மீது பள்ளிகொண்டவனேபோற்றி
என்னையீன்றவயேயுந்த லீலையடிபோற்றிபோற்றி

முதல்மந்திரி மன்மதனுக்குச்சொல் போற்றிவிருத்தம்.

தேவர்கள்தேவேபோற்றி இன்புயவீராபோற்றி
மூவர்கள்புகழுந்திவ்விய முகுந்தனன்மகனேபோற்றி
ஆவலாபிரதிக்கேற்ற அழகினில்மிகுத்தாய்போற்றி
காவலாயுலகங்காக்குங் கர்த்தனேபோற்றிபோற்றி

இரண்டாவது-மந்திரி-மன்மதனுக்குச்சொல்-போற்றிவிருத்த

எண்டிசைக்கொருநிகரில்லா திருந்துகாப்பவனேபோற்றி
புண்டரீகன்முன்றந்தப் புதல்வனுனவனேபோற்றி
பண்டுசெங்கமழவில்லேந்தும் பங்கயக்கையாபோற்றி
மண்டலத்துதிக்குமெங்கள் மன்மதபதியேபோற்றி

கட்டியக்காரன்-மன்மதனுக்குச்சொல்-போற்றிவிருத்தம்.

தென்னலந்தேராய்போற்றி திங்களாங்குடையாய்போற்றி
கன்னலுறுமகனேபோற்றி கருவண்டுநாணாய்போற்றி
புண்ணியப்பொருளேபோற்றி பொற்பினில்மிகுத்தாய்போற்
என்றுமில்வுலகம்போற்று மெங்களாண்டவனேபோற்றி

லோகவிசாரணை

மன்மதன்சொல்லல்:

கொண்டலெழுமுலகினிற்குபகுபெண்மாரியது
குறைவிலாமற்பெய்யுதா

முதல்மந்திரிசொல்லல்

கொற்றவமேயுர்தனிடகுணமிகுநெறிப்படி
குறைவிலாமற்பெய்யுது

வசனம்.

ஜீ-ஜீ-குறைவிலாமற்பெய்யுதா (மந்திரிசொல்-வசனம்) குறைவிலாமற் பெய்யுது மகாராசனே மன்மதன்சொல் (சந்தோஷம் சந்தோஷம்.)

மன்மதன்சொல்லல்.

உலகத்திலடவிர்த்தியநாயங்களென்னமிரோ
உக்ரதபஞ்செய்பவருண்டா

இரண்டாவது-மந்திரிசொல்லல்.

ஒருமைநெறிதவறிவே வக்ரதபஞ்செய்பவர்
உலகமதி லில்லையயா

வசனம்.

(உலகமதிலில்லையா-வசந்தமந்திரி) உலகமதிலில்லை சுவாமி-ஜீ ஜீ மிகவுஞ் சந்தோஷம்.

மன்மதன்-சொல்லல்.

எண்டிசைக்கிடரும் அமரரும்முனிவரும்
இடையூறிலாமல்சுகமா

முதல்மந்திரிசொல்லல்:

இன்றையவரைக்கும் யாதொன்றுமில்லாமலே
எல்லோருமிடையூறிலாமல்சுகமே

வசனம்,

(யாருக்குமொருகுறை வில்லையாமந்திரி) குறைவில்லை மகாராசனே (ஜீ-ஜீ மெத்தவுங் களிப்படைந்தேன் மந்திரி.)

மன்மதன்சொல்லல்.

அண்டரில்முனிவரில் சதுருவிருல்நேர்ந்து
அபயமென்றுவந்தவர்களுண்டா

இரண்டாவது மந்திரி-சொல்லல்.

சங்கரூபனே அபயமென்றுவந்தவர்கள்
யாவருமில்லையா

வசனம்.

(யாவருமில்லையா மந்திரி (யாவருமில்லையா) சந்தோஷம் சந்தோஷம்.



பொது-விருத்தம்,

சங்கரன்றவத்தெழுந்த தனலதால்மெய்வெதும்பி
இங்கெவர்க்கதைசெல்லியிந்திரன்விட்டதூதர்
தங்கியவர்த்திபொங்குந் தார்மீகநகலையாளும்
அங்கசன்கொலுவைத்தேடி அனைநொடிதனில்வந்தாரே.

கட்டியக்காரன்-தேவர்களுக்குச்சொல்-வசனம்

ஆர்நீங்கள் எங்கேவந்தீர்கள்.

தேவர்கள் கட்டியக்காரனுக்குச்சொல்.விருத்தம்.

வாசற்காவலனேயோய் வானவர்தலைவருனே
போசதேவேந்திரராஜன் புகழுள்ளதூதர்நாங்கள்
ஆசகல்மாவின்றய்ய அருந்தவத்தினிலுதித்த
மாகிலாவழுமின்மிக்க மன்னனுக்குரைசெய்வீரோ

வசனம்.

கேளுமப்பா கட்டியக்காரா தேவேந்திரன் விடும்படியாகிய தூதர்கள் நாங்கள் ஆகையால் மன்மதராசனுக்கு அறிக்கை செய்யுங்கள் கட்டியக்காரா.

கட்டியக்காரன்சொல்-கவி.

தேவனேபோற்றி தேவேந்திராசன்
காவலான்விட்ட கடியதூதர்களாம்
ஆவலாய்வாச லருகினில்வந்தார்
மேவியேயுமக்கு விளம்பவேவந்தோம்

மந்திரி மன்மதனுக்குச்சொல்-கவி.

சுந்தரமேயுந்தன் சமலடிசரணம்
சித்திரப்பொன்னுலகில் தெளிவுடனிருந்து
வித்தகத்தூதர் வினவவந்தாராம்
அத்தனேயவரை யழைக்கவோசொல்வீர்

மன்மதன்-மந்திரிக்குச்சொல்-கவி,

மந்திரியிந்திரன் வரவிட்டதூதனை
விந்தையாய்வரவே விளம்புவாய்நீயே

மந்திரி கட்டியக்காரனுக்குச்சொல்-கவி.

கட்டியக்காரா கடிய தூதர்களைச்
சட்டமாயிங்கே தான்வரச்செய்வாய்

கட்டியக்காரன்-தேவர்களுக்குச்சொல்-கவி.

உன்னித தூதரே ஒளிமிகுகொலுவில்
மன்னவனுக்கோ வரச்சொன்னார்போவீர்

தேவர்கள்-மன்மதனுக்குச்சொல்-போற்றிவிருத்தம்,

ராஜாராஜேந்திரரபோற்றி நாரதியபோற்றிபோற்றி
தேசினிலமிகுந்தாய்போற்றி திங்களாங்குடையாய்போற்றி

மயிலாமணியிழைத்த மாடகூடம்பலகைக்கும்
சேவன்மகனேயுந்தன் இணையடிபோற்றிபோற்றி

மந்திரி-தேவர்களுக்குச்சொல்-விருத்தம்.

இந்திரனுலகில்வாழு மிமையதேவர்களேநீங்கள்
பைந்தருநிழலைவிட்டுப் பரிவுடன்விரைவதாக
சுந்தரமாலதீசன்மேவும் கடியதாரமேசத்தன்னில்
வந்ததோர்சேதிதன்னை மன்மதனுக்குரைசெய்வீரே

வசனம்.

பொன்னுலகத்தில் வாழும்படியாகிய தேவர்களே நீங்கள் பஞ்சவர்ணத் தருவின்நிழலை விட்டு இந்த தாரமேக நகரத்திற்கு எழுந்தருளியதாய் வந்தீர்கள் வந்தகாரியத்தை மகாராசனுக்குத் தெரியச்சொல்லுங்கள் தேவர்களே.

தேவர்கள்-மன்மதனுக்குச்சொல்-விருத்தம்.

மன்னவனே கயிலைகிரிதனில் மகாதேவனிருக்கும்
பன்னியபலவையெடுத்துப் பகருமெங்கள்நாதனவனெல்லாம்
இன்னலையின்னல்களைச் செய்யும்பதனை மாற்ற
அன்னையிந்திரன்பணிந்து அழைத்துவரச்சொன்னாரே.

வசனம்.

கேளும் ராஜராஜேந்திரா கயிலையங்கிரியில் சிவன் தபசுசெய்கிறார் அந்த தபாக்கினியிலே பொன்னுலகமெல்லாம் புழுங்கி வெந்துபோகிறது ஆகையால் அவருடைய தபசையழிக்கவும் எங்களை ரட்சிக்கவும் மிகவும் உங்களுக்குச் சரணஞ்செய்து தங்களைத் தேவேந்திரமகாராசன் அழைத்துக்கொண்டு வரச்சொன்னாரையா.

மன்மதன்-தேவர்களுக்குச்சொல்-வசனம்.

ஆ ஆ-தேவர்களே பளாபளா நன்றாயிருந்தது நீங்கள் யாதொன்றுக்கும் அஞ்சத்தேவையில்லை இதோ நான் வருகிறேனென்று நீராய்த் தேவேந்திரனுக்குப்போய்ச் சொல்லுங்கள் தேவர்களே.

மன்மதன்-மந்திரிக்குச்சொல்-விருத்தம்.

மந்திரிவசந்தாஐய்ய மாநகர்தெய்வலோகம்
இந்திரபதிக்குப்போக யிட்டமாய்ப்பணைபேரி
விந்தையாயடித்துசேனை விரைவுடன்வரவேசெய்து
எந்தனதிறந்தத்தேரை யிட்சணங்கொண்டுவாரீர்

வசனம்.

ஆ-ஆ-கேளுமப்பா வசந்தமந்திரி நான் தெய்வசபைக்குப்போகவேணும் ஆகையால் பேரிகையடித்து சதுரங்கசேனையையும் வரவழைத்து என்னுடைய தென்றற்றேரையும் அலங்கரித்து செய்துகொண்டு வாரும் நீங்களும் தயாராயிருங்கள் மந்திரிகளே.



மந்திரி-கட்டியக்காரனுக்குச்சொல்-கவி.

ஆரடாகட்டியா அண்ணலார்பதியன்
பாரிதோயிந்திர பதிக்குப்போகச்
சீருளபடைகள் சிறப்புளதென்றற்
றேரையுங்கொண்டு டீக்ஷணத்தினில்வாடா

கட்டியன்-மந்திரிக்குச்சொல்-கவி.

அண்ணலேபோற்றி அன்புள்ளபடைகளும்
தெண்ணலந்தேரும் தென்புடன்வந்தது

மந்திரி மன்மதனுக்குச்சொல்-விருத்தம்.

கையினிற்கழைவில்லேந்தி கருவண்டால்நாணிதொட்டு
துய்யநன்மலரம்பாலே சுடர்முடியரவந்தாக்கும்
மெய்யதாயுலகமெல்லாம் வென்றதோர்வீரனேயுன்
செய்யதற்றென்றற்றேருஞ் சேனையும்வந்ததையா

வசனம்.

சரணஞ்சரணம் ராஜராஜேஸ்வரா உமது உத்தாரப்படிக்குத் தென்றற்றேருஞ் சேனைகளும் வந்தது சுவாமி.

மன்மதன்-ரதிக்குச்சொல்-விருத்தம்.

பூவைபைங்கிளியேயென்னைப் புகழ்ந்திடுமொழியினளே
தாவருகைலைவாசன் றவமதையழிக்கவேண்டித்
தேவதேவேந்திரனென்னை சீக்கிரமுடன்வரச்சொன்னான்
ஆவலாய்ச்செலவுதந்து அனுப்புவாயனுப்புவாயே

வசனம்.

கேளாய் யெனது பிராணபதமாகிய ரதியே வெள்ளியங்கிரியில் சிவனானவர் தபசுசெய்கிறாராம் அவர் தவத்தையழிக்கும் பொருட்டாய் தேவேந்திரன் என்னை வரச்சொல்லி ஆளனுப்பி வைத்தானீ ஆகையால் சந்தோஷமாய்ச் செலவுதாரும் பெண்ணே.

ரதி-மன்மதனுக்குச்சொல் விருத்தம்.

திரிபுரம்நீறாய்ச்செய்த தேவர்கடேவன்செய்யும்
அரியதோர்தவத்தையும்மா வழிக்கவுமாகுமோதான்
மருமலர்த்தோளனிந்திரன் மடிப்பட்டுமோசங்கள்செய்ய
கரவுநூதனுப்பிவைத்த காரணம்பிராணநாதா

வசனம்.

கேளும் என்பிராணநாதா சிவனுடைய தபத்தை அழித்து வருகிறேனென்றல்லவோ சொல்லுகிறீர் அந்த பரமசிவனுடைய தவத்தையழிக்க உம்மாலாகுமா ஆகமாட்டாது ஆகிலும் இதை ஆலோசனை செய்தால் தேவேந்திரன் எதோ சூதுமார்க்கங்களெண்ணி அனுப்பி வைத்தாப்போலிருக்கின்றது என்பிராணநாதா.

மன்மதனுக்கும்-ரதிக்கும்-தர்க்கம்-தரு,

இ-ம்-தோடி மிசுரதாளம்,

மன்மதன் சொல்லல்.

பொன்னுலகில்வாழும புரந்தரனீசன்செய்
போதத்தவமதையழிக்க வென்னைத்
தோதகமாயிதோ வழைக்க மன்னும்
வர்ணமுள்ளதேவர் தன்னையமுடனேடி
வந்தனரே ரதிக்கிளியே இதோ
வந்தனரே ரதிக்கிளியே

ரதிசொல்லல்,

பொன்னுலகினில்வாழும் புரந்தரனுன் மிகுந்
தொல்லாகினைப்புகள் நீயேதான் அது
வல்லனாகுவெள்ள குதிர்தான்-இது
உன்னுமீசன்செய்ய மன்னுர்தவமழிக்க
உன்னலாகுமோ பிராணநாதா-இப்போ
உன்னலாகுமோ பிராணநாதா

மன்மதன்சொல்லல்,

மின்னாசேமித்திரன் உன்னிச்சுருசெய்ய
மெத்தவுமேபலனோ-அவன்
வித்தையெல்லாமறியேனோ சிவன்
தன்னுலென்னையென்னைப் பின்னஞ்செய்யவவன்
தன்னலாகுமோ ரதிக்கிளியே-அவன்
தன்னலாகுமோ ரதிக்கிளியே

ரதிசொல்லல்,

இன்னவழியைச்சென்று வின்னயிடர்வந்தெய்து
மென்றுமென்னுமலே யகாண்-இது
குன்றெப்பெனும்பத்மாசுரன்-வலி
தன்னெப்பில்லாவிரன் தன்னுலேதான்கெட்ட
தறியாயோ வெம்பிராணநாதா-இது
அறியாயோ வெம்பிராணநாதா

மன்மதன்சொல்லல்,

பத்மாசுரனுலே பாமனேடிப்போன
பவுனைஷீயறியாமல் பேசுறாய்-அவன்
கவுரியமேனிங்கே விசுறாய்-சிவன்
புறியத்தவசுமித்திரன் போதச்சுகம்வாணம்
போயழிக்கிறேன் ரதிக்கிளியே யான்
போயழிக்கிறேன் ரதிக்கிளியே



ரதிசொல்லல்,

அதிகவேதந்தேடும் அரியபாதனுன்
ஆனந்தசயழிக்கவேயேகினல்-திரி
புரமெரிசெய்திடும் விழியினல்-உரு
பதியுமோவியும்வில்லும் பவழம்போலேயாகப்
பந்துமேயென்பிராணநாதா-உரு
பந்துமேயென்பிராணநாதா

மன்மதன்சொல்லல்.

எப்படியாகிலு மீசன்தவமழித்து
பிட்சணம்வருகுவேன்பாரடி-இது
நிட்சயமேமனத்தோடி-எங்கும்
ஒப்பில்லாதநந்தை யுண்டியிருக்கப்பயம்
ஒன்றுமில்லையோ ரதிக்கிளியே-பயம்
ஒன்றுமில்லையோ ரதிக்கிளியே

ரதிசொல்லல்,

செப்புமெனதுவார்த்தை செல்லுமென்றெண்ணுமற்
பிறந்துபோவதென்னமோ-என்னைத்
துறந்துபோவதென்னவுபாயமோ-விதி
தப்பாவண்ணிட்ட தன்மைப்படிநடக்குந்
தவறுமென்பிராணநாதா-விதி
தவறுமென்பிராணநாதா

மன்மதன்-ரதிக்குச்சொல்-விருத்தம்.

காலனாசனுட்புயிர்த்தன் சடையுஞ்சயிலைவாழும்
டாமனுந்தவஞ்செய்யும் பன்மையும்நொடியிலிப்போ
லீலாவுடன்சென்றுவெட்டி வெளியதாய்ச்செய்துவாரேன்
மருவுமென்னுயிரதான மனைவியேசெலவுதாராய்

வசனம்.

ஆ-ஆ-கேளாய் என்பிராணபதமாகிய ரதிக்கிளியே அந்த தேவேந்திரனுடைய பட்டமாகிய குருவினைப்பையும அவனதொப்பைவைத்த தவசினுடைய பண்மையும் அந்தச்சிவன் தவஞ்செய்யும்படியாகிய சார்த்தையும் இதோ ஒரு நொடியிற்போய் வெட்டவெளியாக்கி வருகிறேன் எனக்குச் செலவுதாரும் பெண்ணே.

ரதி-மன்மதனுக்குச்சொல்-தரு.

இ-ம்-உசேனி-ஆதிதாளம்

பல்லவி.

என்னாயுமைப்பிரிவேன் என்பிராணநாதா
எவ்விதமாயிருப்பேன்

அநுபல்லவி.

பன்னருஞ்சத்திஜையுயர் சென்னிதனில்முடித்த
உன்னிதச்சிவன்றபசைட்டின்னஞ்செயச்செல்வேனென்றால்-என்

சரணங்கள்.

பத்தெட்டுப்பெற்றவ ளல்லவே-இன்னஞ்சிறிய
சித்தினியைவிட்டு மெல்லவே
உத்தமரேபோகவுமுன் சித்தமுற்றதுவோவென்
சித்திரவிச்சித்ரபுஷ்கள் சத்தத்தில் ரமித்திடவும் (என்)
நாகமுஞ்சாரையுமென்னவே-இருவோருமாய்
ஏகபோகமாகத் தின்னவே
லோகரட்சணனித்த நாகரீகமன்மதா நீர்
போகவேணுமென்றாலது சோகமாகுதேஜையையோ (என்)
எத்தனைசொன்னாலுந்தமெர்து-வீணவ்யோசனையுன்
சித்தத்தில் நினைந்து விடுத்து
சித்தஜபதியேபோக வுத்தரத்தருகிறேனென்றீர்
மெத்தவயிறெரியுதே வர்த்தமேதுமென்னசெய்வேன் (என்ன)

ரதி-மன்மதனுக்குச்சொல்-கொச்சகம்.

நாகரீகமானவெத்தன் நாயகரேபாமர்செய்யும்
யோகமதைப்போய்க்கலைக்க வுத்தரவுதாடியெல்லா
வாகையுடனேகேட்ட வாறதனைச்சித்தத்தில்
சோகமிகவாயினஞ் சேர்த்திடுதென்செய்வேனோ

வசனம்.

சேரும் என்பிராணநாதரே பரமசிவன் செய்யும் யோகத்தைக் கலைத்துவர உத்தரவு கேட்பதை நினைத்தால் என்னுடைய சித்தமிக வுங்கலங்கிச் சோர்வடையுது நானென்னசெய்வேன் சுவாமி.

மன்மதன்சொல்-தரு-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

வாடியென்கண்ணாட்டி போய்வாவென்றோர்
வார்த்தைசொல்லடிமின்னாட்டி

அநுபல்லவி.

கோடிப்பிரகாசமின்னாற்கொடியேமணிமுடியே
கோணுங்கிளியேமலர்மீதுமொய்க்கும்அளியே

வசனம்.

கோதிலாத முன்செய்தவமும் என்சத்துவமும் குறித்தாவது யோசிக்கவில்லையா.

தரு.

குவித்திரண்டுமுற்ற கொங்கைநங்கையேஇட்ட-வாடி



சரணங்கள்.

ஐந்துமலர்க்கணையைத்தொடுப்பேன்-சிவன்
அரியயோகங்கலையவிடுப்பேன்
சந்தேகமறத்தவந்தவிப்பேன் இல்லாவிடிற்
சுறையல்மாளைவிடுத்துக்கெடுப்பேன்
சுந்தரமாதேயென் ஞானத்தனமே-சனமே
குலக்குற்றிருவுருவே-யிலங்கும்பெண்கள்குருவே

வசனம்.

சொல்லச்சொல்ல எள்ளளவாகிலுந்தோற்றவில்லையா.

தரு.

சுகமேதருந்திருகற்பகமே முகமேஇட்ட (வாடி)
பதிதனில்இந்த்ரசபைகூடி-ஒருமிக்க
பரித்துயென்னைநினைந்துநாடி
தமியினாகக்கவென்றதேடி-அழைக்கிற்கால
தாமசஞ்செய்யலாமோபோடி
பூவிற்செழும்பரிமளநாயகியே
ஞாயநவமணியேநேயப்பணியணியே

வசனம்.

இதோ சுருக்கினிற்போய் வருகிறேன் சந்தோஷமாக ஒருசொல் சொல்லுவாய் பெண்ணே.

தரு.

தோகைமயிலேசித்திர ரேகைக்குயிலேஇட்ட (வாடி)
சங்குசக்ரகட்கநாதன்-இந்த
சராசரங்களையளர்த்தபாதன்
தங்குமநோக்கியாவர் தருவேதன் பிரம்மத்
தானல்லாதொன்றுமில்லாப்போதன்
மங்காவைகுந்தம் வளர்மாயன்பெற்றெடுத்த
மகனென்றுபெட்டேன்பேர்மன்மதனென்றுங்குறியாமல்

வசனம்.

வாட்டங்கொள்வது தகுதியா அவ்வீசனைச் சாட்டியில்லாப் பம்பரப்போல ஆட்டிவைக்கிறேன் பார்.

தரு.

வரிவிழியாளேரசஞ்சொரிமொழியாளேஇட்ட (இட்ட)

ரதிக்கும்மன்மதனுக்கும்-தர்க்கம்.

லாவணி.

ரதிசொல்லல்.

அதிசிங்காரநடனவொய்யாரா
அங்கஜசுந்தரா-உன்னை

யனுப்பித்தானுக்கனிந்திருப்பேனே
வோசைக்கடன்மதனே

மன்மதன் சொல்லல்.

சதேதியில்வருவேன் தடுத்திடவேண்டாம்
சௌமியன்புத்திரியே யடி
சாதனைத்திறனை வருங்கூடி
நயவாய்வரவழைத்தார்

ரதிசொல்லல்.

இந்திரன்முனிவருமின்பமாயழைத்தே
யிங்கங்கன்செய்வாரோ கதை
யன்னியோநானுந்தவித்திடலானேன்
மித்ரத்தடிவையாதே

மன்மதன்சொல்லல்.

அதிவீரனுமெய்ம்நதியாயேயடைந்தும்
ஆசைக்கனிமொழியே-யந்த
ஆலயசெய்தவத்தையழித்துமேவருவேன்
அன்பாய்விடைகொடடி.

ரதி-மன்மதனுக்குச்சொல்-கொச்சகம்.

எந்தன்தலைவிதியோ பொன்னரனுக்கேனிச்செய்வினையோ
நாலைத்தாயாச்செய்த தவத்தின் பேருநான்வண்டோ
சுத்தனிடத்திற்சைப்பமோ நீபோயிருப்படி
தொந்தமாய்ச்செல்லவென்றுநீ சொல்லஇனிவேனுண்டோ

வசனம்.

கேளும் என்பிராணநாதா இது என்னுடை தலைவிதியோ அல்லது முற்பேறுகள் செய்த தீவினையோ எனது தாய்தந்தையின் தவம் குறைவோ யாருடைய சித்தம் இப்படிசலக்கி தானாகவே யுங்களை விட்டாற்போல பரமசிவனுடைய தவத்தை யழிக்கப் போவேனென்றால் இனிமேல் என்னசொல்வேன் என்பிராணநாதா.

மன்மதன்சொல்லல்

விருத்தம்.

வங்கணைக்கரசிசீக்கிரம்தோல்யாரி
மடமயிலே யந்த
சிவன்சடைக்குமேல்சமுடன் போய்
வருவேன் கணயசாரி



ரதிசொல்லல்.

மதனாகிருப்பேன் றுரமேகூடி
மார்புடன்மார்புறவ-நாம்
மங்கையர்கட்புஞ்சாலையில்
வாஞ்சையாய்விற்றிருப்போம்

மன்மதன்சொல்லல்.

விந்திங்கேயிருந்தாலே நேரமாகுது
விசித்திரமாமயிலே-நீ
யேந்திரமுனிவரும் வழிபார்த்திருப்பார்
விடைதந்திடுவாயே

ரதிசொல்லல்.

வழிபார்த்திடிலென்ன தடுத்திடிலென்ன
மதனாயிருந்திடுவோம்-நாம்
மனமகிழ்ச்சியாயிருவருங்கூடி
மகிழ்ந்தேயிருந்திடலாம்

ரதி-மன்மதனுக்குச்சொல்-கொச்சகம்.

தெள்ளித்தெள்ளிச்சொன்னாலுந்தேன்மொழிபோய்வாரோமென்றால்
வள்ளலேநான்விதிசெய்யாமோ மதியெய்ங்கணவா
மெள்ளமெள்ளத்தன்விதியை முன்மதியால்வெல்வருண்டோ
உள்ளபடியேநடக்கும் உமதுசித்தமென்பாக்கியம்

வசனம்.

கேளும் என்பிராணநாதரே நான் அநேக விதமாய்ச்சொன்னாலும் அசத்தியம் சுவாமியின் தவத்தைப்போயழித்து வருகிறேனென்று சொன்னால் நான் செய்வதாவதென்ன உலகத்தில் விதியை மதியினாலே வெல்பவருண்டோ ஆகையால் உமது சித்தம் எனது பாக்கியம் பிராணநாதா.

மன்மதன்சொல்-தரு-இ-ம்-கியால்-தாப்புதாளம்

பல்லவி.

ஆரணங்கேயமுதே-நீ-அசந்துநித்திரைசெய்

அநுபல்லவி.

பூரணமாமதிமுகமின்னே
பூஷணமேசம்பாஷணமேயடி (ஆர)

சரணங்கள்.

மாயன்மருமகனே பூவின்
வண்டினமேமயிலே
ஆயசதாசுந்தரமேபெண்கள்
அதிக்க-ரூ மதிக்கவாழ்ந்திடும் (ஆரணங்கே)

இன்பரசக்கனியே ............ எந்தன்
இச்சைக்குகந்தவளே
சம்பிரமாகப்பஞ்சணைமீதிற்
சார்ந்துனக்கின்பந்தருவேனே (ஆணைக்கே)
சித்திரவிசித்திரமே ............ இன்பத்
தேனேகிளிமொழியே
சற்றுமினியிங்குதாமதமில்லாமலே
தருவாய்விடை புரிவாய்-யுன்னை (ஆணைக்கே)

மன்மதன்-ரதிக்குச்சொல்-வசனம்.

சகிக்கிறாயன்பேனே என் மானசமே நீயேன் விசனப்படுகிறாய் இதோ ஒரு நொடியிற்போய் வருகிறேன்.

ரதி-மன்மதனுக்குச்சொல்-வசனம்,

அப்படியே சீக்கிரமாய்ப்போய்வாரும் என்பிராணநாதா.

மன்மதன்-சேனைகளுக்குச்சொல்-விருத்தம்,

அதிவீரதீரரா யமைச்சரேயனிக்லோப்பார்
துதிசேரும்பதியேயெந்தம் சொல்லைனித்தலைவரோநாம்
அதியகபதிக்குவந்த ஆபத்தைத்தீர்ப்பதாக
இதோவொருநிமைக்குட்சென்று மிட்சணம்வருவோம்வாரீர்.

வசனம்.

அதிவீரதீரராகிய மந்திரிகளே அப்பா சேனாபதியே அவனி தனிலவரே படைத்தலைவரே நாமெல்லோரும் தெய்வசபைக்குப்போய் தேவேந்திரனுக்கு வந்திருக்கிற ஆபத்தைத்தீர்த்து வருவோம் வாருங்கள் சேனைகளே (அப்படியேபோவோம்வாரும்மகாராஜனே)

பொருட்கொச்சகம்.

மாரன்பிரிந்திடுதற் கங்கையவன்மெய்சோர்ந்து
வாரிதப்புழுத்துதேதும் பஞ்சணையிற்போய்படுத்தாள்
சேனைப்படையொடு தென்றலந்தேரேறியே
சீருஞ்சிறப்புடைய தெய்வசபைவந்தானே

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அகோ தேப்படியென்றால் தார்மீக நகரந்தனிலே ரதிதேவியான வள் புருஷனைப்பிரிந்த சோபத்தினாலே மகா விசனத்தோடும் ஆசார வாசலைவிட்டுத் தன்பள்ளியறையிற் பஞ்சணை மெத்தையிற்போய்ப் படுத்துக்கொண்டாள் இப்பால் மன்மதராஜனானவர் தன்சேனைகளுடன் புறப்பட்டுத் தென்றற்றேரில் லேறிக்கொண்டு தெய்வசபைக்கு வருகிற வகையாதெனில் கட்டியக்காரன் வந்து தேவேந்திரனுக்குச் சொல்லுகிறவிதங் காண்க.



கட்டியக்காரன்-தேவேந்திரனுக்குச்சொல்-விருத்தம்.

எங்களாண்டவனேபோற்றி யிந்திரபதியேபோற்றி
பொங்குநற்கடல்சூழ்வையம் புகழ்ந்திடுமொளிகள்கூடும்
தங்கியமேடையேவுந் தார்மீகநகராயாளும்
மங்களமானதிவ்ய மன்மதராஜன்வாரார்

வசனம்.

சரணஞ்சரணம் பொன்னுலகத்தரசே நம்முடைய தெய்வசபைக்கு நேராய் சதுரங்கசேனையோடும் மன்மதமகாராஜன் வருகிறார் சுவாமி.

தேவேந்திரன்-தன்சபையிலுள்ளோர்களுக்குச்சொல்

விருத்தம்,

பொங்கிடுந்தவத்தில்மிக்கப் புண்யசீலர்களேதூய
திங்களாக்கதிரைவென்ற திகழ்முடியமரர்வாழ்க
எங்களாண்டவனேயிப்போ தெல்லோருமெதிர்கொண்டேகி
அங்கசபதியைநாமு மழைத்துடன்வருவோம்வாரீர்

வசனம்.

பரிசுத்தமாகிய தவத்தில்மிகுந்த பெரியோர்களே தேவர்களெல்லாம் வாழும்பொருட்டாய் மன்மதராஜனை எதிர்கொண்டழைத்து வருவோம் வாருங்கள் சபையோர்களே (அப்படியேவாரு மிந்திரபதியே.)

தேவேந்திரன்-முதலாகிய தேவர்கள்-மன்மதனுக்குச்

சொல் போற்றிவிருத்தம்.

குமரவேள்திகழொப்பான குமரனேபோற்றிபோற்றி
அமரர்கள்வாழவந்த அங்கசபதியேபோற்றி
திமையினிலபயமென்றோர் நெடிதுபணைதீர்ப்பாய்போற்றி
இமையிலாதேவர்நாங்க ளெல்லோரும்போற்றிபோற்றி

மன்மதன்-தேவர்களுக்குச்சொல்-வாழிவிருத்தம்.

தேவரோவாழிவாழி சித்தகின்னரரோவாழி
மூவர்கள்புகழுந்தில்லிய முனிவரோவாழிவாழி
காவியங்கண்ணுருள் தூய்ய கன்னியிந்திராணியோடும்
பூவுலகதனில்வாழும் புரந்தராவாழிவாழி

மன்மதன்-தேவேந்திரனுக்குச்சொல்-விருத்தம்.

வைத்தருநிழலின்கீழ் படிந்தபொன்னுலகந்தன்னில்
சுத்தனேமுனிவர்தேவர் சூழ்ந்திடும்திரைசபைக்கு
இந்திரபதியேநீயு மினியதேவர்களைவிட்டு
யிந்தையாயென்னையழைத்த விவரமதனைசெய்வாயே

வசனம்.

கேளும் தேவேந்திர மகாராஜனே தேவர்கள் முனிவர்கள் சூழ்ந்து நிறைந்திருக்கும் இந்தத் தெய்வசபைக்கு என்னை அழைப்பித்த காரியந் தெரியச்சொல்லுவாய் தேவேந்திர மகாராசனே.

தேவேந்திரன்-மன்மதனுக்குச்சொல்-விருத்தம்,

மாவிட்டகவத்தால்வந்த மன்மதபதியேகேளீர்
சோலமாங்கயிலைதன்னில் கொன்றையைத்தரித்தருப்ப
காலகாலன்றவத்தின் கனலைகடாத்தறுனேன்டிச்
மேலேயுமையிப்போ சீக்கிரமனுறத்தந்தையா

வசனம்,

மகாவிஷ்ணுவினுடைய வேத்திரத்திலேவந்த மன்மதராஜேந்திரனே கயிலைகிரியில் சிவனானவர் தவஞ்செய்கிறார் அந்த தபோக்கினியினாலேயெங்கள் வருத்தப்படுகிறோம் ஆகையால் அந்த தவத்தை யழிக்கும் பொருட்டாய்த் தங்களை அழைப்பித்தது சுவாமி.

மன்மதன்-தேவேந்திரனுக்குச்சொல்-விருத்தம்.

திருக்குவளைத்துள்ளோர்க்கும் தவசிரேஷ்டர்க்கும்
பாலோமயங்குமாதும் பம்புயோகினியாய்தானே
சோதிசிவனுங்கண்டு நிலைக்கிருந்தனையழிக்கப்
பெருள்ளாற்றவிதெய்வப் பெண்களையனுப்பொருதோ.

வசனம்,

கேளும் தேவேந்திரமகாராஜனே ஆதியிலே நாருநவனந்தரிஷிகளுக்காகவும் பத்மாசுரனுக்காகவும் விஷ்ணுவானவர் மோகினி வேஷங்கொண்டார் அந்த மோகினியைப்பார்த்து பரமசிவன் நிலைகலங்கிப் போய்விட்டார் அவ்வளவு இன்மையோடுகூடிய பரமசிவன் தவஞ்செய்தால் அதற்காக என்னையழைக்கவேணுமா தாங்கு அரம்பாஸ்திரீகளைவிட்டு அழிக்கலாகாதோ சொல்லப்போகிறீர் தேவேந்திர மகாராஜனே.

தேவேந்திரன்-மன்மதனுக்குச்சொல்-விருத்தம்.

பொங்கியகடலுமெங்கம் பகைமையாயிடைன்மின்னல்
மங்களமாதர்காந்து வடதெருப்பனைவிட்டாலும்
திங்களையணிந்தோன்செய்யுந் திகழ்தவந்தெருப்பல்லாரும்
எங்களாண்டவனேயல்லா லெங்களைக்காப்பாருண்டோ

வசனம்.

கேளுஞ்சுவாமி மன்மதராஜேந்திரா சத்தமுத்தேங்கள்போலவ்கள் இருந்தபின்னல்கள் அம்பாஸ்திரிகள் இதுகள் முதலாகிய இன்னஞ் சொல்லும்படியாகிய அதில் ஒருத்தரைவிட்டாலும் அவருடைய தபோக்கினியினாலே வெந்துபோய் ஆகையால் தங்களையல்லாமல் எங்களைக் காக்கும்படியாகியபேர் ஆரையா சுவாமி.



நாரதர்-மன்மதனுக்குச்சொல்-விருத்தம்,

முத்தநேர்முல்லைசேரு முழுநிலைந்நகைமாதி
புத்திரமுளாயுத்து செழுங்கணைவெல்லுமல்லால்
மற்றொருவிதத்தாலீசன் மாதவமழியாதையா
சித்தம்வைத்தருளியிந்த தெய்வலோகத்தைக்காரீர்

வசனம்.

கேளுமையா மன்மதராஜேந்திரா உம்முடைய ஒருபுஷ்பபாணத்தினாலே சிவனுடைய தவத்தைக் கலைக்கலாமே யல்லது மற்றொரு விதத்தினாலேயும் வெல்லப்போகாது ஆகையால் தாங்கள் சித்தம் வைத்து இந்த தெய்வலோகத்தைக் காக்கவேணுஞ் சுவாமி,

மன்மதன்-தேவேந்திரனுக்குச்சொல்-விருத்தம்,

தன்னிடப்பிள்ளையென்று சற்குணமென்றுசொல்முன்னே
மன்னவன்றன்னன்செய்த வன்பெருயாகத்தன்னில்
பின்னுமுன்னென்றுவீர பத்திரனையனுப்பிக்கொன்றான்
என்னையவன்றவமழிக்க அன்பாம்பெண்பாடாமே.

வசனம்,

கேளுந் தேவேந்திரமகாராஜனே ஆதியிலே தக்கன்செய்த யாகத்தை அழிக்கும் பொருட்டாய் ஈசுவரன் விசிஷ்டனையனுப்பினார் அவன் சிக்கிரம் வரவில்லையென்று வீரபத்திரனை யனுப்பி யாகத்தையழித்து விக்கினேஸ்வரனையுங்கொன்றார் அப்படிக்கொத்தவர் ம் பெற்றபிள்ளையென்று பாராமல் வதைசெய்தவர் செய்யும்படியாகிய தவத்தை அழிக்கவேணுமென்றால் ஆண்பாடு பெண்பாடு பட்டாலு முடியாது தேவேந்திர மகாராஜனே,

பிரகஸ்பதி-மன்மதனுக்குச்சொல்-விருத்தம்,

ஆண்பெண்ணும்பாடுபட்டு அழிப்பதுபெரிதென்றெண்ணல்
வீண்பழிவருமேயிந்த விண்ணுலகெல்லாந்தொத்தால்
காண்பதுமுன்னேகாலகண்டன்செய்தவமழித்தால்
மாண்புனக்குண்டேப்பெற்ற மானுக்குஞ்சுகுமாமே

வசனம்,

ஆண்பாடு பெண்பாடுபட்டாலும் ஈஸ்வரன் தபத்தை அழிக்கிறது பெரிதென்று சொல்லுகிறீர் இந்த தெய்வலோகம் வருத்தப்பட்டால் விருதாவில் உமக்குப்பழிவந்து சேரும் ஆகையால் சிவனு

டைய தபசுதை அழிக்கு தேவர்களை நட்பித்தால் நமக்குக் கீர்த்தியுண் டாம் உன்னைப்பெற்ற மகாவிஷ்ணுவுக்கும் சந்தோஷமுண்டு மன்மத ராஜேந்திரா,

மன்மதன்-தேவேந்திரனுக்குச்சொல் விருத்தம்,

தேவர்பதிபேசுவாய் சிவனைநாம்வெல்லக்கூடும்
காவலன்வெகுண்டால் நெற்றிக்கண்ணால் நாம்ரீறாவோம்
பாவிமலைநெருப்பில்வீழ்ந்த விட்டில்போல்சாவோம்
ஆவலாய் நமையழிக்க நீயாரடா தப்பா

வசனம்,

கேளும் தேவேந்திர மகாராஜனே பரமசிவனுடைய தவத்தை யழிக்கச் சொல்லுகிறீர் அவருக்குக் கோபம் வரும் அதனால் இந்த முக்கியர் குடித்த பெண்ணும் விண்ணாம் நெருப்பிலே விழுந்த சாகும் பல பலமாய்ப் போம் ஆகையால் அவர் தபசுதை அழிக்க ஆகாது மகாதப்பு தேவேந்திர மகாராஜனே,

தேவேந்திரன்-மன்மதனுக்குச்சொல்-விருத்தம்,

வையகத்தழிக்கும் மன்மதா நாதவன்பதஞ்சார்ந்தன்
கையிலுலாகதென்றும் மங்கைபந்தமுந்தமிசன்
செய்தவத்தனையழிக்கச் செகந்தனிலேவெருவரில்லை
உய்வில்லையெங்களுக்கு உன்பதம் சரணமையா

வசனம்,

பரமசிவனுடைய தவத்தையழிக்க என்னையாலாகாதென்று சொல்லுகிறீர் நாங்களே அப்படி கட்டளையிட்டால் இன்பம் இந்தப்பூமியிலே ஆர்ஜெயிக்கப்போகிறார்கள் ஆகையால் உம்முடைய திருவடியே யல்லாமல் எங்களுக்கு வேறே கதியில்லையையா மன்மதராஜேந்திரா,

மன்மதன்-தேவேந்திரனுக்குச்சொல்-விருத்தம்,

பந்தமிலதவத்தைச்செய்யும் பரமனுக்கனைகையிட்டுபோ
சந்தபூங்கணையிறுலே மதிக்கு வல்லவனோ நீதி
விந்தைவிளைத்தனிலேமேவும் வெங்கணல்தனையவித்து
இந்திரபதியேயானாலும் பிட்சையிட்டருளுமேவே

வசனம்.

கேளும் தேவேந்திரமகாராஜனே. வெள்ளியங் கிரிக்குப்போய் வருகிறேன் நீயான் சபதத்தை என் மனதினாலே கலைக்கிறேன். நீயாதொன்றுக்கும் அஞ்சத்தேவையில்லை தேவேந்திர மகாராஜனே.

தேவேந்திரன்-மன்மதனுக்குச்சொல்-வசனம்,

எந்தவிதமாகினும் அவர் தபசுதையழித்து மங்களாக்கவேணு மெங்வாமி,



மன்மதன்-படைத்தலைவனுக்குச்சொல்-கவி,

படைத்தலைவீரா பனிவெள்ளிமலையில்
முடுக்குளமீசன் முயற்றவமழிக்க
சடுக்கெனச்செல்ல சமுதியிற்காமப்
படைத்தலமனைத்தும் பரிவுடனழைப்பாய்

படைத்தலைவன்-மன்மதனுக்குச்சொல்-வசனம்,

அப்படியேதேவரீருத்தாரப்படிக்கு அழைப்பிக்கிறேன் சுவாமி,

படைத்தலைவன்-அரம்பை-மோனகை-ஊர்வசி-திலோத்தமை இவர்களுக்குச்சொல்-கவி,

அதிருபச்சித்ர மனைந்தமாதர்களே
மதனனுருங்களை வரச்சொன்னார்வருவீர்

பெண்கள்-படைத்தலைவனுக்குச்சொல்-கவி,

அட்டியொன்றுண்டோ அப்படியேயிதோ
திட்டமாயவருவோஞ் சொல்லுவீரையா

படைத்தலைவன்-மன்மதனுக்குச்சொல்-விருத்தம்.

செம்மசாகரத்திலின்ப செயங்களைக்கொடுக்கும்மாவின்
நன்மனத்தினிலுதித்து நறைபொழிகரும்பெல்லாருந்தம்
விண்ணையோனமையில்மிகுந்த வீரமேயெங்கள்கோவே
மன்மதப்படைகளெல்லாம் வருமுடன்வந்ததையா

வசனம்.

கேளுமையா சுவாமி ராஜராஜேஸ்வரா மன்மதப்படைகளெல் லாம் வந்ததையா சுவாமி,

மன்மதன்சொல்-தரு-இ-ம்-புடாணு-தாளம்-இரிபுடை

பல்லவி.

தவத்தையழிப்போம்வாரீர்
நாரீர்நங்கைமாரே-மங்கைமாரேயிவள்
தவத்தையழிப்போம்வாரீர்

அநுபல்லவி.

தவத்தையொழிப்போம்பொன்னுலகத்துத்திலஞ்சமிஞ்ச
பரிகத்தவமோ புனைமதிமுடி-
மருவுந்தெழில்சேர் சடையானிட (தவத்தை)

சரணங்கள்.

வெள்ளிமலையையடைப்போம்-தனி
விப்தெனுடாமுதியினைத்தரும் (வெள்ளி)

காலகாலன்போல் வேணுகானந் தொடுப்போம்
இன்னிசையுடனங்கிளிப்பின்னை யிசைபாட
இளையபொற்குயில்கூவிட் டேவலொரு
முனிக்கிளையவியே நொடியினில் (தவத்தை)

மாம்பூவினையயேந்தி மரு
மட்டகலாவெட்டிவெளுமொழியில் (மாம்பூ)

பாகிலான்மீதில்மலர்த்துபின்றுலைதொடுத்து
தேம்பவிசோலைத்தேரித் தப்பக்கத்தினில்
இலையிலின்றுலகோகிபோக்கிட
அணிபெய்யாதியேகனிகடிட (தவத்தை)

முல்லைக்கிளைகளோவியே தாரன்
முன்னிலையினின்னையயாத்திரு (முல்லைக்)

மோனப்பிலங்கமோகப்பொடிகளதூவியே
அல்லைப்பட்டமெய்கள்மெல்லச்சோர்த்திட
அரமங்கையர்நடமாடவிருல்
முரசெக்கலைமுழுமாவொலிமிதித் (தவத்தை)

மன்மதன்சொல்-பரணி-இ-ம்-திலாம்புரி,

அரம்பைமேனகையூர்வசி அழலில்மிகுந்ததிலோத்தமையே
வடமயில்விருதுவேலியவர் வஞ்சத்தினைபெருமைகாணீரோ

மாறுங்கலைகள்பிம்பங்கள் மதத்தாரிகள்பாளிமுதக்
காலப்புலிகள்பாடியெல்லாங் களித்தோடுவதைக்காணீரோ

மல்லிகைமுல்லையிருவாட்சி வடிவில்மிகுந்தசெண்பகங்கள்
வெலிருங்கொன்றைவாகைகள் விகமதனைக்காணீரோ

திலோத்தமைதங்கள்தாமரைகள் நிறைந்தவல்லிக்கொடியோடு
மாலோதிமையாஞ்சலமோடும் பரந்தடாகங்காணீரோ

அண்டருலகக்கொழுந்தோட அக்கினிமத்தியினில்நின்று
தெண்டிக்காவிற்றவஞ்செய்வோர் உறுதியதனைக்காணீரோ

கின்னரர்கிம்புருடர்யோகிகள்வேதன்முதலோர்முனிவர்தொரு
தேவர்ணீதனித்தனிவன்வாழும் வெள்ளிமலையைக்காணீரோ

வெள்ளிமலையிற்பிரமதை வேண்டிக்கிவனற்செய்தவத்தைக்
கள்ளவிழியார்ப்பையோ கல்லுறுலதனைக்காணீரோ

பொங்குஞ்சிவனூர்தனக்கேற்ற வேண்டும்பணிகள்செய்வதற்குப்
பெண்மக்கிரியாருமையாளும் பக்கத்திலேகாணீரோ



பன்றுகத்துமுடிகுலவும் பாரையனைத்துஞ்சுட்டெரித்தான்
தன்றுடைதலிலனல்வீசுந் தவத்தினுறுதிகாணீரோ
ஆலகாலமுடகெருப்பு மடவியனைத்தும்விசுடரும்
காலகாலன்றவஞ்செய்யுங் கனலுக்கொப்பாகாணீரோ

வசனம்,

ஆ-ஆ-அரம்பைமாதர்களே இந்த வனங்களிருக்கிற அழகும் இந்தப்புஷ்பங்கள் வீசுகிற வாசனைகளும் இந்த ரிஷிகளுடைய ஆசிரமங்களிருக்கிற சிங்காரங்களும் இந்த தபசிகள் செய்யும்படியாகிய தவங்களுடைய உறுதியும் இந்த வெள்ளிமலையிருக்கிற அலங்காரமும் இந்தப் பரமசிவன் செய்யும்படியாகிய தபாக்கினியும் அவரிருக்கும்படியாகிய சிங்காரங்களும் நானென்னவென்று சொல்லி வர்ணிக்கப்போகிறேன் பெண்களே.

மன்மதன்சொல்-மத்தியம்-இ-ம்-புந்நாகவராளி,

சந்திரனும்பருதியுஞ்சலமுடன்றம்பையுஞ்
சரக்கொன்றைநதியும்பன்றசடிலமழகும்
கண்களும்புருவமுமங்கமழ்நாசிகாவுடன்
கனிவாயுமொளிர்முகமுமலையழகும்
கள்ளமான்மழுகுலங்காலபாசத்துடி
கபாலமுமேந்தியகையினழகும்
இன்பமாய்க்கானகத்திடையினில்மேவிவாழ்
இனியவேட்புலித்தோலின்இடையினழகும்
காசினமுகுக்குலகத்திலேதவம்நிராய்
ஓதவரிதானவொப்பிலாவுண்மையான்மேல்
சாலமாரம்புவெய்வதற்கெந்தன்மனது
பேருறுவாவில்லையிதற்குநானென்னசெய்வேன்

வசனம்,

ஆ-ஆ-பெண்களே இந்தச்சாம்பசிவன்பேரில் என்னுடையபுஷ்பபாணங்களை எய்யவேணுமென்றால் என்மனம் ஒருமைப்படவில்லையே இதற்கு நானென்னசெய்வேன் பெண்களே.

மன்மதன்சொல்-தரு-இ-ம்-பைரவி-ஆதிதாளம்

பல்லவி.

மனமே நினைப்பதென்னகணமே

அநுபல்லவி,

மனமேயாசன்செய்யாதவாமுதித்திட
வந்துமிந்திடந்தந்தபின்வாங்குவதேனோ்தன் (மன)

சரணங்கள்.

இந்திரன்மாதவநிலை சொற்கேட்டுமுன்னம்
இந்தஇடத்தில்வந்து பிந்தினைப்தென்ன
விந்தைதவினைத்திடினுஞ் சற்றுமொடாமல்நின்று
வெல்லவுமரியமல்லாற்செல்வதுகாரியமோசொல் (மன)
பைங்கிளிரதிசொல்லைப் பொங்கமுடன்விடுத்து
சங்கரன்றவநிலையைத் தங்கமுடனெடுத்து
இங்குவருவேனென்று அங்கேநீசொல்லிவந்தாய்
எந்தவிதத்திலும்வென்று நிந்தைமகிழாமல்நின்று (மன)
விந்தைவகுக்குமுனி தந்தசாபமது
வந்ததென்றுலகத் தெந்தவிதமோவது
அந்தவிதமாய்க்கட்டி முந்துநிலையைக்கிட்டி
அந்தன்றபசழிக்காமற் சிந்தைமயிடையதென்ன (மன)

மன்மதன்சொல்-தேவாரம்,

சிவசிவாவென்னசெய்வேன் சித்தையுமதியுங்கெட்டு
அவமதியாலேயாறு மதிக்கிறதனைக் கண்டுவந்தேன்
இவர்செய்யுங்யோகந்தன்னை யென்னமாயமழிக்கக்கூடும்
தவத்தில்லாமற்காப்பாய் சங்கராபோற்றிபோற்றி

மன்மதன்சொல்-மத்தியம்-இ-ம்-கெண்டா,

கேவெணாநாற்கண்மேற்கோபிக்குமனதுக்கு
ஒருமையாயொருநூறுகோடிசரணம்
திரிபுரமெரிசெய்த திருநகைகண்ணுக்கு
இனிதுடனிருநூறுகோடிசரணம்
அடியவர்பலவினை அறுத்திடும்வாளுக்கு
முகமுனிமுன்னூறுகோடிசரணம்
தமன்விழவுதைத்திடும் நடனபாதத்துக்கு
நவிரண்டிருநூறுகோடிசரணம்
சரணஞ்சரணமென்னையாட் கொள்வதுந்தன் கடனே
மலர்க்கணைகளெய்தேனென் றன்மனதிலெண்ணி
வினைகள்நினையாதே நினையாதேவேதமுதலாய்
அடியைத்தேடுதற்கரிதானவமரர்முதலே

வசனம்,

ஆ-ஆ-பெண்களே யிதோவொரு நிமைக்குமுன்னே என்னு
டைய புஷ்பக்கணையினாலே இந்த பரமசிவனுடைய தபநிஷ்டையைக் க
லைத்துப்போடுகிறேன் பாருங்கள் பெண்களே.



மன்மதன்-கணைதொடுக்கிற-தரு-இ-ம்-புந்நாகவராளி-அடதாளம்

பல்லவி,

இதோபார்தாமரைமலரொன்றுநற்கணைகள்கையில்
இதோபார்கணைகள்விடுத்தேன்

அநுபல்லவி.

இதோபார்தாமரைமலரொன்றுநற்கணைகள்கையில்
எந்நினைவுஇல்லாமலெல்லாம் காந்தமேசெய்திடுமேனி
இலகுசிவதவநிலைகள்கலையவே
வலியதிறமுள பரியுங்குலையவே (இதோ)

வசனம்.

ஆ-ஆ-பெண்களே என்ன நான்விட்டதாமரை அஸ்திரம்போன
வழி இன்னவழியென்று தெரியவில்லை ஆச்சுது.

தரு.

விட்டஅர்புதன் போனவழிதெரியவில்லை
விழுநாட்போனால் வேறென்னயில்லையோதொல்லை
சட்டமானமாம்பூ தொட்டுசெங்கரும்பினிற்
சாந்தியேகாதள்வகை யேத்திடியேபுகழ்பெறவே
சமையமிதுவிட அமையுமிதுவொரு
நிமையிலெனஇட வறுமையதியலே (இதோ)

வசனம்.

ஆ-ஆ-பெண்களே இப்போது மாம்பூ அஸ்திரம் விட்டேன் அ
து சாம்பலாய்ப் போனதுபோலத் தோற்றுது ஆறுலென்ன.

தரு.

மாம்பூகணைகள்விட்டேன் சாம்பலாயதுபோச்சே
மன்மதத்தையொழுப்பு மிதுஅசோகுமாச்சே
சிம்புகணைகள்விட்டுத் தெம்பத்தெம்பநிவன்
வெற்றியாய்ச்செய்யப்பேத்தம சித்தனையுங்கலக்கவே
வந்தயோட்டமாக்கள் முனிவ புகழவே
பக்கிரிணிதட்ட னதிகவினை யுடன் (இதோ)

வசனம்,

ஆ-ஆ பெண்களே இதென்ன ஆச்சரியம் தாமரை அஸ்திரமும்
மாம்பூ அஸ்திரமும் அசோகா அஸ்திரமும் இந்த மூன்றுகணைகளும்
விட்டேன் அது விருதாவாய் பஸ்மீகரமாய்ப் போய்விட்டதுபோல
த்தோற்றது ஆறுலென்னமாச்சுது இந்த முல்லைக்கணையினாலே எவ்வி
தத்திலும் சிவனுடைய தவநிஷ்டையைக் கலைத்துப்போடுகிறேன் நீங்க
ளெல்லோரும் அப்புறம் நீந்தியிருங்கள் பெண்களே.

தரு.

தப்ப அசோகுபோலால் வெய்ய மனல்திறல்
மையல்மிகவெதாரும் செய்யமுத்லையிலைல்
செய்ய அந்திவண்ணன் மாய்த்தபினை
செப்பினையே படியாதி வாய்ப்பட்டக்கவிக்குகப்பார்
செயமுயிக்கிவரும் பயமுமில்லயடி (இதோ)
தயவிக்கெடுக்காமடி அரிகையமோயினி

விலக்சொல்-வசனம்.

அசோகிவதிவா-அரவிந்தவிவா-மகரிவவிவா.

பொது-விருத்தம்.

பூங்காவெய்யவெள்ளிப் பொருப்பினிற்றிவங்கண்ணுடலே
தாங்கியதவனந்திருப்த் தனித்திடமதனைநீத்தாய்
ஓங்கியமயிலிட்டிக் கொடியிலை பொன்னனை
பாக்குள்ளக்கண்மையெல்லாம் பாக்கியர்க்குரைப்பதாளுள்

கட்டியக்காரன்சொல் வசனம்.

அதோ தெப்படியென்றால் மன்மதராஜனைவீ புஷ்பபாணங்களைச் சிவன்பேரில் எய்த மாத்திரத்தில் சிவனானவர் கோபம்பிறந்து மன்மதனை யெரித்துப்போட்டார் இப்படியிருக்கத் தாம்பத்தியநாசத்தில் ரதியானவள் கனவு கண்டு திடுக்கிட்டு விழித்து எழுந்து தாதிகளுடனே சொல்லுகிற விதங்காண்க.

ரதி-தாதிகளுக்குச்சொல்-விருத்தம்-இ-ம்-செஞ்சுருட்டி.

என்னுடைய மனதிற்கேற்ற இயல்புள்ள தோழிமாரே
இன்னைய இனைத்திறக்கண்டு தெண்டராசன் கண்டதில்லை
கன்னலாரசித்த தப்ப கரும்புவில்லாளனையே
என்னமாமிசன் கண்ணால் தீயாக எரித்திட்டாரே

வசனம்.

அடியம்மாதோழி அதிருபலத்தோம் நான் இன்றையதினத்தில் கண்ட கனவைப்போலே எங்குங்கண்டதில்லை அந்த ஆச்சரியத்தைச் சொல்லுகிறேன் கேளுங்களம்மா தோழிகளே.

தோழிகள்-ரதிக்குச்சொல்-வசனம்.

அப்படியே சொல்லுமம்மா ரதிதேவி.

ரதிசொல் தரு-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்

பல்லவி.

அன்டமா தோரதானுங் கண்டகனவினை
அதிசயஞ்சொல்லக்கேளடி.



அநுபல்லவி.

என் டிசை நதி தப்ப புண்டரீகன்புகல்வன்
அழிலாயிவிட்டவி பெரியவர்பொன்புவிதே (அன்ட)

சரணங்கள்.

மன்மவிக்கையில்லா முனிவர்தேவர்களுமம்
இன்பமுள்ள சபைக்கு அப்புடனே போவ
அன்னலிடதேவேந்திர னெதிர்கொண்டுவந்து
அகரத்துடனேயவலனிவரி மனமகிழ்ந்திருக்கிறபோது சரவணன்சொல (அ)
மன்மதபோதகையால் மன்மதராஜனுந்தன்
மனதின்படிமுடிப்பே னெனவெழுந்திருந்து
ரதிதானையைகொண்டு சிவனிடமதிலே
பாங்குநற்றொழில் படைபுடைசூழ
நீங்கமதிருக்கின்ற சிவனருகிலே செல் (அன்ட)
வெள்ளிமலையத்தில் வெண்ணீறணிந்து சிவன்
வெங்கணை விடவும் பொங்கமுடன் விழிக்க
கொள்ளிக்கண்ணாலே மதன் குபிலென்றெரிந்திட
சோதித்தமுதல் மாதரோக்கனவில்
போதுகண்டேனே இசையழகாடி. (அன்ட)

ரதி-தோழிகளுக்குச்சொல்-கொச்சகம்.

எப்படியென்றே முழிபோல் பின்னவிதயென்றதியோர்
ஒப்பிலா மதனைனைக்கு வராதிசெல்லிசென்றாயடி
வெப்பமிகுசிவனையே வென்றுவரக்காணவில்லை
இப்படியோ வென்விதி நிறுத்தனென்னமெய்யேனோ

வசனம்.

அடியம்மாதோழி அதிருபலத்தோம் என்னுடைய தலைவனை கண்ட விதத்தையும் அழித்து வருகிறேனென்றுபோன என் பிராணநாதனை இன்னம் வரக்காணேன் அது இன்னவிதமென்று தெரியவில்லை என்னுடைய தலைவிதி எப்படியோ நான் அறியேனடி தோழிகளே.

தாதிகளுக்கும்-ரதிக்கும்-தர்க்கம்-தரு.

இ-ம்-ஆனந்தபைரவி-அடதாளம்.

தோழிசொல்லல்.

கனவல்லதினாவிது என்னுடைய மொழியாதே
சனவன் வருவாரம்மா-கேளடியம்மா
சத்தன் வருவாரம்மா

க

மனதிற்கவலையென்ன மன்மதராசேந்திரன்
மனைவியானவெங்கள் மாதரசேயெழில்
மதியதனைக்கண்ட தாமலமெனமுக
வாட்டேனம்மா கேட்டையாயிரு (கனவல்ல)

ரதிசொல்லல்.

தினகரன்மதிருடுஞ் சிவமீசுரக்கனையெய்ய
திருநுதல்விழியாலே தீயாயெரித்திட
தெளியுமொளியனை யதன்சிறிசிறப்புந்
திருச்சுட்வேலையில் பெருக்கண்டது
கனவல்லநினைவென்று லெதிர்கண்டபொருள்போலே
கண்டதென்னடிசொல்வாய்-அடியேதோழி.
கண்டதென்னடிசொல்வாய்

தோழிசொல்லல்,

உந்தன்கணவன் றன்னை யுலகில்வெல்பவருண்டோ
உனக்குத்தெரியாப்போல வுருகியேனம்மாண்டு
உலகமுடிவிலும் பயமுமிலையடி.
உத்தமியிதுநித்தியமாமடி (கனவல்ல)

ரதிசொல்லல்.

எந்தன்கணவன்பல பேர்க்குத்தெரிந்திட்டாலும்
ஈசன்முன்னில்நிற்க வெவராலுங்கூடுமோ
இதனையறியாமல் மதனும்பொடிபட
எந்தனித்திரையில் விந்தைகண்டது (கனவல்ல)

தோழிசொல்லல்.

அண்டமெண்டிசைகளும் அன்றுக்குத்தட்டாமல்
அருந்தும்விஷத்துடன் பெற்ற அம்பரன்றனைவெல்ல
அரவபூஷணன் சிவபிரலவாறே
அதனைவிலக்கடி யிதுவேதிலையடி (கனவல்ல)

ரதிசொல்லல்,

அண்டமெண்டிசைகளுமுண்டவாயினின்ற
அங்கசனுடவொளிர் செங்கருப்புதனுசும்
அம்பலனிடம்விழினர் பொடியதாய்
ஐந்துகணைகளுஞ்சிந்தக்கண்டது (கனவல்ல)

தோழிசொல்லல்,

சொல்லச்சொல்லவுனக் கின்னந்தேறவில்லை
சுத்தவீரனென சித்தஜன்பால



சுதனையொருநொடி யதனில்வருகுவர்
சும்மாயிருமம்மா விம்மியழுகாதே (கனவல்ல)

ரதிசொல்லல்,

சொல்லப்போகுதில்லை யின்னந்தேறுவதில்லை
வல்லமன்மதராஜன் நல்லதேரிலேறுடே
சோமசடையின வீமவிழியினுற்
சுத்தமெழிலெல்லாம் பத்தக்கண்டது (கனவல்ல)

தோழி ரதிக்குச்சொல்-கொச்சகம்.

ஒப்பெங்குமில்லாத வுத்தமிநற்பத்தினியே
செப்புகனவிதல்லாற் செகமதிமுன்கணவன்
இப்போதுயிங்கிருந்து யிவ்விடம்விட்டேகியதால்
தப்புமுந்தனித்துணையிற் றங்கும்நினைவிதம்மா

வசனம்,

பெருந்தாயே ரதிதேவி உன்புருஷனைப்பிரிந்த சோபமானது நித்திரையிற்கண்ட கனவைப்போல விருந்தது அது கனவல்ல உன்புருஷனைப்பிரிந்த நினைவம்மா ரதிதேவி,

பொது-விருத்தம்,

தாதியர்கள்கூடிரதி தேவியைத்தேற்றும்
தருணத்தில்மாவொளிர்த் திட்டமேனி
பூதலம்விண்புவியெல்லா மறியச்செய்து
புங்கவருர்பெற்றெடுத்த புதல்வருள்ளோன்
வேதமுதற்கலைகளெல்லா மாராய்ந்திட்டோன்
விண்ணவரெல்லாந்துதிக்கும் வீணைவல்லோன்
மோதுகணைமதன்தேவிக் கிதனைச்சொல்ல
முக்யமுள்ளநாரதமா முனிவர்தாமே

கட்டியக்காரன்சொல்-வசனம்,

அகோ கேட்பபடியென்றால் தாதிகளானவர்கள் ரதிதேவிக்குத்தேறுதலை சொல்லும்படியாகிய தருணத்தில் மன்மதராஜன் எரிந்துபோன சேதியை இந்தப்பூமி யாகியத்தமும் அறியப்படுத்தி மன்மதராஜனுடைய தேவியாகிய ரதிதேவிக்குஞ் சொல்லவேண்டுமென்று நாரதமாமுனிவர் வருகிறவிதங்காண்க.

நாரதர்வருகிற-தரு-இ-ம-புந்நாகவராளி- ஆதிதாளம்

பல்லவி.

நமோநமோநமசிவாயாவென்றமே துதிசெய்து
நாரதமுனிதானிதோவந்தார்

அநுபல்லவி,

உமைபாகனிடமாதி லனைவரையுமியைவொழிய
உலகிற்பல வுயிருளதாக்கவர்
நினைத்திடைக்கடரோர்ப்பிறர்வர் (நமோ)

சரணங்கள்;

சடைமுடிதலையதனிற் றரித்து-காதினிற்குழைய
நவரத்தினகுண்டலமு மணிந்து
இடையிற்றருமணி-நிலவுமுத்திரம்பெரி
இசைநம்பர வெளிபிறக்க
சகமுந்நிற பனையேத்தவர் (நமோ)
மாமதிலருளினை யெடுத்து-தோளினிற்செய்ய
காவிவஸ்திரமதை யுடுத்து
பாம்பைநடையினின்றாங்கு மாயதனிலேயென்றும்
படியின்புவி யதுதந்தவ
வாட்டமுந்தவமதிலைத்தவ (நமோ)
சிலைவளைமாமேருவதை மேதி-பெருமைபெற்றத
செம்மைக்குயதியவேயோதி
வலைவிலாசாத்த பெண்களைக்குத்தாரிக்க
விடைநந்தவனி நதியிலேறுமை
யிடையொன்றாகவைபனையிற்சொல (நமோ)

நாரதர்-ரதிக்குச்சொல்-போற்றி விருத்தம்,

என்னிடமாதேபோற்றி யென்னைப்பெற்றவளேபோற்றி
வன்னமாதங்கினியேபோற்றி வரமளிக்குயிலேபோற்றி
பன்னிருமுடிமாலையணியுடும் வடிவள்ளாதியேபோற்றி
தன்னிகரில்லாவுத்தமமாமாதடியேபோற்றிப்போற்றி

ரதி-நாரதருக்குச்சொல்-வாழிவிருத்தம்.

என்னிடமகவேவாழி யென தருத்தவமேவாழி
என்னிடகண்ணேவாழி யென்குலக்கொழுந்தேவாழி
என்னிடவேதஞ்சொல்லும் பயமெலாமுணர்ந்தாய்வாழி
நன்னயப்பொருளேவாழி நாரதமுனியேவாழி

ரதி-நாரதருக்குச்சொல்-கொச்சகம்.

எந்தனிடமனமேயே யென்மகனேநாரதனே
உந்தனிடமுந்தையை யெப்பொழுதும்விட்டீ



விந்தைதவமழித்து வெந்துவாக்கானேனே
வந்தபலிக்கையோனை கண்டதுண்டோசொல்வாயே

சரணம்;

அப்பா என்மகனே நாரதமகாமுனியே உன்பிறியதந்தையான வர் பரமசிவனுடைய தவத்தை யழித்துவருகிறேனென்றுபோனவன் னுடைய பிராணநாதனை இன்னும் காணேனே எங்கேயாகிலுங் கண்டதுண்டோ சொல்லப்பா நாரதமகாமுனியே;

நாரதர்-ரதிதேவிக்குச்சொல்-கொச்சகம்.

வெற்றிமிகுவொப்பனைகள் வேணதெல்லாந்தான்கடந்த
சித்திரவடிவல்லிருக்க திருநீர்க்குமென்றுமே
புத்திமிகவேகலங்கப் புஷ்பகணையேவிடவுஞ்
சித்தசனையீசன்விழித் தெரித்தாரே

வசனம்.

கேளாய் என்தாயே என் பிறியதந்தையாகிய மன்மதராசனுனை வர் வெள்ளியங்கிரிக்குப்போய் பரமசிவனுடைய தவநிலையைத் தன் னுடைய புஷ்பகணையைவிட்டு கலைத்தார் அதனால் பரமசிவனுக்குக் கோபம்பிறந்து நெற்றிக்கண்ணாலே மன்மதராசனை எரித்துப்போட் டாரம்மா ரதிதேவி.

ரதிசொல்-விருத்தம்-இ-ம்-செஞ்சுருட்டி.

ஐயையோபிராணநாதா யானினியென்னசெய்வேன்
மெய்யவுன்முகமுமார்புந் தோள்களுங்காண்பதெப்போ
உய்யவோர்வழியுங்காணேன் உருத்தமாயென்னையிந்த
வையகப்பெண்களேசமதுநதிநிறுத்திட்டாயோ

வசனம்.

ஐயையோ பிராணநாதா இனி இந்தப்பூமியில் எப்படி உயிர்த ரிப்பேன் உன்னுடைய முகமும் விசாலமாகிய மார்பும் இரண்டுதோ ள்களும் எப்போது காண்பேன் எனக்கு ஒருவழியும் காணவில்லையம் மம் இந்த பூமியிலுள்ள பெண்கள் என்னைப் பரிகாசஞ்செய்யவும் விட்டுவிட்டு எரிந்துவிட்டீரோ என்பிராணநாதா.

ரதிபுலம்பல்-கண்ணிகள்-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்,

என்னசெய்குவேனையோ யென்னசெய்குவேனினி
யென்னசெய்குவேன் பிராணநாதா
மன்னர்போற்றுடல்மீது வாழுமாலயத்தினில்
வந்தருளாயோவுடன் பிராணநாதா

சின்னவயதிலென்னை விண்ணவரோடுவந்து
சிறப்பாய்க்கொட்டீர் பிராணநாதா

இன்னவிதிகாணவோ பொன்னேநீர்மாலையிட்டு
பெங்கேயோவிருந்தீர் பிராணநாதா.
கொடியில்லாமல் என்னுறு குறையுமென்றறிகிலேன்
பெற்றவனேயென் பிராணநாதா

இந்திரன்றாதனுப்பிறு விசன்றவமழிக்க
யென்றுசொன்னீர் பிராணநாதா
இந்திரன்றாதுமிப்போ துவந்தனைகொல்லவந்த
யேடன்றாதாக்சே பிராணநாதா

பாமன்றவமழிக்கப் பண்ணிந்துன்றுவானதென்று
படித்துச்சொல்லீரே பிராணநாதா
அதியருமிருக்கநான் நினைவெல்வெவென்றுபோய்
அமைவெயிந்தீர் பிராணநாதா

பெண்ணைசேயெத்தன்சொல் பிசாவென்றுமிவும்
பிரியாய்ச்சொன்னீர் பிராணநாதா
பெண்புத்தியையுமான் பின்னைகேட்பேனேறவென்று
போயெரித்தீரே பிராணநாதா

தேவரமசர்சொல்ல பிரமென்றுநட்பிவெளிவிக்கு
திருமனைசென்று பிராணநாதா
மூவிமுதல்வன்மீதில் முல்லைக்கணைவிடவும்
முனிந்தெரித்தாரோ பிராணநாதா

என்றப்பிரியெனென்று மன்னறாவின்னாதியே
பேதேதோசொன்னீர் பிராணநாதா
இன்றபிரிந்தெதன்னை பெத்தன்விவெசபோ
யெய்தாவதியேன் பிராணநாதா

தோழிகள்-ரதிக்குச்சொல்-விருத்தம்,

உத்தமிபெற்றதாயே யுன்பனமிடேவமுற்றால்
இத்திசைநகருப்பாழு மென்செய்வோம்தம்பமோராய்
தக்கதேர்மொழியயுத்தன் தப்பியம்விட்டோதே
பத்தினியாக்கேபென்னும் பழுதுகள்வாராதம்மா.

வசனம்,

இ-அம்மா ரதிதேவி நீயே யிப்படி இலைச்சப்பட்டால் இந்தப்
பூமிம் பட்டணமும் என்னபாடுபடாது நாக் . என்றா மனைன்மசெய்



லாம் உன்மனைநின் காரியத்தை விட்டுவிடாதே பத்தினிமார்களுக்
கு பொதொரு பழுதுகளுநீ வாராதம்மா . ரதிதேவி.

ரதி-தோழிகளுக்குச்சொல்-அகவல்

இ-ம்-ராகு வக்கிரபோதி.

அன்பாகதோழியென் வம்மாகளிரகாள்
இன்பமாய்ப்பருவமே யிழந்தப்புவியிலே
உயிருடனிருப்பதோ வுத்தமிமார்கள்
தயிரியமெனக்குத் தரிக்கச்சொன்றுமே
வயிறதைப்பதுதே பாதமோமின்னலூ
செயலாவதென்னவென் சிந்தைதலங்கி
மனமதுவெந்துநோக மன்னனைக்காணுமல்
தனியிலாக்குயிலன் றயங்கிவாடுதே
இசைபெறுமன்னவா இருந்தமுகுதே
வசையிலாப்பூவையும் வசனிப்பைவிட்டுதே
வாசபூமலரெனும் வாசனைபறந்துதே
தேசத்திலின்பத் திட்டமைவத்ததே
பரிக்குமாமண்டபம் பாழாய்க்கிடக்குதே
வளர்பெயரோரா வாசல்பாழாச்சுதே
மந்தருர்போச்சுதே மங்கிலியுந்தறுதே
பிஞ்சுவசனமுதல் வெம்பிடதுறுதே
என்னனைவிருந்து யிப்புவிதனிலே
மன்னவைப்போலயிசி வாழ்வனெறுநானும்
என்னுயிர்விடுவே வினைகளைநதனிலே
தன்னிகரில்லாத் தாதிகளோதே

தோழிகள்-ரதிக்குச்சொல்-விருத்தம்.

திருவளர்குழலே பைய தேசன்னாடுவேடுசிய
மருமலர்த்தமைபத்தாரோன் மன்னறுரிடந்திற்சொன்னால்
பெருமையதுபோவெல்லாம் போக்குவாரானையால்நாம்
விரைவுடன்விஷ்ணுவுக்கு விளம்புவோம்வாருமம்மா.

வசனம்.

இ-அம்மா ரதிதேவி நாங்கள் சொல்லச்சொல்ல மிகவும் விசன
ப்பட்டா லெப்படி மனபோலையைத்தரித்த உன்மாமனை திருக்க உன
க்கொருகுறையும் வாராது மேலும் உன்விசனங்களை யெல்லாம் தீர்
த்தவர் அவையால் சீக்கிரமாய் ஸ்ரீமகாவிஷ்ணு விடத்திற்குப்போய்
ஆவார் அவையால் சீக்கிரமாய் ஸ்ரீமகாவிஷ்ணு விடத்திற்குப்போய் வாருமம்மா ரதி
நடந்த விர்த்தாந்தங்களையெல்லாம் சொல்லுவோம் வாருமம்மா ரதி
தேவி.

ரதி-தோழிகளுக்குச்சொல்-வசனம்,

அப்படியேபோய்வருவோம் வாருந்தோழிகளே,

ரதி-மகாவிஷ்ணுவுக்குச்சொல்-போற்றிவிருத்தம்,

சீராமுகுந்தாபோற்றி திருமகள்கொழுநபோற்றி
பூமடந்தாய்போற்றி புண்டரீகாட்சாபோற்றி
சீதளமலரில்வாழும் திருவெனுமாதேபோற்றி
மாதவன்மார்பில்மேவு மாமியும்மாதம்போற்றி

விஷ்ணுவும்-லட்சுமியும்-ரதிக்குச்சொல்-வாழிவிருத்தம்.

சங்கவெல்வரத்தாற் சௌமியசங்கமாமுனிதத்தால்
மங்களபாசவரத்த மங்கையேவாழிவாழி
எங்கள்தன்மனைக்குகந்த வெழின்மணிவிளக்கேவாழி
அங்கசபதியுஞ்நீயும் அநுதினம்வாழிவாழி

விஷ்ணு-ரதிக்குச்சொல்-விருத்தம்,

பதிவெலாந்துதிக்குங்கய்ய பாலகன்மனைவியான
ரதியெனுங்கிளியேயுன்றன் நல்மருமகளேநீயும்
சதகோடிமாதர்சூழத் தாரிகைநகரம்விட்டு
மதிமுகம்வாடியிங்கே வந்ததையுரைசெப்பாயே

வசனம்,

இந்தபூமியாதியர்களைக் காக்கும் என்னுடைய பாலகனாகிய மன்மதனுடைய தேவியாகிய ரதியே நீ-நாலகோடி சாதியர்கள் சூழத்தக்கதாய் மகாவேகத்தோடு தாரீபுரகரம்விட்டுப் பிரகாசம்பொருந்திய உனது திருமுகம் வாட்டத்தக்கதாய் இங்கேவந்த காரியத்தை தெரியச்சொல்லும்மம்மா என்மருமகளே.

ரதிசொல்-புலம்பல்-கண்ணிகள்-இ-ம்

நீலாம்புரி-ஆதிதாளம்,

அரசுமண்டபத்தினிலிருப்பவிசித்திரன்
அரசுசெய்திடும்போது-மாமா
சராசுவித்திரன்விட்டகடிய தூதர்கள்வந்து
சண்டாளமன்னவனை-மாமா
வெட்டிருந்தவத்திமொழிந்தவசோதியொன்று
யிசையாகக்கேட்கும்போது-மாமா
தவளவெண்குடைபிடித்தன்றனியிலானைப்பிய
காரணர்தாங்களென்றார்-மாமா



என்னாரியமாமயித்தமிடத்தில்வந்து
சொன்னசொல்லென்னகேழுங்க-மாமா
வன்னசிவன்செய்தபசதனையழித்துயித்தன்
வரச்சொன்னதென்றாரே-மாமா
சொன்னசொல்லாக்குமுன்னேநாதருமுள்ளமிராண்டதனால்
சுழற்காயெழுந்திருந்தார்-மாமா
அந்தம்பண்டமெல்லாந்துரந்தெழுந்திருந்து
சுடர்க்காய்வரச்செய்தாரே-மாமா
சங்கைபுனைமதியுந்திருத்தரித்தசிவன்
கனத்தநவமழிக்க-மாமா
மங்கையரேயெனக்குள்ளதுவந்ததிலவு
மாதேநீதாடியென்றார்-மாமா
எடுத்துமலர்க்கணைகளைவித்தடித்த
வெரிப்பாருத்தமேவென்றா-மாமா
படிக்குப்படித்தாநம்பாரபத்திகளெல்லாம்
பணிந்துமிகவேசொன்னேனே-மாமா
அபையமெனவந்தோகையநிறைமுங்கார்ப்பேயென்ய
அரியருவிருக்கச்சே-மாமா
உமையவிலுற்றபங்கயொழிந்துவருவேனென்று
வுமுதியாய்ச்சொல்லிச்சென்றார்-மாமா
நாதன்வத்திப்போதுநடனசிவன்கண்ணுமே
தனமாயெரிந்தானென்றான் மாமா
நாரணவேவுனதுநனிபாதமேகதி
நானென்னசெய்குவேன் மாமா

விஷ்ணு-ரதிக்குச்சொல்-கட்டளைக்கலிப்பா.

ஈசனிசவ்வனிமீதெனமான் வெந்திட
வென்செய்வேனல்விறைவிட்டிரில்
வாசமாரன்றன்வல்வினையேயிடில்
வருள்புரிந்துவெழுப்பித்தருகுவார்
ஆரிலாதவன்றன்னைதமுதலுள்ள
அருந்தவத்தினராகியவுத்தமே
மாசிலாதசயிலைக்குயிட்சனம்
மங்கையேயிவருகுவாய்வாழியே.

வசனம்,

அம்மா ரதிதேவி உன்னுடைய நெற்றிக்கண்ணிறைவே மன்மதன்எரிந்தானு (சிவசிவா) அவரப்படி வெரிந்தால் நான் என்னுடை

ய்குவேன் ஆகிலும் நீ சின்னமாய் உன்தகப்பன் முதலாகிய பெரியோருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு நல்லவளிடத்திற்குப்போவையேயானால் அவர் உன்முகத்தைப்பார்த்து மன்மதனை யெழுப்பித்தருகுவார் யாதொருகுறைவுமில்லை போய்வருவாயம்மா யென்மருமகளே.

ரதி விஷ்ணுவுக்குச்சொல்-வசனம்.

சரணஞ்சரணம் அப்படியேபோய்வருகிறேன்மாமா,

ரதிசொல்-தரு-திம் காம்போதி அடதாளம்,

அன்னையைப்போலென்னை அருமையாய்த்தாய்ப்பார்த்த சகிமாரே
எந்தன்-அன்னைசதாசிவன்செய்தவபசாரந் தோழிமாரே
பின்னமில்லாமலேபெருமையாயிருந்தேனேசகிமாரே அந்தப்
பெருக்கமெல்லாமிப்போயிந்தக்குவிந்ததோ தோழிமாரே
சின்னஞ்சிறுமதியைச்சிரசதனிலணிந்தவென்னையே சகிமாரே சென்று
சிவனிடவிழியினுற்றீயாயெரித்தாரோ தோழிமாரே
இந்நிலந்தனிலுள்ளயென்னைப்போற்பெண்களுந் தோழிமாரே
பார்த்தால் ஏளிதஞ்செய்வாரோயென்னநான்செய்குவேன் (பாங்)
அல்லும்பகலும்நல்லஅதிவுகள்செய்வாரோ சகிமாரே-அந்த
ஆறுலவழகனைஅறுப்பித்தவிக்கிறேனே பாங்கிமாரே
கல்லுமுருகுமேகண்ணாளனைக்கண்டால் தோழிமாரே-எந்தன்
கருத்திற்கிசைந்திட்டகட்டழகராசனே சகிமாரே
பத்தியெரியுதேபாழ்நெஞ்சுருகுதே சகிமாரே-எந்தன்
பத்தாவுமில்லாமற்பாவிநானிருந்தென்ன தோழிமாரே
சித்தமயக்குதேசிந்தையும்வாடுதே சகிமாரே எந்தன்
சித்தஜபூபதிதிருமுகங்காணாமல் தோழிமாரே

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அகோதெப்படியென்றால் ரதிதேவியானவள் தன் தகப்பனாகிய சௌமியசங்கம முனிவருடைய ஆசிரமத்திற்கு வருகிறவிதங்காண்க,

ரதி சௌமியசங்கமாமுனிக்குச்சொல்-போற்றிவிருத்தம்

நற்றவமுனியேபோற்றி நற்றவரரசேபோற்றி
சத்தியரிஷியேசௌமிய சங்கமாமுனியேபோற்றி
குற்றமொன்றில்லாவென்னைக்குணமுடனீன்றாய்போற்றி
எத்திசைபுகழுமெந்தனெந்தையேபோற்றிபோற்றி

சௌமியசங்கமாமுனி-ரதிக்குச்சொல்-வாழிவிருத்தம்,

இயமன்கைவெருட்டுந்தையயினியில்லாப்புயதகோளும்
அபமெனுமில்லாவுத்தனங்கசபதியும்வாழி



தபமிக்குமெய்யுவந்ததையலென்மகளேநீயும்
சுபமங்கில்யபதியாய்நாளுஞ்சுகமுடன் வாழிவாழி

ரதி-சங்கமமுனிக்குச்சொல்-போற்றிவிருத்தம்.

செகமிசைத்துதிக்குந்தற்பிற்செயசங்கமனேயேபோற்றி
அகமதில்நெறியிருந்த அரியமயக்காசேபோற்றி
இகபரங்கடந்தபெரியமுடிபத்தினியேபோற்றி
தகமையாயென்னைப்பெற்றதாயேஉன்பாதம்போற்றி

சங்கமமுனி-ரதிக்குச்சொல்-வாழிவிருத்தம்,

திருமருமகளேவாழி திக்கிலங்குயிலேவாழி
மருமலர்க்குழலேவாழி மதன்ரதிதேவிவாழி
பெருகமீமதிக்கத்தர்த்த நரவரத்திலெந்தன்
திருவயிற்றினிலுதித்த செல்வியேவாழிவாழி

சங்கமாமுனி ரதிக்குச்சொல்-விருத்தம்.

அப்பநற்குழலனைந்து கொடுமைதாமலர்ப்பாலே
வையகமுழுதும்வென்ற வல்லவன்றேவியேநீ
மெய்யெலாம்வெயர்வுதித்த வெட்கமேயழுதுகொண்டு
வையகம்தில்நடந்து வந்ததையுரைசெய்வாயே

வசனம்,

பரிசுத்தமாகிய கருணையவிந்து புஷ்பங்களை அஸ்திரமாகத்தொடுத்து இந்தப்பூமியைவதைக்கும்வெற்றி மன்மதராசனுடையதேவியாகிய ரதிதேவியே நீசுகமாகிய இந்தமுகம் வேர்வையுண்டாக விம் முகக்கொண்டு இந்தவிதமாய் நடந்துவந்திருக்கிற காரணம் லைக்குத்தெரியச்சொல்லம்மா ரதிதேவியே

ரதிசொல்-அகவல்-இ-ம்முகாரி,

பாசுபதம்பெற்றுத்தவத்திட்டு
அண்ணா நாக்கியெழிற்றவமிருந்து
மனமகிழ்ச்சியாகிய்ந்தெனைப்பெற்ற
சனகனேசௌமியசங்கமாமுனிவ
நடந்தவாறதனைநன்மையாய்க்கேளும்
இடம்பெறுதார்மீகமெனுநகரதனில்
அங்கசபதியுமணிமண்டபத்தில்
சிங்காசனத்தில்சிறப்புடனிருக்குஞ்
சபையினிற்றேவரிசதிருடன்வந்து
அவையமென்றடியிலன்புடன்வீழ்ந்து
அரன்றவசதனுலவதுமின்றி

வாட்பின்வின்ஞாலமில்வர்த்தகசத்தி
சீனைபின்னங்கள்செய்யுநதேவனா
அல்லவன்றவத்தையழித்திடவேண்டி
இந்திரனும்மையிட்டனரதிலே
வந்திடச்சொல்லிவருத்தனனென்றார்
இந்தவாசகங்களியல்புடன்கேட்டு
சுந்தரத்தேருளங்கனிந்தெனையழைத்து
அவ்வளக்கற்றவத்தையழிக்கவேசெல்க
வென்னவன்பொலகுடுத்தேவிட்டாரென்றார்
அட்பேயதுநாறுமாகாதென்று
செப்பிநேன்கேளாதுசெப்பக்கேளாமல்
அத்தனையுந்தள்ளி அரசன்மீறிற்றென்று
நெற்றிக்கண்ணாலேநெருப்பைவெளிவிட்டார்
எப்படியையாயினியெவ்வைசெய்வேன்
ஒப்பிலாமுனிவேயுனதடிசரணம்.

சக்கரவர்த்தி-ரதிக்குச்சொல்-விருத்தம்.

விதியோமகளேமுன்செய்த வினையோவுன்றிழுங்காலக்
கதியோதெய்வத்தின்செயலோ கண்ணவிபார்த்தேவர்செய்யுஞ்
சதியோநாங்கள்செய்திட்ட தவத்தின்குறைவோமதனனுக்குத்
ததியோமுடிவுகாலமோதர் சற்றுமதியேன்சங்கரனே

வசனம்,

ஐயையோமகளே இதுவும் விதியோ நான் முன்செய்த வினையோ அல்லது உன்றிலின் காலக்கதியோ தெய்வத்தின்செயலோ அல்லது தேவர்செய்யசதியோ நாங்கள்செய்த தவத்தின் குறைவோ அன்றி உன் பிராணநாயகனாகிய மன்மதனுக்கு முடிவுகாலமோ அறியேன் சங்கரனே.

சக்கவர்த்திசொல்-புலம்பல்-கண்ணிகள்-இ-ம்
செஞ்சுருட்டி-அடதாளம்,

சீர்பெறத்துயமிலையாளனையென் மகளே இந்த
காரணமானவோகருவாய்வயிற்றில்வந்தாய் மகளே
சீர்பெறுமழகுச்சிங்காரமானயென் மகளே இந்த
சேதியுணக்கோதெய்வமுகவந்தாய் மகளே
தக்கக்குடத்தையோத்தனந்தங்குமுடையயென் மகளே உந்தன்
காதிப்பதிக்கவோ சபைகூடிஞானிந்தான் மகளே
அங்கமிடைநல்குதெயடிவயிறெரியுதே மகளே உந்தன்
அழகிலுக்கேற்றிட்ட அங்கசபதியாகுமே மகளே



கிளியை யொத்த அடிவயிற்றையுடைய மகளே உன்னை
அல்லற்படுத்தவோ அழைத்திட்டாயிந்திரன் மகளே
கோலவல்லிக்கொடியொத்தயிடையையுள்ள மகளே உந்தன்
கொண்டைமேற்குருந்தப்பூவைக் கொய்யவோவழைத்தான் மகளே
வையகமாதவொல்லார்வத்தடியழகியுமான் மகளே பூகம்
மஞ்சள்பூசிக்கவோவகைதேடினானிந்திரன் மகளே
செய்யவாளுஞ்சமியுந்திகைக்கவழகுடைய மகளே மதன்
இலக்கப்பொட்டைப்பறித்திடவோநினைந்தானிந்திரன் மகளே

ரிஷியுட்-ரிஷிபத்தினியும்-ரதிக்குச்சொல்-விருத்தம்,

இளையயோமகளேவுந்தனருந்தவவிதியோயீசன்
செய்யழற்கண்ணால்வெந்து செனித்தனோமருகன்றானும்
ஐயம்வந்தென்னவேண்டாம் மாண்டிமேவிளைவிக்கென்றால்
அய்யனுன்முகத்தைப்பார்த்துக் கருக்கூடவெழுப்புவாரோ

வசனம்,

ஐயையோமகளே உன்னைப்பெற்றதும் வளர்த்ததும் உனக்குக் கலியாணஞ்செய்த யோகியும் நல்லான் கண்ணிலுமேலே உன்புருஷனை திருஷரோங்ஷர் எரித்துப்போகவும் இப்படியாயிருந்தது உன்னுடைய தலைவிதி ஆகுமென்னவோ அம்மா நீ சிக்கிரமாக ஈஸ்வரனிடத்திற்குப்போய் முறையிட்டால் அவர் உன் முகத்தைப்பார்த்து உன்புருஷனை யெழுப்பித்தருவார் வேறென்னவேண்டியதில்லை யேதல்கள் பொய்த்தாலும் என் ஆசீர்வாதம் பொய்த்துப்போகாது போய்வாரும்மா ரதியே,

ரதிதேவி ரிஷிக்கும்-ரிஷிபத்தினிக்கும்சொல்-வசனம்,

சரணஞ்சரணம் அப்படியேபோய்வருகிறேன்சுவாமி.

ரதி-தெய்வசபைக்குவருகிற பொதுவிருத்தம்.

பொற்பினிற்சித்திர பொற்பாடுமதனை
போதவிழ்ந்தெழிலாள்
கற்பினிற்சிறந்த கன்னியரொட்டிலா
வானந்தமனையாள்
வெற்பினில்மயங்க நற்பயிலியதிரன்
விறலைவச்சமையில்,
நற்புமுற்றவளிக்குபெண்மதி
நாயகிவந்தாளே.

கட்டியக்காரன்சொல்-வசனம்,

அகோ தெப்படியென்றால் ரதிதேவியானவள் தன்னுடைய த கப்பன் முதலாகிய ரிஷீஸ்வரர்கள் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண் டு தெய்வசபைக்கு வருகிறதை தேவேந்திரன் முதலாகிய தேவர்கள் கண்டு எதிர்கொண்டு வந்து தோத்திரஞ்செய்கிற விதங்காண்க.

தேவேந்திரன் முதலாகிய தேவர்கள் ரதிக்குச்சொல்
போற்றிவிருத்தம்.

பூவையேபோற்றிபோற்றி புகழிளங்குயிலேபோற்றி
பாவையேபோற்றிபோற்றி பைங்கிளிமொழியேபோற்றி
மேவியவமுதேபோற்றி மன்மலக்கணையாள் துய்ய
தேவியேபோற்றியுந்தன் திருவடிபோற்றிபோற்றி

ரதிசொல்-புலம்பல்-கண்ணிகள்

இ-ம்-கெண்டா மிசிரதாளம்,

முப்பத்துமுக்கோடி முனிவர்தேவர்களே யிந்திரனாரே - தய்ய
முகுந்தன்மகனவனையழைத்துக்கொடுமெய் யிந்திரனாரே
தார்மீகநகராளும் தையலாள்கணவனே யிந்திரனாரே-யிப்போ
தந்திரமாயழைத்துச்சிரித்தும்படிவித்தீர யிந்திரனாரே
கரும்புவில்லேயேந்தும் காமனையழைத்துமே யிந்திரனாரே - மதி
கங்கைகுடியமீசன் கண்ணாலெரிக்கவைத்தீர் யிந்திரனாரே
வானவர்சிறையை வதைமோசஞ்செய்தாரோ யிந்திரனாரே - அந்த
வஞ்சனைத்தும்பிப்போ பொய்யாய்க்கொண்டீரோ யிந்திரனாரே
நாருடன்கூடிசொற்பிழைசெய்தாரோ யிந்திரனாரே - அந்தச்
சொல்லுமனதில்வைத்துச் சொல்லதினைந்தீரோ யிந்திரனாரே
தந்தையென்னை முதல்முந்தியாசீர்வதித்த யிந்திரனாரே - எந்தன்
தாலிபறிக்கநீங்கள் தாயாதியானீரோ யிந்திரனாரே
ஆண்டோற்றினைதொடுக்க அதிசயலவாவென்று யிந்திரனாரே - என்
அங்கசபூபனையனுப்பிக்கொன்றீர்களோ யிந்திரனாரே
சாம்பசதாசிவன்றவத்தையழித்திட யிந்திரனாரே - இந்த
தரணியில்வேறேதேவர்களில்லையோ யிந்திரனாரே
ஈசன்றவமழிக்க யினியபெலவானென்று யிந்திரனாரே-இப்போ
எங்கணவனையல்லவோ வெந்துங்கிடையாதோ யிந்திரனாரே
மங்கைக்குவேதச மணவாளனாகிய யிந்திரனாரே - எந்தன்
மன்மதனைக்கொன்றுமனமுங்குளிர்ந்தீரோ யிந்திரனாரே



என்னகாரணத்தினால்நிர்த்தினைவேதித்தீர் யிந்திரனாரே - உமக்
கேற்குமோவயிந்தவப் போதகனையேசொல்லும் யிந்திரனாரே
இன்னவழிநடந்தாலின்னபடிவருமென்று யிந்திரனாரே - சற்றும்
என்றுமறிப்போயுமென்னை யறியீரோவென்னை யிந்திரனாரே

தேவேந்திரன்-ரதிக்குச்சொல்-போற்றிவிருத்தம்,

சரணஞ்சரணமன்மதன்றன் சரணஞ்சரணமனங்களிக்கும்
சரணஞ்சரணந்திருமேனியே சரணஞ்சரணமாமுதே
சரணஞ்சரணமெல்லியே சரணஞ்சரணமேமையர்கள்
சரணஞ்சரணஞ்செய்தகுற்றஞ் சரணஞ்சரணம்பொறுத்தருள்வா

வசனம்,

சரணஞ் சரணமம்மா ரதிதேவி எங்கள்பேரில்கோபித்துக்கொ ள்ளாதே நாங்கள் செய்தகுற்றமெல்லாம் பொறுத்து ரட்சிக்கவேணு மம்மா என்றாரே ரதிதேவி,

ரதி-தேவேந்திரனுக்குச்சொல்-வசனம்,

கேளுந் தேவேந்திரராஜனே உங்களை வெறுக்கவேண்டிய தில்லை எனவிதி இப்படியிருந்தது ஆனையால் நாமவனிடத்திற்கு நான்போகிறேன் நீங்களும் வாருங்கள்.

தேவேந்திரன்-முதலானோர்கள்-ரதிக்குச்சொல்-வசனம்,

அப்படியேவருகிறோமம்மா.

சிவன் கொலுவிருக்கிற-கொலுவிருத்தம்.

வெள்ளியங்கிரியின்மீது விஞ்சையர்சித்தர்தேவர்
துள்ளியேதிரியும்பூத குமிக்குள்ளகணங்கள்சூழ
கின்னரமொழியாட கீதநாதமாம்பாட
அள்ளியக்கண்ணுதோம் அரன்கொலுவிருந்திட்டாரே

கட்டியக்காரன்சொல்-வசனம்,

அகோ தெப்படியென்றால் ரதிதேவி தெய்வசபையைவிட்டு க யிலையங்கிரிக்கு வரும்போது கைலாசத்தில் பரமசிவன் கொலுவிரு ந்த அலங்காரங்காண்க.

சிவன்கொலுவிருக்கிற தரு இ-ம்-மோகனம்-அடதாளம்

பல்லவி,

கொலுவிருந்தனரே-சாம்பசிவன்
கொலுவிருந்தனரே

அநுபல்லவி.

அளவில்லாமுனிவர்களமரர்பூரணர்கள்
அரகரசிவவென அடிதொழுதிடவரன் (கொலு)

சரணங்கள்,

மலையாசன்றரு முறைமையிட்பாகத்தில்
மருவிவிளையாட நய்ய
தலையதனிலினியநதிமாறுதின்று
தயங்கியுறவாட
குலவுஞ்சந்திரனுங் கடிருங்கொன்றையுங்
குமுகுமெனமண மருவுபெருக்குடன்
சமகமெனமுடி யதனிற்றருக்குடன்
மூன்றுவிழியுங்காது மூக்குமிகழுங்வாய்
முகக்கமலமுமிலங்க வெழுங்கள
நாலுமாலுக்கடி குலசுபாலமுறி
தனிற்சரமதிலிலங்கப்
பூணுஞ்சரிமுமாரிபி னெவர்புரிசேனவெய்ய
புலியினிட்டோலு மிடையில்திளைய
வலியமதமதில் மணியுமொலிசெய (கொலு)
நாரியர்நடமாட நற்புலதொனிகூட
நாரதனிசைபாட முனே
கூரியவாளாட வைரவனெதிர்நின்று
கொலுவெச்சரிக்கைபோட
சிருளபாற்கடல் திரண்டநேர்ப்பெருங்குன்றிற்
கிறைநிலனுயச லிருந்ததென்சொல
இகழும்வெண்கருப் பூரச்சுடர்போல (கொலு)

சிவன்-வைரவனுக்குச்சொல்-விருத்தம்,

வைரவாகேளாயிந்த வைகுந்தமுதலாயுள்ள
செயரிலாமலரோனிந்திரன் றேவர்களார்வந்தாலும்
பயமெனுத்தரவில்லாமற் பதிவுள்விடாதே நின்று
தயிரியமாகவாசல் தன்னைநீகாத்திடாயே

வசனம்,

கேளுப்பிள்ளாய்வைரவா அந்த வைகுந்தபதியாகியவிஷ்ணுவானவர் வந்தாலும் பிர்ம்மாவானவர் வந்தாலும் தேவேந்திரன் முதலாகிய தேவர்களார்வந்தபோதிலும் என் உத்திரவில்லாமல் உள்ளேவிடவேண்டியதில்லை நீ பத்திரமாய் ஆசாரவாசலில் காத்திரும் பிள்ளாய்

வைரவன்-சிவனுக்குச்சொல்-கவி,

சரணஞ்சரணஞ்சுவாமிசொல்லித்
தலைமேற்கொண்டேன்வாசலிலே



சிரணப்பொழுதுநிலைமியிட்டா
திருந்துகாப்பேனே

தேவேந்திரன்வருகிற-பொதுவிருத்தம்.

இந்தவாறுசச்சொல்லி யிமத்தடியுமற்றேருந்
சுந்தரிதெய்வி ருசிருக்கள் கருக்கொளிவிளமையுங்ரும
இந்திரராசன்செப நிக்கந்தைத்திராந்வரடி
பத்தமாநதேவநேவப் பரமன்பாலக்குதின்றாலே

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அதோதெப்படியென்றால் இவ்வாறுசப் பரமசிவன் கொலுவிருக்கையில் அந்தகொலுவினுக்குத் தேவேந்திரமகாராசன் வருகிறவிதங்காண்க.

தேவேந்திரன்வருகிற ஓரடி-தரு-இ-ம்

தோடி-ஆதிதாளம்

பல்லவி.

ஜயஜயவென்னாசிவம் புருடர்க்குத்தெயரி

அநுபல்லவி,

அஜயத்திருவிளமணி வாளையநற்சித்தர்
அமரர்குருநவிரெனும் முனிவருடன்புவிச்சித்திரர்
கட்டியாகதின்று காலகன்டன்மேவ
கைகயெசொல்லுமோ மிகவுல்தவுபீர்
வருமேயிருதிசமேயனவெல்லலா (ஜய)

சரணங்கள்.

சிர்ணைதலங்குறைந்த விர்தைமைதனக்கேட்டோர்
செகமெங்குமென்னையென்ன-சொல்லுமோ
திந்தைவியுமெத்த வாசிதேயுமிச்செல்லாம்
நியிஷாமாதிரமையவில்-செல்லுமோ
அர்தவக்குவமுனி நந்தசர்பத்திறனே
அரன்றபசுமித்துவ-மதத்தைருவாழித்தவ
இந்தவிதமதியா இந்தவலகங்கண்டா
யிருளுமொழியமொன்று வொன்றுமோ யென்னவெய்வ
எந்தவிதத்திலு மிந்தமிச்சொல்லம
தர்ளைதிவன்றன் புத்திகுளித்திட
இமையோர்முனிவோ
உமையாள்கொழுன

திருடிகள்மூழ
ளடியினிற்றமும ஜய)

வைரவன்-சிவனுக்குச்சொல்-கவி,

மூவர்முதல்வாமராசித்தர் முனிவர்களுடர்முதலான
தேவச்சேனைபதியான தேவேந்திரன்றான்வந்தாரே

சிவன்-வைரவனுக்குச்சொல்-கவி,

சத்தம்விசும்வெண்மலையாம் கைலைநாடிவினையுடனே
வந்ததேவன்றன்னையிப்போ வரச்செய்வாய்நிலைவைரவனே

வைரவன்-தேவேந்திரனுக்குச்சொல்-கவி,

இந்திரபதியே சந்திரசேகரன்
வந்திடச்சொன்னார் தொத்தமாய்ப்போவாய்

தேவேந்திரன்-வைரவனுக்குச்சொல்-கவி,

மெத்தவும்பாக்கியம் உத்தரத்தந்து
சுத்தனிடத்தில்-பொத்தமாய்ப்போவோம்

தேவேந்திரன்-சிவனுக்குச்சொல்-போற்றிவிருத்தம்,

நீர்நீகண்டபோற்றி உமையிடபாகாபோற்றி
ஓம்பேயோட்டாடிபோற்றி ஒருமெய்ஞானியேபோற்றி
ஏம்சதாசிவனேபோற்றி ஏகநாதமுதல்போற்றி
ஏம்புராந்தகனேபோற்றி உன்னடிபோற்றிபோற்றி

சிவன்-தேவேந்திரனுக்குச்சொல் வாழிவிருத்தம்.

வைத்தருவிருட்சம்வாழி பாற்கடலவெள்ளானைவாழி
கீர்த்தனைத்தேரும்வாழி காழ்வச்சிராயுதமும்வாழி
இந்திரபதியும்வாழி இமையவர்முனிவர்வாழி
அந்தமாஞ்சசியாளோடும் ஆயிரங்கண்ணனும்வாழி

சிவன்-தேவேந்திரனுக்குச்சொல்-வசனம்,

வாரும் வாரும் தேவேந்திரமகாராஜனே இந்த சிம்மாசனத்தில் உட்காரும்,

தேவேந்திரன்-சிவனுக்குச்சொல்-வசனம்,

அப்படியே மகாபாக்கியஞ் சுவாமி,

பிரகஸ்பதிவருகிற-பொருவிருத்தம்,

பூதலமளந்தமாயன் புகழ்வனையெரிக்க ஐய்ய
சீதனத்தரித்த சிவனிடமொழுவுதன்னிற்
போதிலேந்நாளும்வாழும் புங்கவன்பெற்றெடுத்த
கோதிலாதேவர்போற்றுங் குருபிரகஸ்பதிவந்தாரே



கட்டியக்காரன்சொல்-வசனம்.

அகோதெப்படியென்றால் மான்மழுதரித்த மயேசுவரனுடைய கொலுவுக்குத் தேவேந்திரமகாராஜனுடைய குருவாகிய பிரகஸ்பதிபகவான் வருகிறவிதங்காண்க.

பிரகஸ்பதிவருகிற நாடி- தரு-இ-ம-

அசாவேரி - ஆதிதாளம்.

பல்லவி.

குருபிரகஸ்பதிவந்தார் - தரு
குலஷிபதிமுதலாகிய மாமர்கள்
குருபிரகஸ்பதிவந்தார்

அநுபல்லவி.

திருவலக்கொக்கிலொருவன் - விண்ணுடர்போற்றும்
தேவன்வெள்ளிமலையில்-மேவுஞ்சிவன்கொலுவில் (குரு)

[சரணங்கள்.]

பாதவிலோகனாந்தோன்-தவஸிலையில்
ராஜனெனப்பேர்படைத்தோன் விகாரில்லாத
தேசிலமுகில்மிருந்தோன் மலாயன்பிர
காசத்தவத்திலுதித்தோன்-விலையிலாத
மிந்திரவரங்கவபாஞ்சியதனிம்பமிதந்த
செஞ்சொகமுனிவாதுதி பஞ்சிதமுடிதரித்த
செம்பொனணிபூஜ-மீர்த்திதரித்தெழிற்
சம்புபொருந்த- பெருந்தபொருப்பினிற்-
ஜெகமதிபிலகிய-முனிவர்குமாரர்கள்
அகமதில்சுகமுடன்-மிகதுதிசெய்யுங்குரு (குரு)

வைரவன் - சிவனுக்குச்சொல்- கவி,

சிதகியுந்தரித்த-தேவநாயகனே
போததேவகுருவான-பிரகஸ்பதியும்வந்தாரே

சிவன் - வைரவனுக்குச்சொல் - கவி.

சரணமென்றேதொழுதுசொலுஞ் செளரியவீரவைரவனே
பிரணவத்தையறிந்திட்ட பிரகஸ்பதியைவரச்செய்வாய்

வைரவன்-பிரகஸ்பதிக்குச்சொல்-கவி.

ஓதுந்தேவர்களின் குருவே-யும்மைசாம்பசிவனாரிப்
பேதுசொல்லிவரச்சொன்னார்-போவீர்மகிழ்ந்துபோவீரே.

பிரகஸ்பதி-வைரவனுக்குச்சொல்-கவி.

சித்ரமெத்தமலிந்திட்டுடன்-சிறந்திடப்புகழுடையவரோ
அத்தனார்வாழுங்கொலுவிலென்பாயாலுஞ்செல்வேனே

பிரகஸ்பதி-சிவனுக்குச்சொல்-போற்றிவிருத்தம்.

அரிபிரமர்வினைபோற்றி அம்பிகைபாகாபோற்றி
கரிமுகமுடையாய்போற்றி கனகிரியிடத்தாய்போற்றி
சுரர்களிராஜாபோற்றி சொல்லுமெண்டோளாய்போற்றி
சுந்தரவதனனேபோற்றி சுகபதனேபோற்றிபோற்றி

சிவன்-பிரகஸ்பதிக்குச்சொல்-வாழிவிருத்தம்.

தேவர்கள்குருவேவாழி தேவர்கள்பொருளேவாழி
மூவர்கள்தலைவாவாழி முனிவர்களரசேவாழி
ஆவலைப்பலலெல்லாமுமாளுடையமந்திரிவாழி
நாவலர்சொற்பாடும் பிரகஸ்பதிவாழிவாழி

சிவன்-பிரகஸ்பதிக்குச்சொல்-வசனம்.

ஆ-ஆ மகாசந்தோஷம் வாரும்வாரும் பிரகஸ்பதிபகவானே இந்த ஆசனத்திலேயிருக்கும்.

பிரகஸ்பதி சிவனுக்குச்சொல்-வசனம்.

மகாபாக்கியம் அப்படியேயிருக்கிறேன் சுவாமி.

பிரம்மாவருகிற-பொதுவிருத்தம்.

பொற்கமலமீதில்தங்கும் புவியெலாமளித்தநாயகன்
சகலருக்கராசனாகி தனித்தவைமுகுந்தசேயன்
நற்றுதிக்கமிருகொண்டை நிறைமுடியழகனில்வாழும்
சிங்காசனசபையதனிற் சதுர்முகனெழுந்தாலந்தாரே

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அதோதெரிகிறதுபொன்னும்பவளமுமுடைய கொலுவுக்குச் சதுர்முகப்பிரமனெழுந்திருக்கிறார்கள்.

பிரம்மாவருகிற-தரு-இ-ம்-பாக-ஆதிதாளம்.

பல்லவி.

சதுர்முகப்பிரமதேவன்வந்தார்-சிங்காசனமேல்
சதுர்முகப்பிரமதேவன்வந்தார்.

அநுபல்லவி.

பதினெண்கணங்களொடு பரிவுடன்கலைமாதுடன்-(சதுர்)



சரணங்கள்.

அண்டமுண்டவாய — மின்றோன்
புண்டரீகனித்தம் — றோன்றோன்
கண்டறுன வுண்டெலாநவ
கண்டமுள் விந்தச்செயுஞ் (சதுர்)
ஜாதிலிக்கிரீடம் — மிலங்க
செய்யபூணிற்று — துலங்க
வரிசையாய்முப்புரிநூலு
மார்பினி லிலங்கவே (சதுர்)
விலையிலாதநடை — தரித்து
விளங்கவேநற்பதங்கள் — விரித்து
மலையான முழு முழுவனிந்த
கலைமகள்பொருதனுன (சதுர்)

வைரவன்-சிவனுக்குச்சொல்-கவி.

பூதநாதபலவெள்ளிப் பொருப்பிலுடையின்வாசலிலே
நாதுகமழுமலரயனுந் தாம்வந்தார்நாதனே.

சிவன் வைரவனுக்குச்சொல்-கவி.

இச்சையாகக்கொலுவிலேயிருக்குஞ்சொல் பிரமனையே
பச்சையாகின்மனையவளைப் பரிவாய்வரவேவ்செய்வாயே

வைரவன்-பிரம்மாவுக்குச்சொல்-கவி.

அன்னமீதிலேயேறும் அயனேயுமையும்விண்ணவிலே
சென்னிமீதிற்பிறைமுடித்த சிவனாரழைத்தார்போவீரே.

பிரம்மா-சிவனுக்குச்சொல்-போற்றிவிருத்தம்.

சூலபாணியனேபோற்றி சுருதிநான்மறையாய்போற்றி
வேலவனீன்றாய்போற்றி வெண்ணீறணிவாணியேபோற்றி
காலனையுதைத்தாய்போற்றி கங்கையைத்தரித்தாய்போற்றி
சாலவேயுலகம்போற்றுஞ் சங்கராபோற்றிபோற்றி

சிவன்-பிரம்மாவுக்குச்சொல்-வாழிவிருத்தம்.

தாமரைமலருள்வாழி தனியெழுத்தடையுள்வாழி
காமருவன்னர் வாழி காரமாதிற்றெண்டுள்வாழி
மாமருசுருவம்வாழி மணிச்சத்யலோகம்வாழி
நாமகள்வாணிவாழி நான்முகவாழிவாழி

சிவன்-பிரம்மாவுக்குச்சொல்-வசனம்.

வாழிவாழி பிரம்மதேவனே வாரும்வாரும் இந்தச்சிம்மாசனத்தில்வீற்றிருக்கும்.

பிரம்மா-சிவனுக்குச்சொல்-வசனம்.

சரணஞ்சரணம் அப்படியேயிருக்கிறேன் சாம்பசிவமூர்த்தி.

மகாவிஷ்ணுவருகிற- பொருவிருத்தம்.

மாலையுந் துளபப்பூணும் மார்பனைத்தந்தைக்காவம்
மாலையுங்கொண்டநதிமேல் மழுவடிவுலகங்கொண்ட
மாலையுங்கைக்கொண்டோன் மகிதனில்முதலென்ற
மாலையுங்காத்தருள்ய மகாவிஷ்ணுதான்வந்தாரே

கட்டியக்காரன்சொல்- வசனம்.

அகோதேப்படி யென்றால் பார்வதிசமேதராகிய சிவசாம்பமூர்த்தி தியானமுடைய கோலத்துக்கு மகாவிஷ்ணு வருகிறவிதங்காண்க.

மகாவிஷ்ணுவருகிற-தரு-இ-ம் சாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

மகாவிஷ்ணுவந்தாரே மகாவிஷ்ணுவந்தார்

அநுபல்லவி.

காமுத்திக்கொடியுடையநாத மகாசுந்தரன் விளையாடி (மகா)

(சரணங்கள்.)

திருமலையென்ற-நின்ற-பாவனை தலைக்காயன்று-வந்த
திருவிக்கிரமனென்று-ம்- பரசுராமனென்று- அய்ய (மகா)
கிருஷ்ணனை நினைக்கும்-போது-பிறந்தநாளிற்றுவ-மேரு
[illegible] (மகா)
[illegible]
[illegible]

வைரவன்-சிவனுக்குச்சொல்-கவி.

பரமசிவனேநமதய்ய-பதியுங்கயிலைவாசகனே
கமலக்கண்ணன் வந்தார்வந்தாரே

சிவன்-வைரவனுக்குச்சொல்-கவி.

அந்தமெத்தசந்தோஷம் அவருக்குவந்தாராரன்று
வாசாய்ப்பேதைக்கு வரதசெய்வாய்வைரவனே

வைரவன்-மகாவிஷ்ணுவுக்குச்சொல்-கவி.

சரணஞ்சரணம்வாசவனே சரணஞ்சரணங்கேசவனே
சரணஞ்சரணம்வைகுண்டமுதல்வா சரணஞ்சரணம்வரச்சொன்னார்



மகாவிஷ்ணு-சிவனுக்குச்சொல்-போற்றிவிருத்தம்.

வெள்ளியங்கிரியின்மீது விளங்கியபொருளேபோற்றி
தள்ளிருட் குழலாள்பங்க நதிதங்குமுடித்தாய்போற்றி
வெள்ளையாவிடையிலேறும் வெண்சுடரொளியேபோற்றி
எள்ளருமுனிவர்போற்றும் ஈசனேபோற்றிபோற்றி

சிவன்-விஷ்ணுவுக்குச்சொல்-வாழிவிருத்தம்.

சங்கமுத்திகிரிதண்டுஞ் சாபமும்வாளும்வாழி
பொங்குபாற்கடலுமாலும் போகப்பாம்பணையும்வாழி
இங்கிதமாய்வைகுந்த மீசபதிமுன்வாழி
மங்கைலட்சுமியுமார்பும் மாயனேவாழிவாழி

சிவன்-விஷ்ணுவுக்குச்சொல்- வசனம்.

வாரும்வாரும்மகாவிஷ்ணுவே- இந்தசிம்மாசனத்திலுட்காரும்.

விஷ்ணு-சிவனுக்குச்சொல்-வசனம்.

அப்படியேநல்லதையா.

பொது-வசனம்.

அகோதேப்படி யென்றால் வெள்ளியங்கிரியில் திரிமூர்த்திகளோடேயே சாம்பசிவன்கொலுவிருக்கிற சபையத்தில்- ரதிதேவியானவள் தெய்வசபையைவிட்டுப் புலம்பிக்கொண்டு கைலையைநோக்கிவருகிற விதங்காண்க.

ரதிசொல்-புலம்பல்-கண்ணிகள்-இ-ம்

கெண்டா- ஆதிதாளம்.

அர்ச்சவல்குந்தேறினி லருணாருமண்டபத்தில் மன்னவனே-இப்போ
அமர்ந்துகொலுவிருந்தாய்
இந்தவிடத்திலேயோ வந்தவெரிந்தமன்னா மன்னவனே
யிருக்கக்கண்ணிறக்காண்பேனோ
தென்றற்றேரினிலேறித் தேசமெல்லாஞ்சுற்றித் மன்னவனே-உன் வண்
திரும்பிவருவேனென்றீர்
தென்றற்றேருங்காணாமல் திருமாமுகங்காணாமல் மன்னவனே
திகைத்துவாடுகிறேனே
எத்தனைசொன்னாலும்நா னத்தனையும்வெறுத்து மன்னவனே-வல்ல
இன்பமுடன்வந்திரோ
அத்திதனையுரித்த வமலன்கண்ணாலெரித்து மன்னவனே
அலையவிட்டாயோவெய்யோ
சுரும்பிரதனைவென்ற கர்த்தனையுன்றனக்கு மன்னவனே-மெய்யில்
கபடில்லையென்றிருந்தேன்

அரும்புநகை தெரிக்க அமலனெரித்திடவும்
ஐயோ விதியிவ்வாறோ — மன்னவனே
வேதபுகழுங்கொன்றை வெண்ணிலவுந்தரித்த
வேணியரன் கண்ணாலே — மன்னவனே-என்றன்
நாதா நீயெரிந்திட வுயிர்வைத்திருக்கின்ற
நானல்லோ கள்ளியையோ — மன்னவனே
பச்சைவிறமும்பரி பார்த்தவிழியுமணிப்
பவழவிதழுமையோ — மன்னவனே-என்றும்
நெச்சுமீசன் கண்ணாலே மேனியனலாய்வெந்து
விழுந்தாயோ ஐயையோ — மன்னவனே
இந்தத்தலத்திலென்னை சிவன்தெரிக்கவில்லை
இரோகமறிந்திலையோ — மன்னவனே-நானும்
எந்தவிதத்திலுய்வேன் விதியினாலிந்தமெல்லப்பெண்
என்னசெய்குவேனையோ — மன்னவனே
கோடிபூரணச்சந்த்ர கலையைப்பழித்தவுன்றன்
குலவுமெழில்முகமும் — மன்னவனே-ஐய
தோளுமெலரணிந்த தோளுங்கருமார்பும்
தோகைநான் காண்பதெப்போ — மன்னவனே

ரதி-மன்மதன்-எரிந்தவிடத்தில்வந்து-சொல்லுகிறது-

ஒப்பாரி.

அத்தர்புனுகுசவ்வாதணியும் அழகுதிருமேனி
அனல்பற்றிவெந்ததோ அழகுதுரைமன்மதற்கு
சாந்துசவ்வாதுந் தரித்ததிருமேனி
தணல்பற்றிவெந்ததோ தர்மதுரைமன்மதற்கு
மாணிக்கமுத்தாரம் விளங்குதிருமேனி
வாடியெரிந்ததோ வாஞ்சையுள்ளமன்மதற்கு
ஆசையாயென்னை அழைக்குந்திருவாயும்
அடங்கிப்பவிந்ததோ அழகுதுரைமன்மதற்கு
கட்டியணைத்தென்பார்க்கையாற்றவுங்கலை
கனவிற்படிந்ததோ கட்டழகர்மன்மதற்கு
ஆறுமில்லைதேறுமில்லை ஆளழகன்போய்மாண்ட
அடிவயிற்றுக்கொள்ளியைப்போல்.



அன்னைதந்தைமுதலோர் ஆதரவுசொன்னாலும்
ஆறவெகுநாள்செலுமே
தேறுதலையாகத் தேவர்கள்சொன்னாலுமையோ
தேறவெகுநாள்செலுமே

ரதிசொல்-விருத்தம்-இ-ம்-முகாரி.

அவனிடவிதியோமுன்பு யான்செய்தவினையோவுன்றன்
வயமுளதந்தைதாயார் வருந்தியதவத்தின்வாறோ
சயமிகுமுனிவரிட்ட சாபமோசன்கண்ணால்
செயமுடனெரிந்தீர்நானெவ்செய்குவேன்பிராணநாதா

வசனம்.

ஐயையோ பிராணநாதா இதுபிரம்மா விதித்த விதியோ நான்முன்புசெய்த தீவினையோ உன்றன் தாய்தகப்பன் செய்த தவத்தினிட்டமிவ்வளவோ அல்லது முனிவரிஷிகளிட்ட சாபமோ இப்படிச்சிவன்கண்ணாலே யெரிந்து போய்விட்டீர் நானென்ன செய்வேன் பிராணநாதா.

தோழிகள்-ரதிக்குச்சொல்-கொச்சகம்.

ரதிதேவிநாயகியே நாரணன்றன்மருமகளே
விதியின்படியல்லால் வேறுளதோவென்றுமே
இதுவேதுகாரணமோ யெங்கிப்புலம்புவதேன்
பதியாகும்மாரன் பதம்பணிவோம்வாருமம்மா

வசனம்.

அம்மா இதுஎன்னகாரணம் விதியின்படியே முடியுமல்லாமல்வேறேயொன்றுமில்லை நீவிசனப்படாதே அதோவெள்ளியங்கிரி தோற்றுது நாம்சீக்கிரம்போய்ப் பரமசிவனுடைய பாதத்திலே விழுந்துவருவோம் வாருமம்மா.

ரதி-தோழிக்குச்சொல்-வசனம்.

அப்படியா வெள்ளியங்கிரிதோற்றுதா

தோழி-ரதிக்குச்சொல்-வசனம்.

ஆம்-அதோதெரியுதம்மா ரதிதேவி.

ரதிசொல்-கவி.

அய்யய்யய மதிவன்று
அய்யமய்ய மதிச்சடையாய்
அய்யமய்யமலரடிக்கு
அய்யம்ரதியா ளய்யமையா

வைரவன்-சிவனுக்குச் சொல் விருத்தம்.

அத்தனேயொருவிண்ணப்ப மரம்பைமாதர்களுக்குழு
சித்ரமன்மதராஜேந்த்ரன் தேவியாம்ரதியாள்கூவி
முத்தனேயய்யமென்று முகத்தினி லறைந்துக்கொண்டு
இத்திசைநோக்கிவாரா ளீச்சனேபோற்றிபோற்றி

வசனம்.

சரணஞ் சரணஞ்சுவாமி மன்மதராஜனுடைய தேவியாகிய ரதியானவள் எண்ணிக்கையில்லாத தெய்வஸ்திரீகள் சூழ்ந்துவர, அரகரா-சிவசிவா-அய்யமய்ய மென்று அழுதுக்கொண்டு நம்முடைய கைலாசவாசலுக்குநேராக வருகிறுள்சுவாமி.

சிவன்-வைரவனுக்குச் சொல் விருத்தம்.

வாசப்பூமணைகளேந்தும் வசியுள்ளமதனெரித்த
மாதுள்ளசெதிகேட்டு மங்கையும்புலம்பிக்கொண்டு
ஓசிவாவென்றுசொல்லி யுத்தமிவாரதாலே
வாசலின்வழியைவிட்டு வைரவாவப்பாலிலாய்

வசனம்.

ஆ-ஆ-வைரவா மன்மதன் எரிந்துப் போனசெதியை ரதியானவள் கேட்டு என்பேரில்மகாகோபத்தோடும் புலம்பிக்கொண்டு மகாபதிவிரதையாகிய ரதிதேவியானவள் வருகிறபடியினாலே நீ வழியைவிட்டு அப்புறம் ஒத்தியிருப்பிள்ளாய் வைரவா.

வைரவன்-சிவனுக்குச்சொல்-வசனம்.

மகாபாக்கியம் அப்படியே சொல்கிறேன் சுவாமி
ரதி-சிவனுக்கும்-விஷ்ணுவுக்கும் - பிரம்மாவுக்கும்

பார்வதிக்குஞ்சொல் போற்றிவிருத்தம்

சங்கராபோற்றிபோற்றி சம்புவேபோற்றிபோற்றி
பொங்குபாற்கடலில்வாழும் புண்ணியப்பொருளேபோற்றி



பங்கயமலரில்வாழும் பாலித்தவனேபோற்றி
மங்கையே யுமையேயுன்றன் மலரடிபோற்றிபோற்றி

மும்மூர்த்திகளும்-பார்வதியும் ரதிக்குச்சொல்

வாழிவிருத்தம்.

மங்கையேவாழிவாழி மாமுனிமகளேவாழி
அங்கநல்லெழில்மிகுத்த கோதையேவாழிவாழி
நங்கையேவாழிவாழி ரதியெனுங்கிளியேவாழி
மங்களமாயெந்நாளு மங்கிலியவதியாய்வாழி

ரதி சிவனுக்குச்சொல்-கண்ணிகள்-இ-ம் மெண்டா.

சங்கராகங்காதராவோ சடையில்மதிதரித்தவரோ
ஈஸ்வரா-பரமேஸ்வரா
மங்களமாயிருந்தவென்றன் வாழ்வினைகெடுக்கலாமோ
ஈஸ்வராபரமேஸ்வரா
என்போற்பெண்களுமென்னையே னனைங்கள்செய்ய வைத்தா
யீஸ்வரா பரமேஸ்வரா
துன்பமென்னசெய்தாரென்றன் துணையாம்பிராணநாதர்
யீஸ்வரா-பரமேஸ்வரா
எத்தனைபிழைசெய்தாலு மிப்படியெரிக்கலாமோ
யீஸ்வரா-பரமேஸ்வரா
பெற்றபெண்ணாலநானிப்படி பிரலாபப்படலாமோ
யீஸ்வரா-பரமேஸ்வரா
மங்கிலியம்போனபின்பு வையகத்தில்வாழலாமோ
யீஸ்வரா-பரமேஸ்வரா
இங்கிதங்களானசுக மிழந்தபின்புவாழலாமோ
யீஸ்வரா-பரமேஸ்வரா
ஆசைப்பிராணநாதனை அனலாலெரிக்கலாமோ
யீஸ்வரா-பரமேஸ்வரா
ஓசைக்குயில்கிள்ளைகளுறங்கியழுகுதையோ
யீஸ்வரா-பரமேஸ்வரா
மாடகூடங்களெல்லாம் மணியடித்திடுதையோ
யீஸ்வரா-பரமேஸ்வரா
ஆடல்பாடல்சங்கீதம் அடங்கியொடுங்கிப்போச்சே
யீஸ்வரா-பரமேஸ்வரா

வாசல்பாழாயிற்று வாசம்பாழாயிற்றே
ஈஸ்வரா-பரமேஸ்வரா
கேசவன்மைத்துனனென்றபேர் கெட்டுப்போகுதேசிவா
ஈஸ்வரா-பரமேஸ்வரா
மன்னவனில்லா ஜென்மம் வைத்திருந்து மாவதென்ன
ஈஸ்வரா-பரமேஸ்வரா
கன்னியர்களாசையெல்லாம் கணவனிருந்தாலல்லவோ
ஈஸ்வரா-பரமேஸ்வரா
மஞ்சளிழந்து நுதல் வாள்பொட்டுமிழந்தேன்
ஈஸ்வரா-பரமேஸ்வரா
தஞ்சமெனவுன்பாதஞ் சார்ந்தேன் ரட்சித்தருள்வாய்
ஈஸ்வரா-பரமேஸ்வரா

ரதி-சிவனுக்குச்சொல் விருத்தம்.

ஈசனே கயிலைவாழு மிறைவனே யுலகினுளே
நேசமாமதனைத் தக்கால் நிலையிலாமலங்கோபித்து
பாசமார்பின்னையெரித்தாய் பாபமே பாராமல்நீ
தேசுளவழகன்றனையே நீயாகவெரித்தல்லாயோ

வசனம்.

தேவரீரான கயிலாசபதியே என்புருஷனானவர் புஷ்பபாணங்களி னாலே யெய்ததால் நீர் கோபித்து பின்னையென்னபாடம் படிச்சாம்பலாக எரிக்கலாமோ சர்வேஸ்வரனே.

சிவன்-ரதிக்குச்சொல் விருத்தம்.

பெண்களின்மணியேகேளாய் பெருந்தவஞ்செய்தாலஃது
அங்கசனழிக்க விருப்பா யபராதஞ்செய்து
செங்கைகழுவநாந்தய செழுமலரே பாதநாளும்
பொங்கயாழுமற்பன்றனாலே புதல்வனையெரித்தேனம்மா.

வசனம்.

கேளம்மா ரதிதேவி பிள்ளையாருக்குச் சாபமுண்ண நான் செய்துகொண்டிருந்த தவத்தையழித்தபடியினாலே என்னுடைய நெற்றிக்கண்ணாலே எரித்துவிட்டேனம்மா ரதிதேவி

ரதிசொல்-புலம்பல் தரு இ-ம் ஆதி அடதாளம்

பல்லவி.

சங்கரா நீயேயிப்படிச்செய்தால்
நானென்னசெய்வேன்



அநுபல்லவி.

மங்களமானவென் மணவாளனென்றுநீ
மனதினிலெண்ணாமல் மகிழ்ச்சியாயெரித்தீரோ (சங்கரா)

சரணங்கள்.

என்னைப்போற்பெண்களை யேளனஞ்செய்தேனோ
இகல்சுருதிபநாளு மெதிரியானவைத்தேனோ
பின்னைமும்மெயன்றனுமற் பிராணநாதனைக்கண்டு
பித்தமேயெரித்திட்டப் பிழையென்னசெய்தேனோ (சங்க)
அருந்தவருனைத்தப்பி யன்னிதஞ்செய்தேனோ
அரனரிபூசையை யானுமறந்தேனோ
விருந்திலொருகணுக்கு வேறுவேறுகவே
விதித்தமுறைவிட்டேனோ வேறொன்றுசெய்தேனோ (சங்க)
மலர்க்கணையெய்திட மலைமகனொந்ததோ
மன்மதனுடற்செய்த மஞ்சள்போலவெந்ததோ
குலத்திற்பெண்ணொருத்திநான் மங்கல்யமிழந்து
குலைந்தாளென்றநுமானக்குக் குற்றமில்லையோ சத்யம் (சங்க)

சிவன்-ரதிக்குச்சொல்-விருத்தம்.

இப்படிசெய்யலாமோ வென்றநீயென்னைநோக்கி
எப்படிகேட்பாயுன்ற னிறையவன்செய்தகுற்றம்
தப்பனைக்கண்டிருந்து நாற்றசொற்றதென்னையம்மா
செப்பிடுமிவ்வழியைப்பார்த்துச் சொல்லுவாய்சொல்லுவாயே

வசனம்.

கேளாயம்மா ரதிதேவி என்னைப்பார்த்து இப்படிச் செய்யலாமோவென்று எப்படிகேட்டாய் உன்புருஷன் செய்த குற்றம் உனக்குத் தெரிந்திருந்தும் நீ பேசவேண்டிய நியாயமென்ன வந்தவழியைப் பார்த்துக்கொண்டு நடவாயம்மா ரதிதேவி.

ரதி சபையிலுள்ளோர்க்குச்சொல்-கொச்சகம்.

கிட்டிருந்த தேவர்களே தேவேந்திரநாதனே
மட்டில்லாகாரகுருவே மாதவமுனிவர்களே
சட்டமாய்ச்சம்ஹார சாம்பசிவன்சொல்லுவது
இட்டமோவுங்களுக்கு இவ்விதனைப்பிறன்றனுக்கே

வசனம்.

சிருஷ்டி திதியென்னும் இத்தயிரண்டு தொழிலுக்குங் கர்த்தரா கிய தேவர்களேயுந் தேவேந்திரமகாராசனே நாரதமுனியே பிரகஸ்

பதிபக்தர்களே மற்றுமுள்ள ரிஷிகள் தபோதனர்களே இந்தப்பரமசிவனானவர் சொல்லும்படியாகிய நியாயம் உங்களுக்கெல்லாம் இஷ்டமோ சொல்லுங்கள் தேவர்களே.

தேவேந்திரன்-சிவனுக்குச்சொல்-விருத்தம்,

வந்தவழியைப்பார்த்து வல்லிடைப்போகச்சொன்னால்
எந்தனையும்மையல்லாற் சுற்றமும்வேறேயுண்டோ
அந்தமாம்ரதியாள்விம்மி யழுதிட்டாலந்தப்பாவம்
உந்தனைச்சுற்றுமற்ற வொருவரைச்சேர்ந்திடாதே

வசனம்.

கேளும் சுவாமி சாம்பசதாசிவனே மகாவுத்தமியாகிய ரதிதேவியை வந்தவழியைப்பார்த்துக்கொண்டு போகச்சொன்னால் எங்கே போய் முறையிடுவாள் இந்த பூமியிடத்து உம்மைவிட சுற்றத்தார் ஆர் அந்தப்பதிவிரதையானவள் கண்ணீர்விட்டழுதால் அந்தப்பாவம் உம்மைச் சுற்றுமேயல்லது மற்றொருவரையும் சேராது சத்தியமே.

நாரதர்-சிவனுக்குச்சொல்-விருத்தம்.

சித்தரோடியோருவிண்ணப்பங் கைலையிற்பிரமன்வந்தால்
வித்தகன்பிரமனோடுறை விரைவுடனகிள்ளிப்பாவஞ்
சுற்றியேயுழன்றிரங்கினைத் தாத்தியாயறந்த
புத்திரனெனவெண்ணாமற் பொடியாக்கநியாயமுண்டோ.

வசனம்.

கேளுஞ்சுவாமி ருத்திரமூர்த்தி நான் சொல்லும்படியாகிய பேச்சைக் கோபமில்லாமற்கேளும் ஆதியிலே யிந்தப்பிரமதேவனானவர் இந்தக்கைலாசத்துக்குவந்தால் அவரிட ஐந்துசிரசிலே ஒருசிரசைப் பொறாமையினாலே கிள்ளிப்போட்டீர் அந்தச்சிரசானது கையிலே பிடித்துக்கொண்டது அதனாலுமக்குப் பிரமஹத்தியுண்டாகி வெகுகாலம் பூமியிலேதிரிந்து வருத்தப்பட்டீர் அப்போது இந்தவிஷ்ணுவானவர் தம்முடைய பிள்ளையினுடைய சிரசைக் கிள்ளினரே என்றெண்ணாமல் உம்மிட பிரமஹத்தியையொழித்து வருத்தங்களையுந் தீர்த்தார் அப்படிக்கொத்த மகாவிஷ்ணுவினுடைய பிள்ளையென்று சற்றும்பாராமல் மன்மதனையுமெரித்தீர் இப்போது ரதியானவள்வந்து என்புருஷனைப் பிள்ளையென்றுஞ் சற்றும்பாராமல் எரித்துப்போடும்படியாகிய குற்றமென்ன செய்தானென்று கேட்டால் என்னுடைய தவத்தைக்கலைத்துப்போட்டான் அதனாலே மன்மதனை யெரித்துப்போட்டேன் நீ வந்தவழியைப்பார்த்துக்கொண்டு போவென்று சொல்லுகிறீர் முன்னாலே பிரமதேவனிட சிரசைக் கிள்ளினீர் இப்போது மன்மதனையும் எரித்துப்போட்டீர் இது நியாயமோ சத்தியமே.



சிவன்-நாரதருக்குச்சொல்-விருத்தம்

இராகம்-காம்போதி.

நியாயமோவென்றுசொன்ன நாரதாகேளாயிந்த
மாயவன்பெற்றெடுத்த மன்மதனாலேயென்றன்
நேயமாந்தவமழிக்க நீதியோமுறையோவுன்றன்
சாயலுங்கலகமென்ற சமர்த்தையுங்காண்பித்தாயே

வசனம்.

ஆ-ஆ-நாரதா நீசெய்தது நியாயமோவென்றல்லவோ கேட்கிறாய் இந்த மகாவிஷ்ணு பெற்றெடுத்த மன்மதனால் என்னுடைய தவத்தை யழிக்கலாமோ அது நீதியோ அல்லது நியாயமோ இதைநீ யெண்ணாமல் இப்போது முன்பின்நடந்த விர்த்தாந்தங்களைக்குறித்து விவரித்துப்பேசலாமோ இதை நினைக்கலாமோ இந்தப்பூமியிலே உன்னை நாரதன் கலகப்பிரியனென்று சொல்லுவார்களே அதை இந்தச்சபையிலே யிருக்கக்காண்பித்தாய் சபாசு நன்றாயிருந்தது நாரதா.

சிவனுக்குப்-பிரகஸ்பதிசொல்-விருத்தம்

இராகம்-கௌடா.

ஐவேலிநவிலொளித்த வம்போதுகாத்தமாலின்
மெய்மையாற்புதல்வன்றன்னை விழித்தீற்றுதவமழிக்க
செய்துவக்குவன்றன் சாபமுஞ் செவித்ததுமுமாற்கண்டும்
உய்யுமப்படிக்குந்துய்ய வுமர்பதிசொல்லலாமோ

வசனம்.

நாரதன் நியாயங்களைச்சொன்னால் அவனைக் கலகப்பிரியனென்று சொன்னீர் அது இருக்கட்டும் நான்சொல்லுவதைக் கோபமில்லாமற்கேளும் முன்னாலே பத்மாசூரனுக்குப்பயந்து ஐவேலிக்காயிலே யொளித்துக்கொண்டீர் அப்போது இந்த மகாவிஷ்ணுவானவர் அந்த பத்மாசூரனைக் கொன்று உம்மை ரட்சித்தார் அப்படிக்கொத்த மகாவிஷ்ணுவினிட பிள்ளையாகிய மன்மதனை ஆதியிலே யச்சுவமகாமுனியினிட தவத்தை அழித்துவரச்சொல்லி யனுப்பிவைத்தீர் உம்மிட சொல்பிரகாரம் அவரும் போய்த் தவத்தையழித்தார் அந்த யச்சுவமகாமுனியானவர் கண்ணை விழித்துப்பார்த்து மன்மதா நீயேன் என்தவத்தை யழித்தாயென்று கேட்டார் சாம்பசிவனிட உத்தாரவினாலே யும்முடைய தவத்தை யழித்தேனென்று மன்மதன்சொன்னார் சற்றும் பயமில்லாமல் சிவனிட சொல்லைக்கேட்டு என்தவத்தை யழித்தபடியினாலே அந்தச்சிவனிட நெற்றிக்கண்ணினாலே நீயெரிந்துபோகக்கடவதென்று சாபமிட்டார் அந்தச்சாபம் மன்மத

வந்த உம்மாலே தானே வந்தது அது உமக்குத் தெரியாதோ அப்படியிரு க்க இப்போது மன்மதனை யெரித்துப்போட்டு உம்மிட மனதின்பிரகார ம் பேசுகிறீரோ அது என்னஞாயங் கர்த்திவ்யமே.

சிவன்-பிரகஸ்பதிக்குச்சொல்-விருத்தம்.

இராகம்-ஆனந்தபைரவி.

கட்டளைதப்பிவக்குலவ் கொடியசோர்தவங்கள்செய்தான்
விட்டனன்மதனையென்று வெள்ளனைவனுஞ்சாபம்
இட்டனனின்றிக்கென்றன் மெய்த்தவந்தனையழித்துப்
பட்டனனுனக்குப்பிரகஸ்பதியின்னுஞாயமேதோ

வசனம்.

கேளாய் பிரகஸ்பதியே மெய்மெய்யே ஆதியிலே வந்குலமா முனிபா னவன் நானிட்ட கட்டளைதப்பித் தவஞ்செய்ததினாலேயும் இந்தமன்மத னுக்கு அநியாயமாகிய தவங்களை யழிக்கச்சொல்லிக் கட்டளையிட்டிருக்கிற தினாலேயும் மன்மதனை யனுப்பி அவனிடதவத்தையழித்து வரச்சொல் லி யனுப்பிவைத்தேன் இவன்போய் அவனிட தவத்தையழித்துத் தப்பித் துக்கொண்டு வராமாட்டாமற்படிக்கு அவனிடத்தில் சாபம்பெற்றுக்கொ ண்டான் அப்படி அநியாயமாகிய தவத்தையழித்ததினாலே யவ்வளவுசாபம் வருமேயானால் எனைவிமித்தியமாகிய தவத்தை யழித்ததற்கு நானெரிக்க லாகாதா-ஆ-ஆ-நல்லஞாயஞ்சொன்னாய் பிரகஸ்பதி சபாஷ் நன்றாயிருந் தது.

பிர்மா-சிவனுக்குச்சொல்-விருத்தம்.

இராகம்-மத்தியமாவதி.

தேவருக்குமிராட்சதர்க்கும் பகையாநாலுந்
திருவமார்தம்மிலினை காணுமிந்நாள்
காவிருக்குமலர்க்கணைபா லுலகங்காக்குங்
காரணமுண்டானதினாற் றவமழித்தான்
மூவருக்குண்முதல்வனாய் நின்றோனீயே
முருந்தனிடமன்மதனை யெரித்தாற்கேட்டோர்
யாவருக்குமெள்ளமாநகைப்பாரித்த
அபவாதப்பழியுமக்கு ஆகாதையா

வசனம்.

கேளும்சுவாமி பூமியிலே தேவர்களுக்கும் இராட்சதர்களுக்கும் எந் நாளுந்தீராத பகையென்று சொல்லிக்கொள்ளுவார்கள் அவ்வளவேயல் லாமல் தேவர்களுக்குள்ளே இதுவரையில் ஒரு வினைகளும் விளை த்ததில்லை அப்படியிருக்க இப்போது நீர்செய்யும்



படியாகிய தவத்திலெழுந்த அக்கினிச்சுவாலையானது இந்தப் பூமியா தியசகலமுஞ் சுட்டுப் பொசுக்குவதற்காக எல்லாரையும் வருத்தப்படுத்தியதினா லே தேவேந்திரன் முதலாகிய தேவர்கள் மன்மதனிடத்தில் முறையி ட்டுக்கொண்டதினாலே அவர்களுக்கு அபயங்கொடுத்து உம்மிட தவத்தை யழித்தான் அது யாதுகாரணத்தினாலேயென்றால் தவங்க ளினாலே பூமிக்குவருகிறபடியான உபத்திரவங்களைத் தீர்க்கும்படியா கிய தொழில் மன்மதனுக்கு நீர்கட்டளை யிட்டிருக்கிறபடியினாலே அந்தக்கட்டளைப்பிரகாரம் உம்மிடதவத்தை யழித்தான் அதற்கா க முன்மூர்த்திகளுக்கும் முதல்வனாகிய நீரே கோபித்து விசாரணையின் றி யிளையாகிய மன்மதனை யெரித்திரே இதையாலோசனை பண்ணினா ல் தேவர்களுக்குள்ளே இதுவரையிலும் ஒருவினை விளைந்ததுபோற் றோன்றுகிறது போலும் இதைக்கேட்டபேர்கள் சொல்லாநின்று இவனுனவர் மன்மதனுக்கு ஒருதொழிலைக்கொடுத்து அந்தத்தொழிற்பிரகாரம் ம ன்மதன் செய்தால் அவனைப்பெரிதுங் கோபித்து எரித்துப்போட்டார் இ து நல்லஞாயமென்று நகைப்பார்கள் இப்பேர்ப்பட்ட அபவாதப்பழி யுமக்குவேண்டாம் மன்மதனை யெழுப்புமையா சுவாமி.

சிவன்-பிரமாவுக்குச்சொல்-விருத்தம்.

இராகம்-ஆனந்தபைரவி.

செய்தொழிலளித்தோனீயு சேவகத்திறத்தைக்காட்டவ்
மெய்த்தனை விதியோவுன்றன் மேன்மையாக்குமியன்றோ
பைம்முடியரவர்கோடு பொலாமலையில்வென்ற
மைதவழ்கண்டிக் கொழுப்பே மாமலரயனேசொல்லாய்

வசனம்.

கேளும்பிரமாவே நீயொருவனுக்கு ஒருதொழிலைக் கொடுத்து நீ யே அவனையெரித்துப் போட்டலாமோவென்றல்லவோ கேட்கிறாய் ஒரு இராசாவானவர் ஒருத்தனுக்கு ஒருதொழிலைக்கொடுத்தால் அவனிட சேவகத்திலேனும் அந்த இராசாவின்பேரிலேதானே கட்டிவைத்தி யா அல்லது பிராமேசனிட கட்டியென்கிற அனைவமா இந்தப்பூமியா இவத்தமும் பட்டக்கினையினாலே வென்றோமென்கிற மனக்கொழுப் போ சொல்லும்பிரமாவே.

விஷ்ணு-சிவனுக்குச்சொல்-விருத்தம் இ-ம்-ஆனந்தபைரவி.

சொலமாயிடந்திநல்ல குணங்களுண்டாமென்று
தேவருகலகள்சொல்லுந் தருமுறையானையாலே
ஆலவாயிரவிவந்தாள் அங்கசன்றனையெழுப்பிக்
காவியங்கண்ணாள்கொண்ட கவலையைத்திருமையா

வசனம்.

கேளுமையா சம்பசதாசிவ மூர்த்தி ருத்திரதேவியானவள் ந ம்மிடபுருஷனை யெரித்துப்போட்டவிடத்துக்கு நாமென்போகவே ண்டுமென்று கோபமாயெல்லுமல் சுவோசித்துக் கோபமுள்ள இ ருந்தேனேது கேள்வாய் யெல்லுனுமல் குவோசித்துக் கோபமுள்ள டத்திலே நல்லருணாங்களுமுண்டென்று வேதங்கள் முறையிடுகிறதி ருந்தே அதைமலைபில் நினைத்து சம்பரா விட்டிருந்துப்போய் முறையி ட்டாள் நம்மிடபுருஷனை யெழுப்பித் தருவாயென்கிற அவசியமாயி ட்டோ யிதயத்தான் ஆகையால் அரனைச்சாமா அறுப்பதேது நம்மாலல் லாமலிப்படி நீ செய்த குற்றங்களை யெல்லா மனிப்பொறுத்து மன்ம தனையெழுப்பி தரிசிவாத்துசெய்து அநுப்பினையுண்டாகவாயிம்.

சிவன்-விஷ்ணுவுக்குச்சொல்-விருத்தம்.

இராகம்-அசாவேரி,

அரவசெடிமுடிகளக்கு மப்புனிலெத்தாருமாதியாகேனன்
பரமிவனுவேசமபாகனைக் சொல்வதல்லாற் பழியேதுண்டு
அரசனென்று சொல்லுதற் றெய்வநின்று கொல்வதேவ வதிவிரோ
சரசமென்மாய்மேமதனை யெழுப்பவென்றுந் கூடுமோ சாற்றுவாயே

வசனம்,

பெருந்மகைவிஷ்ணுவே தேவேந்திரன் சொன்னதும் நாரதன் சொன்னதும் பிரகஸ்பதிசொன்னதும் பிரமாசொன்னதும் அதிதிரி இப்போது நீர்சொன்னதும் உமக்குத் தெரியுமாரும் நீங்க விந்தியாதி பெருங்கூடி என்பேரில் ஒருபழியைச்சுமத்தி வைத்தீர்கள் இதுமுழி ந்தபூமிக்கு ஆதியானவன்பரமசிவன் அவனேசம்மாரகாலகர்த்தனெ ன்று சொல்வதேயல்லாமல் உம்பேரிலேதானிலும் பழியுண்டா அரச னல்ல வொன்றவன் தெய்வம் நின்றுகொல்ற தென்பது சத்தமறியீ ரோ யாதாமொருவன் ஒருதப்பிதத்தைச் செய்வானானால் அதற்குத்த குமான ஆக்கினை இராசனானவன் விதித்தால் அந்தாசனானவனைக் கொன்றவனல்ல அவன்செய்த தப்பிதத்திற்குத் தெய்வமேகொன்று கொல்லுவித்த ததென்று நினையீரோ அப்படியிருக்க அந்தமன்மதனை நீ ரேகொன்றீரென்று என் பேரில் ஒருபழியைச்சுமத்தி யவனையெழுப் பென்று சரசமாகச்சொல்லுகிறீரோ அதுவுடக்குத்தாமமா அல்லது அவனையெழுப்ப என்னால்கூடுமோ மகாவிஷ்ணுவே,

ரதி-சிவனுக்குச்சொல்-விருத்தம் இ-ம்-முகாரி.

பிள்ளையைத்தின்றுப்பெற்ற பிள்ளையைக்கொன்றுபத்த
பிள்ளைகள் தனையெழுப்பும் பெருமையைப்போல்மதனையெழுப்பேபா



கள்ளம்வேறென்னவிடாமற் கர்த்தனேயெழுப்புமையா
வள்ளல்நீயல்லாலென்னை வாழ்விப்போரில்லையையா

வசனம்,

கேளுஞ்சுவாமி ஆதியிலேசிறுத்தொண்டன்பெற்ற பிள்ளையை யுந் திண்டிர் நக்கனிடயாகத்திலே யும்மிடபிள்ளையையுங் கொன்றீர் களும் திண்டிர் நக்கனிடயாகத்திலே யும்மிடபிள்ளையையுங் கொன்றீர் மறுபடியும் அந்தப்பிள்ளைகளை யெழுப்பி விட்டதுபோலவே மன்ம தனையெழுப்பாமல் என்பிராணநாதனை யெழுப்பும் உமக்குமல்லாமல் வேறுயாராவது ரட்சிப்பவர்கள் யாரையா சுவாமி

சிவன்-ரதிதேவிக்குச்சொல்-விருத்தம்,

இராகம் ஆனந்தபைரவி,

வைரத்தனிர்மேனியானே படிமிசையென துப்பய
செத்துமுத்தகையுறுள்வெந்துசெத்தவர் பிழைத்ததுண்டோ
கொத்தலர்மாலைத்தோள்ளான் கொழுப்பிறுலைதிந்துபோனான்
சத்துநாலாவதென்ன வத்தனையுமுளனை செய்வாயே

வசனம்.

கேளுமம்மா ரதிதேவி இந்தப்பூமியிலே வெல்விட செத்திக்கண் ணுலேவைத்து இறந்துபோனவர்களில் மறுபடியும் பிழைத்தவர்களு ண்டா பிழைத்தவர்களில்லையே மேலும் உன்புருஷனானவன் நெற்றிக் கண்ணிலே யெரிந்துபோய்விட்டால் அதற்கு நாமென்னசெய்வே னம்மா ரதிதேவி.

ரதி-புலம்பல்-ராக-இ-ம்-நீலாம்புரி,

தாளம்-திரிபுடை,

அப்பாமப்பனையா ஆண்டவனேதஞ்சமையா
அமலசொரூபனே விமலநிருபனே
உமையாள்சொரூபனே யுமையாள்பாகனே
ஆதிமனதப்பொருளானே ஐயனேநிறைமெய்யனே
நித்யமங்களவானே நிதனேநிதிப்போதனே
நெடியகடலுலகினிலே யவனைப்போல்
வடிவினரிலையார் வசையன் சொல்லுவாரே
நேசனேயெனைப்பிரிப்பாய் நித்தனேயெவர்க்குங்கர்த்தனே
காவியில்லாப்பெண்ணென் றென்னைத்
தள்ளினதென் சிவேசுவரரே

சர்ப்பமிதைத்திட வைப்பேன்மலரடியை
நம்புமடியாளை வெம்பவையாதே
சரணமகிலயஸ்சகை சரணப்பாலித்திடப்போகிப்பாய்
சங்கரனே வெள்ளிமலை தம்பரமே வாரிவெல்லைலயல்லாவ்
சூலதிரனிலேவை நடனம்விலகீட
வருள்புரிபவ ளேவர்களையலே
சந்திரனெழுப்புவையா
நானுமே அடியாள்காணுமே

சிவன்-ரதிக்குச்சொல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

தும்பலத்தோள்புன்றன் அங்கசப்தியென்பன்றுற
சாம்பலாய்வெந்ததாலே ரட்சைமோகராகம்பா
காம்பிரமாகவென்றன் மன்றுக்குவுருவாய்காணத்
தேம்பிடாதெழுப்புவேனியான் தேசந்தோர்காணுமே

வசனம்.

ரெண்டாம்மா ரதிதேவி உன்புருஷன் சாம்பலாயெரிந்துபோன படியிருப்பதினாலப்படி சரீரம் வராமட்டாது அதையால் நுன்கண்ணுக்கு மாத்திரம் ரூபத்தோடும் மற்றபேர்களுக்கெல்லா மரூபமாயிருக்கவும் எழுப்பிக்குகிறேன் நீ விசனப்படாதே யிரும்மா ரதிதேவி

இரதி-சிவனுக்குச்சொல்-விருத்தம்,

சரணஞ்சரணஞ்சாம்பசிவா சரணஞ்சரணமுமைபாகா
சரணஞ்சரணங்காலகண்டா சரணஞ்சரணந்திரிநேத்ரா
சரணஞ்சரணமதுரனே சரணஞ்சரணம்பக்தர்களித்தக்
சரணஞ்சரணம்பரிய்பரத்தும் சரணஞ்சரணமெழுப்புமையா.

வசனம்.

சரணஞ்சரணம் அகத்திலேயிருக்கிற ஏழுப்பிடமனதின்படியாக என் புருஷனை எனக்குமாத்திரம் பதிவிபடியாக என்னிட பிராணநாதனைப் பார்க்கவேணும் சீக்கிரமாயெழுப்புஞ்சுவாமி.

சிவன்-வைரவனுக்குச்சொல்-கவி,

வாசீர்ந்தமேசாந்திரிதம்.
வைரவனே நீபோய்வர்
கோரதந்திரமே
சிம்ஹசியிலேச்செய்வாய்.



வைரவன் சிவனுக்குச்சொல் வசனம்

அப்படியேயழைத்து வருகிறேன்சுவாமி.

நந்திவருகிற-பொருவிருத்தம்-இ-ம்-மத்தியமாவதி

அங்கசன்றனையெழுப்ப அரவபூஷணனுந்தம்மித்
பொங்கியமகிழ்ந்து புண்ணியனழைத்தானென்று
சங்கரனரனே நுய்ய தாளிலப்பொருளேபச்சை
நங்கையேபாகவென்று நந்திகேஸ்வரரும்வந்தார்

நந்திவருகிற-தரு-இ-ம்-புன்னாகதோடி-தாளம்-ஆதி

பல்லவி.

நந்திவந்தனரே-சிவன்பொதுவில்-நந்திவந்தனரே

அநுபல்லவி.

அந்திவானப்போன்ற அத்தன்சபைதனில்
அரகரசிவவென்று அடிதொழுதெதிரினில்-நந்தி

சரணங்கள்.

சோமனுமெருக்கும்-கங்கையும்தய்யநுமுடிக்கும்
காமனுமுல்லசிக்க வல்லவிர்லிரு (நந்தி)
காமன்றனையெரித்த-கர்த்தனைதிவரு
பிட்டுக்குமண்சுமந்தோன்-பாண்டியன்கைப்
பிரம்படியும்பட்டோன்
இஷ்டமாகியென்ற விருமனகிலிருக்கும்
சுமத்தாடியான நசன்மனகுவைக்கும்(நந்தி)
அரனரியயனித்திரன்-முனிவர்கள் அமரர்குழவுநத்திரன்
திருவைறயினைசொல்லும் திகழும்வினைமுனிபோத
தேவர்மாதவாறுமுற திருக்கொலுவினிலிதோ (நந்தி)

நந்தி-சிவனுக்குச்சொல்-போற்றிவிருத்தம்.

நந்திமாமுகனைப்பெற்ற தயாபராபோற்றிபோற்றி
சிந்தையாமுனிவர்தேவர் சிறாதனக்கள்கூறு
முந்திரின்சபைக்குத்துய்ய முத்தனேமகிழ்ச்சிகூர்ந்து
அத்தனேபணிந்தேசிறியப்புவீர்போற்றிபோற்றி.

வசனம்.

சரணஞ்சரணஞ் சுவாமி என்றனையழைப்பித்தகாரியம் அருளிச்செய்யவேணுஞ்சுவாமி.

சிவன்-நந்திக்குச்சொல்-விருத்தம்,

நந்தியேவாழிவாடா நலமுளமதனெரித்த
அந்தரச்சாம்பலெல்லாம் அழக்குடன்குவித்துத்தப்ப
சந்தநற்சலந்தெளித்துக் கருமந்திரங்கள்சொல்லி
இந்தவல்பிரம்பர்த்தட்டி யெழுப்பிநீவருகுவாயே

வசனம்.

அடாவாடா நந்தி மன்மதனெரித்த சாம்பலெல்லாங்குவித்து மந்திரங்கள் சொல்லிச்சலந்தெளித்து இந்தப்பிரம்பால்தட்டி யெழுப்பிவாடா நந்தி.

நந்தி-மன்மதனையெழுப்புதற்குச்சொல்-தவி.

சிவப்பொருளே
உயிர்க்கத்தாராய்
எழிலாமன்மதா
எழுந்திரெழுந்திராய்

மன்மதனெழுந்த பொருசந்தவிருத்தம்-இ-ம்-பந்துவராளி,

சகளனோத்தித்திரந்திவனைத்துளை வாடியலர்ந்தேர்த்தது
தேகமிருந்துளவுருவுவரும் நடல் தேவர்மகிழ்ந்திடவே
பாசம்முந்திரிஞானமொழிந்திடப் பாவையின்கண்களிக்க
மாகதரந்துபிரகாசமெழுந்தரு மாரனெழுந்தானே

கட்டியக்காரன்சொல் வசனம்.

அதோகொதப்படியென்றால் ஈஸ்வரராவவர் சொன்ன மாத்திரத்தில் நந்திகேஸ்வரராவவர் அந்தச்சாம்பலெல்லாங் குவித்து ஒருவாசகஞ்செய்து மந்திரங்களைச்சொல்லிச் சலத்தைத்தெளித்துப் பிரம்பாலே தட்டினமாத்திரத்தில் மன்மதனுக்கு உயிர்வந்து அருமையாயெழுந்து தன்மனையாளாகிய ரதிதேவியைப்பார்த்து சந்தோஷித்துச் சொல்லுகிறவிதங்காண்க.

மன்மதன்-ரதியைநோக்கிச்சொல்லுங்கொச்சகம்.

காளமேகக்குழலே சந்தகந்தமாகக்கொடியே
தேவேசனிரதமே தெவிட்டாதவென்னமுதே
இதுநாளைவிட்டு இங்கவகைதன்னில்வந்து
மானேநீயிந்த வகையெனக்குச்சொல்வாயே



வசனம்.

ஆ-ஆ-ஆ பெண்ணே ரதிதேவி நீதாமீக நாளைவிட்டு இந்தவகைக்கு எந்தகாரியமாக வந்தாய் வந்தகாரியத்தை யெனக்குத் தெரியச்சொல்லுவாய்பெண்ணே.

இரதி-மன்மதனுக்குச்சொல்-கொச்சகம்.

ஈசனிடங்கொண்டநீ யெரிந்ததனையான்கேட்டும்
பாசமாயோடிவந்து பரமனடிபணிந்தேன்
நேசலவுமுன்மைத் திரும்பவெழுப்பிவைத்தோன்
வாசமலர்ப்பதமேய வணங்குவோம்வாருமையா

வசனம்.

கேளும் என்பிராணநாதா நீர் ஈஸ்வரனிடங்கண்ணினாலே யெரிந்துபோனதைக்கேட்டுப் பரமசிவனிட பாதத்திலே பயமென்றுவிழுந்தேன் அவர்கிருபைசெய்து உம்மை யெழுப்பினார் ஆகையால் அவர் பாததரிசனஞ்செய்வோம் வாரும்பிராணநாதா.

மன்மதன் போற்றுதல் விருத்தம்.

இ-ம்-புன்னாகவராளி.

நந்தனேபோற்றிபோற்றி நவன்றிடாப்பொருளேபோற்றி
முத்தனேபோற்றிபோற்றி முராரியேபோற்றிபோற்றி
த்தியலோகம்வாழும் சயம்பெரவனேபோற்றி
த்திவியுமையேபாத பங்கயம்போற்றிபோற்றி

மும்மூர்த்திகளும்-மயேஸ்வரியும்-வாழ்த்துகிற விருத்தம்.

இராகம்ஆனந்தபைரவி.

வீரமும்வாழிவாழி வெண்மதிக்கொடையுங்வாழி
சிருங்கரும்பும்வாழி திருமலர்க்கணையுங்வாழி
மாருதத்தேருங்வாழி மன்மதப்படைகள்வாழி
மாரனும்ரதியென்றாரும் மருவியேவாழிவாழி

ரதி-போற்றுதல் விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

குவெண்ணிறத்தாய்போற்றி சகாசிவப்பொருளேபோற்றி
ங்கையைச்சிரசில்வைத்த கர்த்தனேபோற்றிபோற்றி
ங்கில்பிட்சைதந்த மகாதேவாபோற்றிபோற்றி
ம்பலாட்டத்தாடும் இறைவனேபோற்றி

சபேசன்-வாழ்த்துவிருத்தம்.

இருளெலாம்வென்றதுய்ய இருட்குதிர்குழலேவாழி
மருளெலாம்வென்றழுந்த மந்திரப்பதியேவாழி
பொருளெலாம்வென்றஞான பெரும்பத்துணைநேமிவாழி
தெருளெலாம்வென்றமாறன் செல்வியும்வாழிவாழி

சபேசன்-மன்மதனுக்குச்சொல்லுவிருத்தம்.

சித்தசபதியேயுந்தன் செய்தொழிலெல்லாங்கேளாய்
குத்திரதிசைபுரிந்தான் கொண்டதாலெரித்தேனப்போ
பத்திமிமுகத்தைப்பார்த்துப் பரிந்துனையுயிரளித்தேன்
நித்தியதவஞ்செய்யும் நிலையினைக்கலைத்திடாதே

வசனம்.

அப்போமன்மதா உலகத்தில் அநேகமாகிய தவத்தை யழிச்சுக்கொண்டு ஸ்வுவிட்ட பெண்ணுடைய ரதியானவள் தவத்தை அழித்தபடியினாலே யுன்னை யெரித்தேன் இப்போது இரதியின்னுடைய முகத்தைப்பார்த்து உன்னையெழுப்பினேன் இனிமேல் இப்படிக்கொத்த தொழில்செய்ய வேண்டாம் பத்திரமாயிருபோய்வா மன்மதா.

பொதுச்-சந்தவிருத்தம்-இ-ம்-மோகனம்.

மாரனுயிர்ரதியுங்கைலைவிட்டுத் தன்னளவிலுதகவாத்து
சிறுனமெயாளியிருப்பவபல்நகரவே செறியசியிரநேமலி
நாரியர்நடமிட்டிசையாடிமொழு நவிலப்பவினைமுறுக்க
ஆரணவிதிவைமுறுபுவியிலேவா மாகுசெழுந்தனரே.

வாழிவிருத்தம்.

சந்த்ரமிருமன்மதவிலாசம்வாழி
அமிமதிபுனைதிருமேகள்தேவர்வாழி
வித்தைமிருதாரீமிக நகரம்வாழி
மின்சொற்பாவிரதியொடுமேவர்வாழி
சித்தமிரு மித்ராமயர்விலிட்ட
கமலாலயவிலாசம் வாழிவாழி.

மன்மதவிலாசம்
முற்றுப்பெற்றது.